

KALKI 1.1.89 ரூ. 2.

கல்கி





பூச்சூடி
புன்னகை
பூக்கும்
வெண்ணிலா!
அனைத்து
ரகங்களுக்கும்
20%
பொங்கல்
சிறப்புத்
தள்ளுபடி
ஹேண்ட்லூம் ஹவுஸ்
(முழுவதும் ஏர் கண்டிஷன்) மத்திய அரசு ஆதரவு பெற்றது.
7, ரத்தன் பஜார், சென்னை 600 003.
134, பேலஸ் ரோடு (LIC பில்டிங்) மதுரை 625 001.
101-C திவான் பகதூர் ரோடு, R.S. புரம், கோயம்புத்தூர் 641 002.
ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் விற்பனை உண்டு.



மோசடி மன்னர்களை மோதி மிதித்திடுங்கள்!

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

"நல்ல வேட்பாளர்களைத் தேர்ந்தெடுங்கள்!'' என்று சில நல்லவர்கள் குரல் கொடுக்கிறார்கள். அது போதுமா? அது நாம் விரும்புகின்ற பலனை — நல்லாட்சியைத் தருமா? இதுதான் நம் முன் உள்ள 'ஆயிரம் டாலர்' கேள்வி.

இருநூற்று முப்பத்து நான்கு சட்ட மன்றத் தொகுதிகளிலும், மனச் சாட்சிப்படி நடப்பவர்களும், சத்திய நெறிகளைக் கடைப்பிடிப்பவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால் பிரச்னை இல்லை. இந்த நல்லவர்கள் தங்களைப் பிரதிபலிக்கும் ஒரு நல்லவனைத் தேர்ந்தெடுப்பார்கள். அவன் கீழ் செயல்படுவார்கள். நாடு தானாகவே நலம் பெறும்.

ஆனால் அப்படி நடப்பதற்கான சாத்தியம் இன்று இல்லை. ''பழைய பெருச்சாளிகளை எல்லாம் நிற்க வைக்கப் போவதில்லை!'' என்று முழங்கும் தலைவர்கள் கூட என்ன செய்யப் போகிறார்கள்? 'பழைய பெருச்சாளிகளை வெளியேற்றி விட்டுப் புதிய பெருச்சாளிகளை உள்ளே விடலாம்' என்றுதான் திட்டம் போடுகிறார்கள். இவர்களது கட்டளைக்குக் கீழ்ப் படிந்து நடக்கின்ற ஒரு புதிய கூட்டத்தை உள்ளே விடுவதுதான் இவர்கள் நோக்கம். ஆட்களின் முகங்கள்தான் மாறுபடுமே தவிர கட்சித் தலைவர்கள் மாறப் போவதில்லை. அவர்களது ''ஒரிஜினல் குணங்கள்'' மாறப் போவதில்லை, நீடிக்கும்.

மேலே எப்படிப்பட்ட தலைமை இருக்கிறதோ, எப்படிப்பட்ட தலைவர் இருக்கிறாரோ — அதற்கேற்றபடிதான் நிர்வாகத்தின் தன்மை அமையும். ஊழலிலும், லஞ்சத்திலும், வஞ்சம் தீர்க்கும் மனோபாவத்திலும், ஊறிய ஒரு மனிதர் தலைவராக வருகிறார் என்றால் ஊழலும், லஞ்சமும், கொடுமையும்தான் கடைசி வரை நிலவும். இத்தகையவர் தமது செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள அதிக சிந்தனையைச் செலவிடுவாரே தவிர, நாட்டைப் பற்றி அதிகம் அக்கறைப்பட மாட்டார். நல்லொழுக்கம் இல்லாத தலைவர்களையும் பொருளாதார ஞானம் இல்லாத தலைவர்களையும் மேலே வைத்து விட்டு, கீழே வாழ்க்கை நெறிகள் தாழ்ந்து போய் விட்டனவே என்றோ, நாடு பொருளாதாரத்தில் வீழ்ந்து விட்டதே என்றோ புலம்புவதில் எந்த அர்த்தமும் இல்லை. ஆகவே தலைமையில் யார் இருக்கிறார்கள் என்பதுதான் மிக மிக முக்கியம்.

எத்தகைய நல்ல வேட்பாளர்களை நாம் தேர்ந்தெடுத்து அனுப்பினாலும் அவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்குள் நடந்து கொள்ள வேண்டுமே தவிர, சுதந்திரத்துடனோ, மனச்சாட்சிப்படியோ நடந்து கொள்ள முடியாது. இப்படித்தான் நிலைமை இன்று எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறது. ''தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் நான். நாட்டு நன்மைதான் எனக்கு முக்கியம்'' என்கிற உணர்வுகளுடன் — பிற நாடுகளில் செயல்படுவது போல — இங்கே இவர்கள் செயல்படுவதில்லை; செயல்படவும் முடியாது. இதற்கு முக்கிய காரணம் கட்சித் தலைவர்களது சர்வாதிகார மனப்பான்மையும், ஜனநாயகத்தைப் பற்றிய தேர்ந்த அறிவு கட்சித் தலைவர்களிடமும் பொது மக்களிடமும் இல்லாததுதான்.

எதிர்த்துப் பேசும் கட்சிக்காரர்களின் கைகளை முறுக்குகிறார்கள் கட்சித் தலைவர்கள்; அல்லது அவர்களை ஒதுக்குகிறார்கள்; அவர்கள் ஏதும் செய்ய முடியாதபடி அவர்களது முக்கியத்துவத்தைப் பறிக்கிறார்கள். எனவே, 'நமக்கேன் வம்பு' என்று கட்சிக்காரர்கள் தலைவர்களுக்கு ஜால்ரா

போடுகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலையில் மக்கள் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்ய முடியும்?

ஜனநாயக மனோபாவமற்ற கட்சித் தலைவர்களை, சுயநலமிகளான கட்சித் தலைவர்களை, மோசடி மன்னர்களை பொது வாழ்விலிருந்து அகற்ற வேண்டும். நமது வாக்குரிமை மூலம் அவர்களைத் தோற்கடிக்க வேண்டும். அப்படி அவர்கள் தோற்கடிக்கப்படும் போது பல்வேறு கட்சிகளிலும் புதிய தலைமை உருவாகும். கட்சிகளில் புதிதாகப் பொறுப்பேற்கும் தலைவர்கள், "ஓ, மக்கள் விழித்துக் கொண்டார்கள்! நமது ஆணவம் மக்களிடம் இனி செல்லுபடியாகாது. எனவே நாம் ஜாக்கிரதையாக இருந்து நல்ல பெயர் எடுக்க வேண்டும்" என்று உணர்வார்கள்.

எனவே, நல்ல வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதை விட மிக முக்கியமானது, கறை படிந்த அமைச்சர்களை, முதல்வர்களை, வாரியத் தலைவர்களை, எம்.எல்.ஏக்களைத் தோற்கடிப்பது. இவ்வாறு இவர்கள் தோற்கும் போது அவர்களுக்குப் பதில் புதிய நல்ல தலைவர்கள் உருவாவார்கள்.

அநியாயக்காரர்களை — ஊழல் சந்தேகப் பேர்வழிகளை — மக்கள் தோற்கடிப்பது புதிய விஷயமல்ல. உலகம் பூராவிலும் நடந்திருக்கிறது. சிறந்த புதிய தலைமை உருவாக வழி வகுத்திருக்கிறது. வாக்குரிமைச் சீட்டை வைத்து இத்தகைய மகத்தான மாற்றத்தை நாட்டில் நாம் ஏற்படுத்த முடியும்.

அக்கிரமம் என்பதை உணர்ந்தும் அக்கிரமத்திற்கெதிராகச் சன்னக் குரலைக் கூட எழுப்பாதிருப்பவர்கள் அக்கிரமத்துக்குத் துணை போகிறவர்கள்தான். அக்கிரமம் செய்வதும், அக்கிரமத்துக்கு உடந்தையாக இருப்பதும் ஒன்றே.

மகாபாரதப் போரைக் கவனியுங்கள். "நாம் ஐந்து பேர்தானே இருக்கிறோம். கவுரவர்கள் நூறு பேர் இருக்கிறார்களே. அவர்களுக்கு ஆண்டவன்தான் புத்தி புகட்ட வேண்டும்!" என்று பாண்டவர்கள் சும்மா இருக்கவில்லை. அக்கிரமத்திற்கெதிராகப் போராடினார்கள். அக்கிரமத்தை அழிக்கப் புகும் போது இவ்வுலகின் மாபெரும் சக்தி நல்லவர்களுக்கு உதவுகிறது. இதுதான் சத்தியம். ஆனால் நல்லவர்கள் தீமையை ஒழிக்க முன் வராத போது அந்த மாபெரும் சக்தி தானாகவே வந்து நியாயத்தை நிலைநாட்டுவதில்லை. மகா பாரதப் போரில் ஒரு நொடியில் எல்லாவற்றையுமே அழித்து விடும் ஆற்றல் படைத்த கிருஷ்ண பரமாத்மா தாமே தாக்குதலை நடத்தவில்லை. நியாயத்தை ஊக்குவித்து அர்ஜுனனைப் போரிடச் செய்ததைப் பார்க்கிறோம்.

நாம் போற்றுகின்ற காவியங்கள் எல்லாம் கூறுகின்ற மகத்தான உண்மை இதுதான்: "அநீதியைப் பார்த்துக் கொண்டிராதே! எதிர்த்து நில். போரிடு. அதுதான் சத்தியப் போர். உண்மை வெல்லும். உன்னால் முடியும்!" திரும்பத் திரும்ப இதைத்தான் சொல்லுகின்றனவே ஒழிய "தீயவனைக் கண்டு அஞ்சு. ஓடி ஒளிந்து கொள்" என்று அவை கூறவில்லை.

இதனை இந்தத் தேர்தல் சமயத்தில் நாம் உணர்ந்து செயல்பட வேண்டும். தீய சக்திகள் மனித உருவில், தலைவர்களாகவும் தலைவிகளாகவும் வரும் போது அவர்களை எதிர்க்க, தோற்கடிக்க, அகற்ற வோட்டுப் போடுவதன் மூலம் கூட நாம் முயலவில்லை என்றால், நம்மை விடக் கோழைகள் வேறு யார்? ஜனநாயகத்துக்கு நாம் லாயக்கில்லை என்பது மட்டுமல்ல; மனிதன் என்று சொல்லிக் கொள்ளக் கூட அருகதையற்றவர்கள் ஆவோம்!

தேர்தலில் ஒரு கட்சி அதிக இடங்களைப் பெறுவதும் வேறு ஒரு கட்சி குறைந்த இடங்களைப் பெறுவதும் இயல்பு. பெற்று விட்டுப் போகட்டும். ஆனால் முக்கியமான விஷயம், எல்லாக் கட்சிகளிலும் ஊழல் தலைவர்கள் மக்களால் தோற்கடிக்கப்பட வேண்டும்; அதன் மூலம் மக்களை எஜமானர்களாக மதிக்கிற, அடக்கமுள்ள, நாணயம் மிக்க புதிய தலைமை தோன்ற வழிவகுக்க வேண்டும்.



அடுத்த இதழில்...

இரும்புத் திரை இளகுகிறதா...?

— கவர் ஸ்டோரி

மில்லியன் டாலர் ஜனாதிபதி!

ஜனவரி மாத மத்தியில், அமெரிக்காவின் நாற்பத்து ஒன்றாவது ஜனாதிபதியாய்ப் பதவி ஏற்கவிருக்கிறார் ஜார்ஜ் புஷ். அவரைப் பற்றி:

ஜார்ஜ் ஹெர்பெர்ட் வாக்கர் புஷ் — இதுவே புஷ்ஷின் முழுப் பெயர். ஓர் உதவி ஜனாதிபதி, தேர்தலில் ஜெயித்து ஜனாதிபதியாவது 1836 — க்குப் பின் இப்போதுதான் அமெரிக்காவில் நடந்துள்ளது. வயது 64.

புகழ்பெற்ற பிலிப்ஸ் அகாடமி என்ற பள்ளிக்கூடத்தில்தான் ஜார்ஜ் புஷ் படித்தார். ரொம்பவும் சுறுசுறுப்பான மாணவர். மாணவர் கவுன்சிலுக்குச் செயலாளராயும், பள்ளிக்கூட பேஸ்பால் அணி கேப்டனாயும் இருந்ததால், பள்ளிக்கூடத்தில் ரொம்ப பாபுலர்.

பள்ளி இறுதி வகுப்பில் இவர் படித்துக் கொண்டிருந்த போது, அமெரிக்கா, இரண்டாம் உலகப் போரில் தீவிரமாய் இறங்க, தமது பதினெட்டாவது பிறந்த நாளன்று, கடற்படையில் சேர்ந்தார். கடற்படை இவரை விமானப் பயிற்சிப் பள்ளிக்கு அனுப்பியது. அந்நாளில் இவர்தான் அமெரிக்கக் கடற்படையில் மிகக் குறைந்த வயதுடைய விமான பைலட்.

பசிபிக் மா கடலில், விமானம் தாங்கிக் கப்பல் ஒன்றில் பணியாற்றினார். மூன்று பேர் செல்லும், ஒற்றை எஞ்சின் கொண்ட விமானத்துக்குப் பொறுப்பேற்று, ஜப்பானிய தகவல் மையத்தில் குண்டு வீசப் போனார். அப்போது எதிரி விமானம் தாக்கியதில் இவரது விமானம் தீப்பிடித்துக் கொண்டது. புகையில் மூச்சுத் திணறினாலும் 225 கிலோ குண்டுகள் நான்கை, இலக்கைக் குறிபார்த்து வீசி விட்டு, சகாக்கள் இருவரையும், பாராசூட் மூலம் குதிக்கச் சொல்லி விட்டு, தாமும் குதிக்க முயன்றார். பாராசூட், விமானத்தின் வால் பகுதியில் சிக்கிக் கொள்ளக் கடலில் விழுந்தார். சமாளித்துக் கொண்டு, ரப்பர் தெப்பத்தைப் பற்றியபடி நீந்தி, அதிர்ஷ்டவசமாக அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பலின் உதவியால் உயிர் தப்பினார். ஆனால் இவருக்கு முன் குதித்த சகாக்கள் இருவரும் உயிர் பிழைக்கவில்லை. கப்பற் படையில் இருந்த போது சுமார் 1300 மணி நேரம் விமானத்தில் புஷ் பறந்திருக்கிறார்.

1942 கிறிஸ்துமஸ் சமயத்தில் ஒரு டான்ஸ் பார்ட்டியில் பார்பரா பியர்ஸ்ஸைச் சந்தித்தார். காதல் மலர்ந்தது. இரண்டாண்டுகளுக்குப் பின் திருமணம் நடந்தது. இப்போது அவர்களுக்கு நான்கு பிள்ளைகள், ஒரு பெண், பத்துப் பேரக் குழந்தைகள்.



* புதிய அமெரிக்க ஜனாதிபதி



* கடற்படை விமானியாக....

யுத்தம் முடிந்த பிறகு சில நிறுவனங்களில் சம்பளத்துக்கு வேலை செய்தார். அனுபவம் பெற்றுச் சொந்தமாய் வர்த்தகம் தொடங்கிச் செழித்தார். பெட்ரோலியம் எண்ணெய்க் கிணறுகள் இறக்கி கொழித்தார். 64—இல் அரசியலில் புகுந்தார். இங்கு மேடு, பள்ளங்களை நிறையவே சந்தித்தார். ஆனால் மனம் தளரவில்லை.

ரேகன், ஐக்கிய நாடுகள் சபைக்கு அமெரிக்காவின் தூதுவராய் புஷ்ஷை நியமித்தார். அதன் பின் பல பெரிய பொறுப்புகள் வந்தன. சீனாவில் அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றினார். அப்போது இவரும் இவர் மனைவியும் சைக்கிளிலேயே தலைநகர் வீதிகளில் சுற்றி வருவார்கள்!

இரண்டாண்டுகள் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ. இயக்குனராகவும் இவர் இருந்திருக்கிறார்!

இன்றைய தினம், ஜார்ஜ் புஷ்ஷின் சொத்து மதிப்பு எவ்வளவு தெரியுமா? 1.8 மில்லியன் டாலர்கள்! பத்திரிகையாளர்கள், ''பரம்பரைப் பணக்காரரான உங்களால் ஒரு சராசரி அமெரிக்கனின் பிரச்னைகளை எப்படி புரிந்து கொள்ள முடியும்?'' என்று இவரைக் கேட்பதில்லை. கேட்டால், 'அசட்டுக் கேள்வி' என்று எரிச்சலடைவாராம் புஷ்!

— ஸி. எம்.

சாமியே சரணம் சரணம் ஐயப்பா!

"இப்போதெல்லாம் சபரிமலைக்குப் போவது என்பது ஒரு ஃபாஷனாகி விட்டது'' என்று சிலர் கமெண்ட் அடிக்கிறார்கள். ஆனால் இது ஓரளவுக்குத்தான் உண்மை. வருடந்தோறும் சபரிமலைக்குப் போகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்த வருடமும் பத்து லட்சத்தைத் தாண்டும் என்றார் ஒரு குருசாமி. போகிறவர்களில் மிகப் பெரும்பான்மையினர் பக்தி சிரத்தையோடுதான் போகிறார்கள்.

கடினமானதாய்க் கருதப்பட்ட சபரி மலைப் பயணம், இப்போதெல்லாம் சுலபமாகி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். நெடும் நடைப் பயணம் என்பதெல்லாம் இப்போது இல்லை. 'பம்பா' வரை நல்ல ரோடு போட்டு விட்டார்கள். அதனால் பஸ், கார், வேன் என்று எதில் வேண்டுமானாலும் பம்பா வரை சௌகரியமாய்ப் போகலாம். அங்கிருந்து சுமார் நான்கைந்து கிலோ மீட்டர் தூரம் மட்டுமே நடை. இதில் முதல் பாதி பெண்டு நிமிர்த்தி விடும். வியர்வை பெருகும்; மூச்சு வாங்கும்; கால்கள் கெஞ்சும். சௌகரியமாய் ஏற நல்ல படிகள் கிடையாது. சில இடங்களில் கற்படிகள் இருந்தாலும் பெரும்பாலும் மண் சரியாதிருக்கக் கட்டைகள் அடிக்கப்பட்ட மண் படிகளில்தான் ஏறிப் போக வேண்டும். வழிநெடுக, ''சாமியே... ஐயப்பா! ஐயப்பா... சாமியே! கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை; குண்டும் குழியும் — கண்ணுக்கு வெளிச்சம்; யாரைக் காண? சாமியைக் காண! சாமியைக் கண்டால் — மோட்சம் கிட்டும்'' என்று பலவித சரண கோஷங்கள் சொல்லியபடி சாரி சாரியாய் மலையேறும் பக்தர் கூட்டத்தைக் காணுகையில், மனம் புத்துணர்ச்சி பெறுவது நிஜம். கால் வலிக்கும் குழந்தைகள், அப்பாவின் தோளில் உட்கார்ந்து கொண்டு, உற்சாகமாய்க் கோஷமிடுவதும் சகஜமான காட்சிதான்.

* ''கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை!''



மலை ஏறும் போதும், இறங்கும் போதும் பஸ் கண்டக்டரின் விசில் சத்தம் போல, விடாமல் ஒலித்துக் கொண்டிருந்தால், யாத்திரிகர்கள் விலகி 'டோலி'களுக்காக வழிவிட வேண்டும். பிரம்பு நாற்காலியின் இரு பக்கவாட்டிலும், நீண்ட கழிகளைக் கட்டி, நான்கு பேர் சேர்ந்து, நடக்க முடியாதவர்கள், முதியவர்களை உட்கார வைத்துத் தூக்கிக் கொண்டு போகும் சாதனம்தான் 'டோலி'. அதைச் சுமக்கும் தொழிலாளர்கள் ஒரே நாளில் ஐந்தாறு தடவை மேலுக்கும் கீழுக்குமாய்ப் போய் வருவார்களாம். சாதாரணமாய் ஒரு டிரிப்புக்கு ரேட் இருநூறு முதல் முந்நூறு வரை. ஜோதியின் போது கூட்டம் அதிகம். மேலும் கீழும் அதிக நடை போட முடியாது. அதனால் ரேட் உயரும்.

'பம்பா' நதிக்கரை சபரி மலைப் பயணத்தில் மிக முக்கிய இடம். நடுப் பகலிலும், ஐஸாய் ஜில்லிடும் பம்பா நதித் தண்ணீரில் மூழ்கி எழ வேண்டியதென்பது மலையேறும் முன்பும், இறங்கி வந்த பின்னும் கட்டாயம். தண்ணீரில் மூழ்கும் போது, தப்பித் தவறிக் கூட வாய்க்குள் தண்ணீர் புகுந்து விடக்



• பம்பாவில் ஒரு முழுக்கு

கூடாது. ஜாக்கிரதை! அத்தனை அழுக்கு மிதக்கும்!

மலைப்பாதையின் பல இடங்களிலும் வழக்கமான அசைவ ஓட்டல்கள், சைவச் சட்டை போட்டுக் கொண்டு, ஐயப்ப பக்தர்களை வரவேற்கின்றன. திடீரென்று தோன்றிய டீ, காப்பி, ஐஸ் விற்கும் கடைகளும் உண்டு. கால் வலிக்கு, ரெஸ்ட் எடுக்க அங்கே உட்கார்ந்தால், சிறிது நேரம் கடைக்காரர் சும்மா இருப்பார். அப்புறம் "என்ன வேண்டுமென மலையாளத்தில் கேட்பார்.



• டோலிப் பயணம்

ஏதும் வேண்டாம் என்று சொல்லிய மறு நிமிடமே, 'வியாபாரம் பாதிக்கிறது; எழுந்து போகிறீர்களா?' என்பார். பேசாமல் நடையைக் க்ட்ட வேண்டியதுதான். வழியெங்குமுள்ள கடைகளில் சிகரெட், பீடி தங்குதடையின்றிக் கிடைக்கிறது. சில சாமிமார்கள் ஒரு கையால் தலையிலுள்ள இரு முடியையும், மறு கையில் பீடி, சிகரெட்டையும் பிடித்தபடி போவதைப் பார்த்த போது அதிர்ச்சியாய் இருந்தது. அசைவம் கூட, தேவைப்படுகிறவர்களுக்கு ஆர்டர் பேரில் சப்ளை ஆவதாகப் பேச்சு.

சன்னிதானத்தை நெருங்க, 'கியூ' இருக்கும். இங்கே இருமுடியைப் பிரித்து அதிலிருந்து ஒரு தேங்காயை எடுத்துக் கொண்டு, பதினெட்டாம்படியை அடைய வேண்டும். அங்கே, தேங்காயை வீசி அடித்து உடைத்து விட்டுப் படியேற வேண்டும். இருமுடியுடன் வருகிறவர் மட்டுமே, பதினெட்டாம் படியேற அனுமதி உண்டு. படியில் இருபுறமும் கேரளா போலீஸ் நின்று கொண்டு, கையைப் பிடித்துத் தூக்கி விட, அரை நிமிடத்துக்குள் படியேற்றம் முடிந்து விடும். பின்னர் கியூவில் வந்து சுவாமி தரிசனம். இங்கேயும், திருப்பதி போல 'ஜருகண்டி' முறைதான். ஐயப்பனின் சில விநாடி தரிசனத்தின் போது, சுவாமியிடம் மனம் லயித்துப் போகிறதே ஒழிய, அதைக் கொடு; இதைக் கொடு என்று கேட்கத் தோன்றவில்லை. இருமுடி இல்லாமல் வருகிறவர்கள், பதினெட்டாம் படி ஏற முடியாதே தவிர, பின்புற வழி மூலம் வந்து ஐயப்பனை தரிசிக்கத் தடையேதுமில்லை.

அடுத்தது நெய் அபிஷேகம். குருசாமி, தம் கூட வந்துள்ள ஐயப்பன்மார்கள் அத்தனை பேருடைய முத்திரைத் தேங்காய்களையும் உடைத்து, நெய்யைப் பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டு, நெய் அபிஷேகத்துக்குரிய டிக்கெட்டுடன் இன்னொரு கியூவில் நிற்க வேண்டும். தினமும் நள்ளிரவு முதற்கொண்டே பக்தர்கள் கியூவில் நிற்கத் தொடங்கி விட்டாலும், அபிஷேகம் ஆரம்பமானதும், கிடுகிடுவென கியூ நகர ஆரம்பித்து விடும். சன்னதியின் ஒரு புறத்தில் நெய் பாத்திரத்தைக் கொடுத்து விட்டு, மறுபடி சுவாமி தரிசனம் செய்து விட்டு, மறுபுறம் வந்தால், கொண்டு வந்த நெய் அபிஷேகமாகி, பின் அதையே வழித்து எடுத்துப் பாத்திரத்தில் போட்டுக் கொடுத்து



இருமுடி தாங்கி...

விடுவார்கள்.

பக்தர்கள் கொண்டு வந்து தரும், அரிசி முதலியனவற்றில், பொங்கல் செய்யப்பட்டு, பக்தர்களுக்கே வழங்கப்படுகிறது. இது தவிர பிரசாதங்களாக அரவண பாயசம், அப்பம் இவையும் விற்பனையாகின்றன.

லட்சக்கணக்கான பக்தர்கள் கூடி, மனம் லயித்து சரண கோஷமிடும் போது, மலையே அதிர்வது போன்ற உணர்வு ஏற்படுகிறது; உடம்பு சிலிர்க்கிறது.

சாமியே சரணம் ஐயப்பா!

கட்டுரை: **எஸ். சந்திரமௌலி.**

படங்கள்: **சோமு.**

அட்டை வண்ணப்படங்கள்: **அழ. காசி விஸ்வநாதன்.**

சபரிமலை அகராதி!

பெருவழி:

எரிமேலி என்கிற இடத்திலிருந்து, பன்னிரெண்டு மைல் நடந்து அழுதா நதியை அடைந்து, அழுதா மேடு ஏறி, இறங்கி, முக்குழிப் பள்ளத்தாக்கை அடையலாம். அடுத்ததாய்க் கடினமான கரிமலை ஏற்றம். அப்புறம் பம்பா. பின் வழக்கமான மலைப்பாதையில் ஏறிச் சன்னிதானம். இதுவே பெருவழி. இன்றைக்கும் இந்தக் காட்டுப் பாதையில் பல்லாயிரம் பேர் போகிறார்கள்.

பேட்டைத் துள்ளல்:

எரிமேலியில் நடக்கிற ஒரு தமாஷான சடங்கு பேட்டைத் துள்ளல். ஐயப்ப பக்தர்கள், இலைகளை இடுப்பில் கட்டிக் கொண்டு, கைகளில் அம்பு, சரங்களைப் பிடித்துக் கொண்டு, உடம்பெங்கும் பல வண்ணப் பொடிகளைப் பூசிக் கொண்டு, தாரை, தப்பட்டைகள் முழங்க துள்ளித் துள்ளி டான்ஸ் ஆடியபடி 'சாமி திந்தகத்தோம்.... ஐயப்ப திந்தகத்தோம்' என்று உரக்கப் பாடிக் கொண்டே 'வாவர்' (இவர் ஐயப்பனின் தோழர்) கோவிலைச் சுற்றி, பின்னர் நீராடி, பயணத்தைத் தொடர்கிறார்கள்.


வெடி வழிபாடு:

சபரி பீடம் (சபரிக்கு சாப விமோசனம் கிடைத்த இடம் என்பது ஐதீகம்) மற்றும், சன்னிதானத்தில், ''மாளிகா புரத்தம்மனுக்கு மணச்ச நல்லூர் மருதப்ப நாயுடு சாமியின் வெடி வழிபாடு மூணு'' என்று மைக் அறிவிக்க, அடுத்த விநாடி எங்கிருந்தோ டுமீல்... டுமீல்... டுமீல்... என்று மூன்று முறை வெடி சப்தம் கேட்கும். அந்தக் காலத்தில் காட்டுப் பாதையில் செல்லும் போது, துஷ்ட மிருகங்களிடமிருந்து தற்காப்புக்காக, வெடி வெடித்தபடி போவார்களாம். நாளடைவில் இது வேண்டுதலுக்குரிய விஷயமாகி விட்டது.

சரங்குத்தி:

சபரி பீடத்துக்குப் பக்கத்தில் ஓர் இடத்தில் எரிமேலியிலிருந்து அம்பு மற்றும் சரங்கள் கொண்டு வரும் அத்தனை ஐயப்பன்

சபரிமலை வழித்தடம்



அநுராகம்

10, கண்ணதாசன் சாலை, தியாகராயநகர், சென்னை-600 017.

சிறப்பு வெளியீடுகள் ஒவ்வொன்றும் ரூ. 2-50 காசு.

புகழ்பெற்ற தமிழர்கள்
புகழ்பெற்ற இந்தியர்கள்
பொது அறிவுக் களஞ்சியம்
உலகப் புகழ்பெற்றவர்கள்
இந்தியா முக்கிய விபரங்கள்
இந்திய வரலாற்றில் 5000 ஆண்டுகள்
இந்திய விடுதலைக்குப்பின் 40 ஆண்டுகள்
தமிழ்நாடு-250 சுவையான செய்திகள்
முதல் பெருமை பெற்றவர்கள்
தெரிந்த பெயர் தெரியாத விபரங்கள்
எப்படி வந்தது?
உங்களுக்குத் தெரியுமா?
உலகைப் பற்றிய பயனுள்ள தகவல்கள்
நம்பமுடியாத உண்மைகள்
சிந்திப்பதற்கு சில விஷயங்கள்
100 உண்மைகள்
சிந்திக்கவைக்கும் சின்னச்சின்ன கதைகள்
கவலையை மறந்து சிரியுங்கள்
பழமொழிகள்-600
உலகப் பழங்கதைகள் - 2 பாகங்கள்
ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம்
ஸ்ரீ சௌந்தர்ய லஹரி
பதஞ்சலி யோக சாஸ்திரம்
ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் அருளிய
வாழ்க்கைத் தத்துவங்கள்
பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா
அருளிய மணிமொழிகள்
சுவாமி யோகானந்தாவின்
ஆன்மிக அனுபவங்கள்
திபெத்திய ஞானியின் ஆன்ம தரிசனம்
இந்து மதத்தைப் புரிந்துகொள்ளுங்கள்
இந்து மத சிந்தனைகள் - 5 பாகங்கள்
கீதையின் சாரம்
கீதையின் செய்தி - ராஜாஜி
ஆன்மிகக் குட்டிக்கதைகள்
இராமாயணக் கதைகள்
மகாபாரதக் கதைகள்
பாகவதக் கதைகள்
ஞானவாசிஷ்டக் கதைகள்
சுந்தர காண்டம்
இந்துமதப் பண்பாட்டுக் கதைகள்
- 2 பாகங்கள்
விஞ்ஞானக் கேள்வி பதில்கள் 100
அறிஞர்கள் வாழ்வில்
சுவையான நிகழ்ச்சிகள்
விஞ்ஞானிகள் வாழ்வில்
சுவையான நிகழ்ச்சிகள்
விஞ்ஞானிகளின் வெற்றிச் சாதனைகள்
வியப்பூட்டும் விஞ்ஞானச் செய்திகள்
அதிசயச் செய்திகள்
உண்மைச் சம்பவங்கள்
விஞ்ஞான விளக்கம்
விசித்திர விலங்குகள்

வாழ்க்கையில் வளம்பெறுவது எப்படி?
திரைப்பட உலகில் நுழைவது எப்படி?
கதை எழுதுவது எப்படி?
சிறந்த பேச்சாளராவது எப்படி?
வெளிநாடு செல்ல
என்ன செய்ய வேண்டும்?
பெண்களுக்குப் பயனுள்ள குறிப்புகள்
சமையலறைக் குறிப்புகள்
பெண்கள் அழகைப்பெறுவது எப்படி?
கூந்தல் அலங்காரம்
பிறந்த நட்சத்திரப் பலன்கள்
உங்கள் யோகம் பார்ப்பது எப்படி?
உங்கள் அதிர்ஷ்ட எண் எது?
யோகம் தரும் சனி பகவான்
ஜாதகப்படி யார் என்ன
தொழில் செய்யலாம்?
ஜாதகப்படி செல்வ யோக பலன்
நன்மைதரும் நவக்கிரக ஸ்தலங்கள்
நோய் நீக்கும்
ஹோமியோபதி மருத்துவம்
மகளிர் நோய்களும்
ஹோமியோபதி மருத்துவமும்
கர்ப்பிணிகளுக்கு 100 யோசனைகள்
கருத்தடை முறைகள்
நரம்புத்தளர்ச்சியை நீக்குவது எப்படி?
இளமையுடன் வாழ
உடற்பயிற்சி மருத்துவம்
கனி மருத்துவம்
பிராணாயாமம்
புத்துணர்ச்சி தரும் மசாஜ்
சென்னை நகர மருத்துவமனை கைடு
உடல் பருமனைக் குறைக்க வேண்டுமா?
வீட்டு வைத்தியம்
நீங்களே செய்யலாம்
சூரிய நமஸ்காரம்
எளிய தமிழில் ஆங்கில இலக்கணம்
- 2 பாகங்கள்
ஆங்கில சொல்லாட்சியை
அதிகரித்துக் கொள்ளுங்கள்
ஆங்கில மரபுத் தொடர்கள் (IDIOMS)
ஆங்கில சொற்கள் விளக்கம்
ஆங்கிலத்தில் கடிதம் எழுதுவது எப்படி?
ஆங்கில அறிவை
வளர்த்துக்கொள்ளுங்கள் II பாகம்
பிழையில்லாமல் ஆங்கிலத்தில்
பேசுங்கள் எழுதுங்கள்
கர்நாடக சங்கீதத்தைக்
கற்றுக்கொள்ளுங்கள்
முன்னேற்ற சிந்தனைகள்
பொது அறிவுத் துளிகள்
உலக வரலாற்றில் மாறிய பெயர்கள்
வரலாற்றுக் கதைகள்
ஏன்? என்ன? எப்படி?

வியப்பூட்டும் உண்மைகள்
பைபிள் கதைகள்
கலம்காரி கலை
ஆழ்வார்கள் வரலாறு
இந்து மதம் காட்டும்
அமைதியும் ஆனந்தமும்
நகைச்சுவைக் கதைகள்
நோய் பரப்பும் நுண்ணுயிரிகள்
ஜாதகப்படி குடும்ப பலன்கள்
பெண்களின் ஜாதக யோகங்கள்
கண்டுபிடிப்புகள்
சுவையான செய்திகள்
கணக்குப்புதிர்
விடுகதைகள்
பிரார்த்தனை தரும் வெற்றி
எண்சாண் உடம்பிலே
எத்தனைவித்தைகள்
அரிய செய்திகள்
பீர்பால் கதைகள்
நீரிழிவு
மனையடி சாஸ்திரம்
வரலாற்று நாயகர்கள்
கண்ணதாசன் சிந்தனைகள்
மூளைக்கு வேலை
ஒரு வரி உண்மைகள்
தெரிந்தது எவ்வளவு
ஒலிம்பிக்ஸ்
உலக புகழ் பெற்ற சாகசங்கள்
சரித்திரத்தை மாற்றிய சம்பவங்கள்
உலக தலைநகரங்கள்
வியப்பூட்டும் கேள்வி பதில்கள்
ஜப்பானியக் கதைகள்
நவீன சிறுவர் கதைகள்
மரியாதை ராமன் கதைகள்
புகழ் பெற்ற கதைகள்
அருள் தரும் ஆனந்த வாக்குகள்
தியானம் செய்வது எப்படி
ஸ்ரீ ரமண மகரிஷி
பரம பாவன பக்தி கதைகள்
தெய்வீக சிந்தனைகள்
தேவாரம் பாடிய மூவர்
சிவன் அருள் பெற்ற திருவருட்செல்வர்
யக்ஷனின் கேள்விகளும்
தர்மரின் பதில்களும்
வானத்திலே அதிசயங்கள்
பரத நாட்டியம்
லாபம் தரும் நவீன முறை
பழத்தோட்டம்
பூந்தோட்டம்
காய்கறித் தோட்டம்
பிழைக்கும் வழிகள் 100 -
புனானி மருத்துவ முறைகள்
விந்தையான உயிரினங்கள்

தையற்கலை: ஒவ்வொன்றும் 3/50 பேண்ட் வெட்டும் விதமும் தைக்கும் முறையும்; பெண்கள் உடைகள்; பெண்கள் நவீன உடைகள்; குழந்தைகள்; ஆண்கள்; ஜாக்கெட் வெட்டும் விதமும், தைக்கும் முறையும்

வீட்டு பெண்களுக்கு தேவையான குறிப்புகள் (சமையல் மருத்துவம், ஆரோக்கியம், பண்டிகை வழிபாடு) ரூ. 25-00	ANURAGAM DICTIONARY ENG-ENG-TAMIL Rs.9-00 இத்துடன் அநுராகம் சிறப்பு வெளியீடு ஒன்று இலவசம்	தபாலில் பெற புத்தகத்தின் விலையுடன் ரூ. 3-00 சேர்த்து M.O. அனுப்பவும். V.P.P. யிலும் அனுப்புகிறோம்.

—JOHN.



மார்களும் அவற்றைக் குத்தி விட்டுப் பயணத்தைத் தொடர வேண்டும் என்பது பழக்கம். இந்த இடம் முழுவதும் மெலிசாய் மரத்தில் செய்த அம்புகளும், கத்திகளும் சகட்டுமேனிக்குக் குத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

சன்னிதானம்:

பதினெட்டுப்படி ஏறி, மேலே போனால் நடுநாயகமாய் இருப்பது ஐயப்பன் சன்னிதானம். மேலே தங்கக் கொடி மரமும் உள்ளது. ஐயப்பனுக்குத் தென் மேற்கே கணபதியும், கணபதியின் இடதுபுறம் நாக ராஜாவும் இருக்கிறார்கள். சன்னிதானத்தின் பின்புறம் 'பஸ்மக் குளம்' என்று ஒன்று உள்ளது. இங்கே பக்தர்கள் குளிக்கலாம். பஸ்மக் குளத்தின் அருகே மாளிகை புரத்தம்மனின் ஆலயமுள்ளது. சுவாமியை மணக்க அம்மன் இங்கே காத்திருப்பதாய் ஐதீகம். தரையில் தேங்காயை உருட்டியபடி அம்மனைச் சுற்றி வந்தால், நினைத்த காரியம் கைகூடும் என்பது நம்பிக்கை.

மகர ஜோதி ; மகர விளக்கு:

தை மாதத்தில், சபரி மலையில் சுவாமிக்கு தீபாராதனை செய்கையில், பொன்னம்பல மேடு என்னுமிடத்தில், தேவர்களும் பகவானுக்கு பூஜை செய்து தீபாராதனை காட்டுவதாயும், அவ்வொளி, மகர ஜோதியாய்த் தெரிகிறது என்றும் நம்பிக்கை.

இருமுடி:

இரு பகுதிகள் கொண்ட துணியாலான ஒரு பை. முன் முடி, பின் முடி என்று சொல்வார்கள். முன் முடியில் மஞ்சள் பொடி, குங்குமம், சந்தன வில்லைகள், வெற்றிலை பாக்கு, கற்பூரம், பேரீச்சம் பழம்,/அச்சு வெல்லம், பச்சரிசி, பப்படம், பன்னீர்ப் பாட்டில், அரக்கு, அவல் பொரி, விபூதி, பட்டுத் துணி, ஊதுவத்தி, சுத்தமான நெய் ஊற்றி அரக்கினால் சீல் செய்த முற்றிய தேங்காய், காணிப் பொன், மிளகு, கற்கண்டு, முந்திரி, திராட்சை, தேன் முதலியன இருக்கும். பின் முடியில் உணவுப் பொருட்களும், பதினெட்டாம் படியில் உடைக்கச் சிதறுகாய் முதலியனவும் இருக்கும். உள்ளே இவற்றை வைத்துக் கட்டும் முறை ஒரு தனி டெக்னிக். இரு மாங்காய்கள் கொண்ட ஒரு கொத்துப் போல இருக்கும். தலையில் தூக்கி வைத்துக் கொண்டால், 'ஜம்'மென்று உட்கார்ந்து கொள்ளும். கையால் பிடித்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

திருவாபரணம்:

சுவாமியின் நகைகள், பந்தளம் என்கிற இடத்தில்தான் வைக்கப்பட்டிருக்கும். தை மாதம் முதல் தேதி நகைகள் அத்தனையும் அடங்கிய மரப் பெட்டி, பந்தளத்திலிருந்து, பலத்த பாதுகாப்புடன் சன்னிதானத்துக்குக் கொண்டு வரப்பட்டு, ஆண்டவனுக்கு அணிவிக்கப்படும். பந்தளத்திலிருந்து பெட்டிகள் வரும் போது அதன் மேலாகப் பருந்து ஒன்று பறந்து வருவது, ஆண்டு தோறும் நடக்கும் நிஜமான ஆச்சரியம்.

தொகுப்பு: **மௌனஷ்மி.**


ஆசிரியர்: சார்! உங்க பையன் சதா டி. வி. பார்க்குறான் போலிருக்கு; கண்டிச்சு வையுங்க!

தந்தை: எப்படிச் சொல்றீங்க?

ஆசிரியர்: 'ராஜீவ்காந்தி யார்'னு கேட்டா 'அடிக்கடி டி. வி. யில் வர்றவர்'னு பதில் சொல்றான்!

— நீடாமங்கலம் ஜே. பி.




வெற்றி! வெற்றி
காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் வெளிவந்து விட்டது!
மாபெரும் வெற்றி!
டி.ராஜேந்தர்
ஸ்டாலினுக்கு வோட்டு...!
..எதிரிகளுக்கு வேட்டு!
இந்தப் பண்ருட்டி கட்சியிலிருந்து இந்தப் பண்ருட்டியை யாரும் நீக்க முடியாது!
பண்ருட்டியார் கட்சி



கல்கி

1989 ஜனவரி 1
மலர் 47 இதழ் 22
விபவ மார்கழி 17



அவசரக் கோலத்தில் அபத்தச் சட்டங்கள்!

அள்ளித் தெளித்த அவசரக் கோலமாக மசோதாக்களை உருவாக்கி நாடாளு மன்ற ரோட் இன்ஜின் பெரும்பான்மை பலத்தைப் பிரயோகித்து, அவற்றைச் சட்டமாக்கி விடுவது தில்லியில் ஆட்சியில் உள்ளோருக்கு வழக்கமாகி விட்டது.

தேர்தல் குறைகளைச் சீர்திருத்த ஒரு மசோதா அறிமுகமாகி, இரு அவைகளிலும் ஒப்புதலைப் பெற்று விட்டிருக்கிறது. இதில் வோட்டுரிமையைப் பதினெட்டாகக் குறைப்பது என்பது எதிர்க்கட்சிகளும் கூறிவந்த விஷயம்தான். ஆனால் அரசியல் நோக்கில் இது ஆதாயமாகத் தெரியலாமே தவிர, எந்த இளைஞர்களை மனத்தில் கொண்டு இந்த அம்சம் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதோ, அந்த இளைஞர்களுக்கு இது நன்மை செய்யும் என்று தோன்றவில்லை. கல்லூரிப் படிப்பு வரை எட்டிப் பாராத இளைஞர்கள், பதினெட்டு வயதிலேயே வோட்டுரிமை பெறும் அளவுக்கு விசேஷமான அரசியல் முதிர்ச்சி பெற்றிருப்பார்கள் என்று கருதுவதற்கில்லை. கல்லூரியில் படிக்கும் இளைஞர்களோ, இதனால் கல்வியில் கவனம் குறைந்து அரசியல் கட்சிப் பூசல்களில் சிக்கித் தவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாவார்கள். கல்லூரிகளில் ஏற்கெனவே அரசியல் கட்சிகள் புகுந்து கொண்டு செலுத்தும் ஆதிக்கம், மேலும் அருவருக்கத்தக்க அளவில் அதிகரிக்கும்.

ஓர் அரசியல் கட்சி எப்படி இருக்க வேண்டும்; எப்படி இருந்தால் அது அரசியல் கட்சி என்று அங்கீகாரம் பெறும் என்பதாக இந்தச் சட்டத்தில் ஒரு ஷரத்து இருக்கிறது. அரசியல் சாசனத்தின் முன்னுரையை மாற்றமின்றி ஏற்றுக் கொள்வதாக அரசியல் கட்சிகள் ஒப்புக் கொள்ள வேண்டும். ஓர் அரசியல் கட்சி இப்படித்தான் இருக்க வேண்டும், இன்னின்ன கொள்கைகளைத்தான் கொண்டிருக்க வேண்டும் என்று இன்று ஆட்சியில் இருப்பவர் நிர்ணயம் செய்வது ஜனநாயகம் ஆகாது. அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தான் அந்தக் கட்சியின் கொள்கைகளை வகுக்கவும் மாற்றவும் வேண்டும். மக்கள்தான் அதற்கு அங்கீகாரம் அளிப்பது அல்லது நிராகரிப்பது பற்றி முடிவு செய்ய வேண்டும்.

மேலும் வாக்காளருக்கு அடையாள அட்டை தருவது குறித்தும், ஜனநாயக தேர்தல் பணநாயகத் தேர்தலாக மாறாதிருக்க வழி வகுப்பது பற்றியும் இந்தச் சட்டத்தில் ஒன்றுமே பேசப்படவில்லை. டி. வி. யும் ரேடியோவும் ஆளும் கட்சியின் ஏகபோகியப் பிரசார சாதனங்களாக இயங்கி வருவதை மாற்ற இந்தச் சட்டத்தில் வழிவகுக்கப் படவில்லை.

பத்திரிகைப் பதிவுச் சட்டம் என்பதாக ஒன்றை அரசு நிறைவேற்றியுள்ளது. இது ஆபத்தானது என்றும் மாவட்ட மாஜிஸ்திரேட்டுகளுக்குக் கூடப் பத்திரிகைகள் பதில் சொல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்றும் பிரதமருக்கு எடுத்துச் சொல்லப் பட்டது. ஆனால் பிரதமர் இதைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை. ஒரு மாஜிஸ்திரேட் கேட்கும் விவரங்களைப் பத்திரிகை தரும்போது ஒரு சிறு பிழை நேர்ந்து விட்டாலும் அந்தப் பத்திரிகை வெளிவருவதைத் தடுப்பதோடு அந்தப் பெயரில் வேறு ஒருவர் பத்திரிகை நடத்த மாஜிஸ்திரேட் அனுமதி வழங்கி விடலாம்! இப்படிக் கொடுங்கோன்மையான அம்சங்களைக் கொண்ட, பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கிற சட்டத்தை அரசு நிறைவேற்றியுள்ளது.

நேர்முக வரிகள் மசோதா மாதாந்திரச் சம்பளம் வாங்குவோருக்குப் பேரிடி. அவர்கள் பெற்று வரும் நகர அலவன்சு, போக்குவரத்து அலவன்சு, விலைவாசி அலவன்சு போன்ற பலவும் வருவாயாகக் கருதப்பட்டு வரிவிதிப்புக்கு உள்ளாகும். மேலும் இந்த வரி விதிப்பு 62—63—ஆம் ஆண்டிலிருந்தே அமுலுக்கு வந்ததாகக் கருதப்படும் என்பது பெரிய அநீதி மட்டுமல்ல; அபத்தமும் கூட. இப்படி ஒரு ஷரத்து சட்டமானால் அதை வருமான வரி அதிகாரிகள் எப்படி அமுல்படுத்த முடியும்? மீண்டும் ஊதிய உயர்வு கோரி வேலை நிறுத்தம், போராட்டம் என்று பல்வேறு காரியாலயங்களில் பணியாற்றுவோர் வீதிக்கு வருவதுதான் நிகர லாபமாய் இருக்கும்.

சட்டங்கள் இயற்றுவது மக்களின் நன்மைக்காக இருக்க வேண்டும்; அவர்களைத் துன்புறுத்த அல்ல.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

அகஸ்தியனுக்கு அவார்ட்!

என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை. நடப்பது எல்லாம் நிஜமா, கனவா என்று சந்தேகம் தட்டியது. உண்மையிலேயே என் எழுத்துலகச் சேவையைப் பாராட்டுவதற்காகவா இந்தக் கூட்டம் கூடியிருக்கிறது?

கலைவாணர் அரங்கம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் அட்டகாசமாக வாசித்துக் கொண்டிருக்கிறார். "அகஸ்தியனுக்கு விருது விழா" என்று துணி பானர் அலறிக் கொண்டிருக்கிறது. மேடையில் பளபள வென்று மின்னும் அலுமினிய நாற்காலிகள். பெரிய பெரிய வி. ஐ. பி.க்கள், ஆசிரியர்கள், தொழிலதிபர்கள், திரைப்பட நட்சத்திரங்கள் வரப் போகிறார்கள்.

கடைசியில் என் அருமை மனைவி கமலாவின் அருமைத் தம்பி தொச்சு சொன்ன படியே செய்துவிட்டான்! எனக்குப் பெரிய விழாவையே ஏற்பாடு செய்திருக்கிறான். விளையாட்டாக இரண்டு மாதங்களுக்கு முன் அவன் சொன்ன யோசனை, இதோ இன்று நிதர்சனமாக......

அந்த வாரம் வெளியாகி இருந்த என் நகைச்சுவைக் கதையை ஏழாவது தடவையாகப் படித்து வார்த்தை வார்த்தையாக ரசித்துப் புளகாங்கிதம் அடைந்து கொண்டிருந்த சமயம் —

"அத்திம்பேர்... குட்மார்னிங்... இந்தாங்க உங்ககிட்ட நான் வாங்கின ஐந்து ரூபாய்..." என்று ஒரு கையில் ஐந்து ரூபாய் நோட்டும், மற்றொரு கையில் காப்பி தம்ளருமாக — என் வீட்டுக் காப்பிதான் — என் அறைக்குள் வந்தான் தொச்சு.

இந்தியா ஒலிம்பிக்கில் தங்க மெடல் வாங்கினால் கூட நான் வியப்படைய மாட்டேன். தொச்சு வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்ததைப் பார்க்க எனக்கு வியப்பு, ஆச்சரியம், பிரமிப்பு, எல்லாம் ஏற்பட்டது. அதே சமயம், இனம் புரியாத பயம் என் வயிற்றில் பைல் ஃபவுண்டேஷன் போட்டு வீடு கட்டி, பல நூறு மிக்ஸி, கிரைண்டர்களை ஓட விட்டுக் கொண்டிருந்தது. என்ன கஷ்டம், நஷ்டம் வரப் போகிறதோ?

"என்னப்பா, தொச்சு... எப்பக் கடன் கொடுத்தேன் உனக்கு? கொடுத்ததாகவே ஞாபகம் இல்லையப்பா..." என்றேன், ஒப்புக்காக. அவனுக்குக் கொடுத்த பணத்தையெல்லாம் ஞாபகம் வைத்துக் கொள்வது சுலபமல்ல. கம்ப்யூட்டரே திணறிப் போகும்!

"உங்களுக்கு எப்படி அத்திம்பேர் ஞாபகம் இருக்கும்...? என்னது அக்கா, டிபனா... அடாடா, அதுக்குள்ளே என்ன அவசரம்...? அத்திம்பேர்கிட்ட ஐந்து ரூபாய் நான் வாங்கியிருந்தேன்... அத்திம்பேர் என்ன சொல்றார் தெரியுமா, ஞாபகம் இல்லையாம்..."

இதைக் கேட்ட கமலா, "பணத்தை அவர் அக்காவுக்குக் கொடுத்ததாக நினைச்சிருப்பார்... அதான் ஞாபகம் இல்லை... அதுவே உனக்கு ஒண்ணே காலணாக் கொடுக்கட்டுமே, மூச்சுக்கு முப்பத்தெட்டுத் தடவை சொல்லிச் சொல்லிக் காண்பிப்பார்..." என்றாள். சமயம் கிடைக்கும் போதெல்லாம் என்னைக் குத்திக் காட்டுவதில் கமலா கெட்டிக்காரி! பல சமயம், சமயம் கிடைக்கா விட்டாலும் குத்திக் காட்டுவாள் என்பது வேறு விஷயம்!

கமலாவைச் சட்டென்று அடக்கினான் தொச்சு. "அக்கா... சும்மா அத்திம்பேரைப் பற்றித் தப்பாச் சொல்லாதே... இவர் எவ்வளவு பெரிய எழுத்தாளர்... விளையாட்டுப் போல இருபத்தைந்து வருஷமா எண்ணமா எழுதறார்! என்ன கற்பனை... என்ன நடை... பேனா எடுத்தால் அது பஞ்ச கல்யாணிக் குதிரை மாதிரி, பேப்பர்ல என்



அகஸ்தியன்

னமா ஓடறது... இன்னிக்குத் தொச்சுன்னு ஒருத்தன் இருக்கான்னு நாலு பேருக்குத் தெரிஞ்சிருக்குன்னா, அது அத்திம்பேரால் தான்.

''தொச்சு... ரொம்ப ஐஸ் வெக்காதேப்பா...'' (தொச்சு சாதாரண குச்சி ஐஸ் வைத்தாலே எனக்கு ஆயிரம் இரண்டாயிரம் என்று தண்டம் ஏற்படும்!)

''இல்லே அத்திம்பேர்... போன வாரம் பாருங்கோ... என் பிஸினஸுக்காக(?) ஒரு பத்தாயிரம் வேண்டியிருந்தது. பாங்க் மானேஜர் என்னவோ அவரோட அப்பா வீட்டுப் பணத்தைக் கொடுக்கிற மாதிரி மாய்ஞ்சு போனார். பேச்சுவாக்கில் நான் 'அகஸ்தியனின் பிரதர்-இன்-லா' என்று சொன்னேன். 'இஸ் இட்?' என்று கேட்டார். அவருக்கு ஒரே குஷியாயிடுத்து. 'மிஸ்டர் தொச்சு... நான் அகஸ்தியனின் விசிறி... அவருக்காகவாவது உங்களுக்கு உடனே லோன் சாங்ஷன் பண்றேன்னு சொன்னார்.''

''அப்படியாடா தொச்சு... கேட்டீங்களா தொச்சு சொன்னதை...? அன்னிக்குக் கோடி வீட்டு கோபாலன் வந்து, தொச்சு அவருக்கு ஒரு காரியத்தை முடிச்சுக் கொடுத்ததை என்னமாச் சொன்னார்...? அதைப் பற்றித் தொச்சுகிட்டே ஒரு வார்த்தையாவது சொன்னீங்களா? ஒருத்தரைப் பற்றி நல்ல வார்த்தை சொன்னால் முத்து உதிர்ந்து விடுமே உங்களுக்கு?'' என்று கமலா சாடினாள்.

இந்த சமயத்தில் கதவின் பின்னாலிருந்து கொண்டு என் மாமியார் — மாப்பிள்ளை மீது மரியாதை காரணமாக எதிரில் நின்று பேச மாட்டார் — தொண்டையைக் கனைத்து விட்டு, ''கோபாலனுக்குச் செஞ்ச உதவி இருக்கட்டும்டி... இவருக்கே எவ்வளவு செஞ்சிருக்கான்...? உடம்பு கஷ்டம் பார்த்திருப்பானா, பணச்செலவைப் பார்த்திருப்பானா...?'' என்று தொடர் சொற்பொழிவு (அல்லது இழிவு!) நடத்த ஆரம்பித்தாள்.

தொச்சு அவளையும் பேச விடவில்லை. ''அம்மா... கொஞ்ச நாழி சும்மா இரேன்...'' என்றான்.

''என்ன ஆச்சுப்பா தொச்சு உனக்கு...?'' என்று கேட்டேன்.

''அத்திம்பேர் உண்மையைச் சொல்றேனே... நீங்க ஏதோ தத்துப்பித்துன்னு கதை எழுதறீங்கன்னு இத்தனை நாளாக நெனைச்சுண்டு இருந்தேன். இப்பத்தான் நீங்க எவ்வளவு கிரேட் ரைட்டர் என்பது எனக்குத் தெரிஞ்சது. எனக்கு மட்டும் வசதியிருந்தால் உங்களுக்கு ஒரு பொற்கிழியே கொடுப்பேன்'' என்றான்.



"பொற்கிழி வேண்டாம். என்னைக்கிழிக்காமல் இருந்தாலே போதும்" என்றேன்.

"அடாடா... இதுதான் வார்த்தையிலே புகுந்து விளையாடற திறமை! அத்திம்பேர், உங்களுக்கு ஒரு பெரிய விழா ஏற்பாடு செய்யப் போறேன், உங்கள் எழுத்துலகச் சேவையைப் பாராட்டி... தயவு செய்து இதுக்கு நீங்க மறுக்கக் கூடாது" என்றான் தொச்சு.

"தொச்சு... விழாவெல்லாம் வேண்டாம்பா..."

"என்ன அத்திம்பேர், இன்னிக்கு விழா எடுத்துக்கிறதுதான் பாஷன். உங்களுக்கு 'எழுத்துச் செம்மல்' பட்டம் கொடுக்கப் போறேன்."

"தொச்சு..."

"போறும்... அவன் கெஞ்சறான். நீங்க வேண்டாம், வேண்டாம்னு ஏன் பிடிவாதம் பிடிக்கிறீங்க? இப்படி நாலு விழா நடத்தி நாலு பட்டம் வாங்கினால்தான் உங்களுக்கு ஒரு கௌரவம், அந்தஸ்து... ஏண்டா தொச்சு, உனக்கு எல்லாருக்கும் நல்லது செய்யணும்னு இருக்கு — எங்கே சரி சொல்லிட்டா, உனக்கு ஏதாவது நல்ல பேர் வந்துடுமோன்னு இவருக்குத் தயக்கம்..."

"கமலா... டீ. வி. பெட்டியில் கேள்வி கேட்கறவங்க கூட நடுவிலே அரை நிமிஷம் மற்றவங்களைப் பேச விடுவாங்க... நீ என்னடான்னா என்னைப் பேசவே விடமாட்டேன் என்கிறாய்... என்ன சொல்ல வந்தேன் என்றால், இதற்கெல்லாம் செலவாகும்... தொச்சுவுக்கு எதுக்குச் சிரமம்னு...?"

அப்படி உருகுகிறவர் ஆயிரமோ இரண்டாயிரமோ கொடுக்கிறது?"

"தாராளமாக் கொடுக்கறேன்... தொச்சு, விழாவுக்கு மொத்தம் எவ்வளவு பட்ஜெட்?" என்றேன்.

"பட்ஜெட்டுக்கு என்ன அத்திம்பேர் அவசரம்...? முதலில் விருது விழாவிற்கு ஒத்துக்கொள்ளுங்கள். மத்ததை நான் பார்த்துக்கறேன்... செலவுக்கு உங்க லட்சக்கணக்கான விசிறிகள்கிட்ட கேட்டால் பணம் கொட்டாதா? அப்படியே துண்டு விழுந்தால் உங்க கிட்ட வருகிறேன்" என்றான்.

அவன் 'துண்டு' என்பது ஒரு எட்டு முழ வேஷ்டியாக முடிந்தாலும் பரவாயில்லை. கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறக் கூடிய—உலகிலேயே மிகப் பெரிய துண்டாக முடிந்தால், எங்கே போவது? அந்த சமயம் நான் வடிக்கப் போகும் ரத்தக்கண்ணீரைத் துடைக்க அந்தத் துண்டே போதாமலிருக்குமே!

பட்ஜெட்டுக்கு என்ன அவசரம்? என்று கேட்டானே தவிர, அவன் மனத்தில் மளமளவென்று அவன் யார் யாருக்கு எவ்வளவு பணம் பாக்கி, எந்தக் கடனை எப்போது அடைக்கலாம் என்பது போன்ற பல விஷயங்கள் அலசப்பட்டிருக்கும் என்பது எனக்குத் தெரியும்.

"என்ன தொச்சு ஐயாயிரம் ரூபாய் ஆகுமா?" என்று கேட்டேன்.

"என்ன அத்திம்பேர் ஐயாயிரமா? அவ்வளவு எதற்கு? 4500 ரூபாயே எதேஷ்டம்" என்றான்.

அந்த சமயம் என் அருமை மனைவி கமலா சுடச் சுட அடை கொண்டு வந்து கொடுத்தாள்.

"என்ன அக்கா அடையா...? எத்தனை அடை? நாலா கொடுத்திருக்கிறே...? அக்கா, இங்கே அடையைச் சாப்பிட்டால் மூன்று நாளைக்குத் திம்மென்று இருக்கிறது" என்று சொல்லி அடையை வயிற்றில் அடைக்கத் துவங்கினான்.

"மூன்று நாட்கள் 'திம்'மென்று இருக்கிறதாலேதான் மூன்று நாளைக்கொரு தரம் வர்றே போல இருக்கு" என்றேன். சாதாரணமாக இப்படிச் சொன்னால் என்னைக் கொத்திக் குதறிப் பொடிமாஸ் பண்ணிவிடுவாள் கமலா, ஆனால் இன்று உலக மகா ஜோக்கைக் கேட்டது போல் தொச்சு சிரிக்க, இவர்களும் சிரித்தார்கள்.

"அத்திம்பேரே, நீங்க கவலைப்படாதீங்க. விருது விழா அட்டகாசமாய்ப் பண்ணிவிடுகிறேன். முதலில் ஒரு வெள்ளிக் கேடயம் தயார்பண்ணணும்..." என்று ஆரம்பித்தான். நான் டூ-இன்-ஒன்னாக மாறினேன். வெளியே: முகமலர்ச்சி; உள்ளே மனத்தளர்ச்சி.

அடுத்த பதினைந்து தினங்கள் தொச்சு அவ்வப்போது வந்து விழா ஏற்பாடுகளைப் பற்றித் தலைப்புச் செய்தி மாதிரி சொல்லிவிட்டுப் போவான். போகும்போது, "அத்திம்பேர், ஒரு போஸ்டர் போட்டு மெட்ராஸைக் கலக்கிடப் போறேன்" என்பான். என் வயிறு கலங்கும். அடுத்தது என்ன சொல்வான் என்று தெரியும்: பேசாமல் பணம் கொடுத்து அனுப்புவேன்.

ஒரு விருது விழா என்றால் என்னென்ன செலவு ஏற்படும் என்று யாராவது தெரிந்து கொள்ள வேண்டுமானால் என்னை அணுகலாம். பல செலவுகளுக்கும் விழாவிற்கும் என்ன தொடர்பு என்று மட்டும் கேட்காதீர்கள். அது தொச்சுவிற்கே வெளிச்சம்! உதாரணமாக, தொச்சு செய்த ஒரு சில செலவுகளைப் பாருங்கள்.

அவன் மனைவி அங்கச்சிக்குப் பொய்ப் பல் கட்டும் செலவு (நல்ல நாளிலேயே வாயைத் திறந்தால் பொய்தான்!) தொச்சுவின் கிராமத்திலிருக்கும் வீட்டிற்கு ஓடு மாற்றும் செலவு. தொச்சுவின் மூன்று பிரஜைகளுக்கு ஸ்கூல் யூனிஃபார்ம் ("வாசலில் குழந்தைகளை நிற்க வைத்து வருபவர்களுக்குப் பன்னீர் தெளிக்க வைக்கப் போகிறேன்.") தொச்சுவின் கற்காலத்து சைக்கிளுக்கு பெல் தவிர எல்லாவற்றையும் மாற்றுவதற்கான செலவு! இப்படி எத்தனையோ சொல்லலாம்!

ஒரு நாள் தொச்சு ஒரு பிர்ம்மாண்டமான

போஸ்டருடன் வந்தான். தலைமைக்கு, பாராட்டுரைக்கு, பொற்கிழி வழங்குவதற்கு என்று பலரை இழுத்துப் போட்டிருந்தான்.

"என்னப்பா தொச்சு... ரொம்பப் பிரமாதப்படுத்தறே... ஆமாம், அது என்ன பொற்கிழி?"

"சும்மா ஒரு இது அத்திம்பேர். வாசகர்கள் எல்லாரும் சேர்ந்து பணமுடிப்புக் கொடுக்கிற மாதிரி ஒரு செட்—அப். அத்திம்பேர்... இதுக்குப் பணம் செலவாகுமோன்னு பயப்படாதீங்க..." என்றான் தொச்சு.

"நீ எதுக்கும் செலவு வெக்காத போதே இவர் மூக்கால் அழுகிறார். பாரேன், நீ இவ்வளவு பண்றே. கடைசியிலே உன்னைப் பத்தி ஆயிரம் குத்தம் சொல்லப் போறார்" என்றாள் அக்காக்காரி.

"போறும் அக்கா. அத்திம்பேரைப் பத்தி ஏதாவது இப்படிச் சொல்லிண்டே இருக்காதே" என்று கோபித்துக் கொண்டான் தொச்சு.

இப்படி அவ்வப்போது தொச்சு வந்து விழா ஏற்பாடுகளைப் பற்றிச் சிரக் கம்பம் கரக் கம்பம் செய்து, என்னை அசர வைத்து விட்டு, பணம் வாங்கிக் கொண்டு போவான்.

ஓர் எழுத்தாளர், ஒரு நீதிபதி, ஒரு பெண் கவிஞர், ஒரு தொழிலதிபர், ஒரு பேராசிரியர் என்று பலரைத் திரட்டி விட்டான்.

"அத்திம்பேர்... நேற்று அங்கச்சி ஒரு ஐடியா சொன்னாள்... என்னதான் புரொபசர், ஜட்ஜுன்னு வந்தால் கூட கூட்டம் வர்றதுக்கு ஏதாவது சினிமா நடிகரைப் போடணும்னு சொன்னாள். அவ ஐடியாவைக் கேட்டு அசந்து போய்ட்டேன். நானும் இவ்வளவு யோசிச்சு யோசிச்சுச் செய்யறேன். இது தோணாமல் போய் விட்டதேன்னு!"

"என்னப்பா தொச்சு, வர்ற கூட்டம் வரட்டும்..." என்றேன் சுவாரசியமில்லாமல்.

"இல்லை அத்திம்பேர், உங்க பாராட்டு விழா வைச்சிருக்கிற அன்னிக்கு டீ. வி. யில புதுப்படம் போடறாங்களாம்.

அதுவரை கதவு பின்னாலிருந்து கொண்டு ஆயிரம் காதுகளால் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த என் மாமியார், "என்ன படம்டா தொச்சு?" என்று கேட்டாள்.

"ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி." என்றான்.

"இது புதுப் படமாடா?"

"இல்லே. இப்பத்தான் புதைபொருள் இலாகா இந்தப் படத்தைப் புதுசாத் தோண்டி எடுத்தாங்களாம்..." என்று கூறி விட்டுப் பிரமாதமாகச் சிரித்தான்.

"சரி, தொச்சு... அப்படியென்றால் யாரை யாவது ஏற்பாடு பண்ணு" என்றேன்.

"அத்திம்பேர் இன்னிக்கு டாப் காமெடியன் டைட் கிட்டன்தான். அவரை மடக்கிப் போடறேன்... அவரைப் பிடிக்கறதுக்கு அவரோட செகரட்டரிக்குக் கொஞ்சம் தள்ள வேண்டியிருக்கும்... சரி... சரி... நான் வர்றேன்" என்று சொல்லி விட்டுப் பறந்தான்.

கடந்த சில வாரங்களாகத் தொச்சு விடை

பெறும்போதெல்லாம் வெறும் கையோடு போனதில்லை. முதல் முறையாக — அல்லது கடைசி முறையாகவோ! — வெறுங்கையுடன் போனான்.

"அத்திம்பேர்... டைட் கிட்டன் வர்றார். எழுந்திருங்கோ..." என்று தொச்சு காதில் கிசுகிசுக்க, சட்டென்று வாரிச் சுருட்டி எழுந்து, "ஹி... ஹி... வாங்க, வாங்க" என்று வரவேற்றேன். மூன்று பேர் வந்தார்கள். அதில் நடுநாயகமாக இருப்பவர் தான் பிரபல நடிகர் டைட் கிட்டனாக இருக்க வேண்டும். மற்றவர்கள் 'அண்ணனு'க்குத் துணையாக வரும் பூனைப் படையாகவோ எலிப்படையாகவோ இருக்க வேண்டும்.

"அண்ணன் டைட் கிட்டன் வாழ்க!" என்று அரங்கத்திலிருந்து பல குரல்கள்.

"இவர்தான் நகைச்சுவை எழுத்தாளர் அகஸ்தியன்... இவர்தான்..."

தொச்சு அறிமுகம் செய்தான். கிட்டன் புருவத்தை உயர்த்தி, "ஓ" என்றார். அந்த டயலாக் சொன்னதே எனக்குப் பெரிய உபகாரம் செய்தது போல் அவர் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். அப்போது ஒரு 'எலி' அவர் காதில் கிசுகிசுக்க, "உங்க அப்புசாமி கதைகள் படிச்சிருக்கேன். ரொம்ப டாப்!" என்றார் டைட்.

மேடையில் எல்லாரும் அமர்ந்திருக்க, மைக்கில் போய்த் தொச்சு, "விழா துவங்குகிறது. முதலில் இறைவணக்கம்" என்றான்.

திரை மறைவிலிருந்து அங்கச்சி மைக்கின் முன் வந்து பாட ஆரம்பித்தாள். ('அங்கச்சி உடுத்தி இருந்த புடைவை கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை ஷோரூமில் போன வாரம் பார்த்த மாதிரி இருக்கிறதே!') அங்கச்சி பாடியது இறை வணக்கம் என்று சொன்னால் எந்த இறைவனுக்கும் பொறுக்காது. அது 'இரை'ச்சல் வணக்கம்!

அடுத்து பேராசிரியர் தலைமை உரையை ஆரம்பித்தார். மனிதன் எப்படி எழுதத் துவங்கினான், எழுத்துக்களுக்கு எப்படி வடிவம் அமைத்தான், எகிப்திய பிரமிட்டுகளிலும், ரோமானிய இடிபாடுகளிலும் உள்ள ஆதாரங்களையும் எடுத்துக் காட்டினார். அவர் கற்காலத்திலிருந்து தற்காலம் வர இன்னும் எத்தனை மணி நேரம் ஆகுமோ என்று எனக்குக் கவலை ஏற்பட்டது. விழா நாயகன் கவலைப்பட முடியுமா? ஆகவே மிகவும் கவனித்து ரசிப்பது மாதிரி தலையாட்டிக் கொண்டிருந்தேன்.

திடீரென்று அரங்கத்திலிருந்த சிலர் — டைட் கிட்டனின் விசிறிகளாக இருக்க வேண்டும் — "போதும்... போதும்... டைட்டைப்பேசச்சொல்லுங்கள்...வீ வான்ட் டைட்" என்று கோஷ்டி கானமாகக் கத்த ஆரம்பித்தார்கள்.

புரொபசர் போன ஜன்மத்தில் பனங்காட்டு நரியாக இருந்திருக்க வேண்டும். ஆகவே சலசலப்புக்கு அஞ்சாமல், "இரேக்க நாகரிகம், மாயா நாகரிகம்," என்று தொடர்ந்தார்.

அரங்கத்தில்கூச்சல்அதிகமாயிற்று. நடிகர் டைட் முகத்தில் அபார மகிழ்ச்சி. பேராசிரியரிடம் ஓடிப்போய்த் தொச்சு கிசுகிசுத்தான். பேராசிரியர், "...ஆகவே, எழுத்தாளர் அகஸ்தியனைப் பாராட்டுகிறேன்" என்று கூறிவிட்டு உட்கார்ந்தார்.

கூட்டம், "டைட், டைட்" என்று குரல் கொடுக்க, தொச்சு மைக்கில், "இப்போது டைட் கிட்டன் பேசுவார்" என்று அறிவித்தான்.

டைட் கிட்டன் மைக்கருகில் போய் நின்றார். தொண்டையைக் கனைத்துக் கொண்டார். இந்தப் பக்கம், அந்தப் பக்கம் பார்த்தார். ஆனால் பேச்சைத் துவங்கவில்லை.


இந்த சமயம், பலர் மலர் மாலைகளுடன், பிளாஸ்டிக் சரிகை, பொன்னாடைகளுடன் மேடைக்கு வர ஆரம்பித்தார்கள். சந்து, பேட்டை, காலனி, என்று பல இடங்களைக் குறிப்பிட்டு, அந்த இடத்தில் இருக்கும் ரசிகர் மன்றங்கள் சார்பாக அண்ணன் 'டைட்'டைக் கௌரவித்தார்கள். மேடையில் ஏகப்பட்ட குழப்பம். மைக்கில் ஏதேதோ அறிவிப்புகள்.

ஏதோ ஒரு படத்தில் அண்ணன் டைட் ஒரு குட்டிக் குரங்குடன் நடித்து அது நூறு நாள் ஓடியிருந்ததாம். அதனால் யாரோ ஒரு ரசிகர் ஒரு குரங்குக் குட்டியை அன்பளிப்பாகக் கொடுக்க வந்தார். பாவம், குரங்கு. கூட்டத்தையும் குழப்பத்தையும் பார்த்து மிரண்டுவிட்டது. சட்டென்று விடுபட்டு, அரங்கத்திற்குள் தாவிக் கன்னாபின்னாவென்று நாற்காலிக்கு நாற்காலி தாவி ஓட, பலர் கூக்குரலிட, பலர் விரட்ட அது மேலும் மிரண்டு போய்க் 'கொர் கொர்' என்று உறுமிக் கடிக்க வந்தது. அவரவரும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓட ஆரம்பித்தனர். அதுமட்டும் எனக்கு நடத்தப்படும் விழாவாக இல்லாதிருந்தால் நான் பிரமாத காமெடியாக ரசித்திருப்பேன். ஆனால்...

திடீரென்று ஹால் காலியாகி விட்டது. முதல் வரிசையில் வி. ஐ. பி. நாற்காலியில் குரங்கு உட்கார்ந்து நிதானமாக நாற்காலியின் குஷனைக் கடித்துக் குதறிக் கொண்டிருந்தது...!

கலைவாணர் அரங்கத்தில் நாலைந்து நாற்காலிகளுக்குப் புது குஷன் போட்டிருக்கிறார்கள். ஏழு புது நாற்காலிகளைப் பொருத்தியிருக்கிறார்கள். அவைகளின் மீது அன்பளிப்பு: அகஸ்தியன் என்று எழுதி இருக்க வேண்டும். மறந்து விட்டார்கள், போகட்டும்.

எல்லாக் கறுப்பு மேகத்திலும் ஒரு வெள்ளிக் கம்பி இருக்குமாம். இந்த விருது விழாவாலும் எனக்கு ஒரு லாபம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. தொச்சு இனி நாலைந்து வருஷங்களுக்கு என் வீட்டுப் பக்கம் தலைகாட்ட மாட்டான்!



"எங்கப்பா எதுக்குத்தான் எனக்கு 'வந்தனா'ன்னு பேர் வைச்சாரோ?'' சிணுங்கலாகச் சொல்லிக் கொண்டே அவள் ஒரு தண்டவாளத்தின் மீது ஏறினாள்.

''ஏன், அந்தப் பேருக்கென்ன? நல்லாத்தானே இருக்கு!'' அசோக் மறு தண்டவாளத்தில் ஏறி நின்று அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

இருவரும் அந்த ரயில் பாதையிலேயே மெயின் ரோடு வரை நடந்து கொண்டே ஏதாவது வம்பளந்து கொண்டு செல்வது வழக்கம். பஞ்சாயத்து போர்டு ஆரம்பப் பள்ளியில் காக்காக் கடியில் கமர்கட்டைப் பங்கு போட்டுத் தின்று ஒன்றாய் வளர்ந்தவர்கள். நடுவில் கல்லூரிப் படிப்பு என்று அசோக் கொஞ்ச காலம் திசை மாறிப் போன போது, வந்தனாவுக்கு மனசு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. அப்புறம் வேலையில்லாப் பட்டதாரி என்று திரும்பி வந்து ஊரோடு ஒட்டிக் கொண்ட போது, 'நாம படிச்ச ஸ்கூல்லேயே நான் இப்ப வாத்திச்சியாக்கும்,' என்று நிம்மதியாய் அவன் நெஞ்சை நீவிக் கொடுத்தாள் வந்தனா.

''வாத்திச்சி வந்தனான்னு வாகாச் சொல்றதுக்கு நல்லாத்தானே இருக்கு? அந்தப் பேருக்கு என்ன?'' என்று கிண்டலாகச் சீண்டி விட்டான் அசோக்.

''அது சரி, ஜாடைப் பேச்சு பேசறதுக்கும் தோதா இருக்கே? அந்த லேவாதேவிக்காரர் மகன் ஆறுமுகம் இல்லே, அவன் என்னைப் பார்த்ததும் பக்கத்திலே கணக்குப் பிள்ளைகிட்ட,'எலே, நான் உன்னைத் தேடி டவுனுக்கு வந்தனா, அப்புறம் ஸ்கூலண்டை வந்தனா, திரும்பத் தோட்டப் பக்கம் வந்தனா எங்கயும் காணலியே?'ங்கறான். என்னை ஜாடையாய்ப் பார்த்துக்கிட்டே....''

அதைக் கேட்டு ஆத்திரத்தில் அவள் கையை இறுக்கினான் அசோக். உடனே சிரித்துச் சமாளித்தான். ''அடுத்தாப்பலே அவன் அப்படிப் பேசினா, 'உங்கப்பன் கதி உனக்கும் தேவையா? இதோ வந்தனான்னு அந்த ஆளுங்க உன்னைத் தேடி வரப் போறாங்க'ன்னு சொல்லி வை.''

அந்த வார்த்தையே அவளை ஓர் உலுக்கு உலுக்கியது. எத்தனை பயங்கரம் அது! போன வருடம் அந்த வட்டாரத்தையே நடுநடுங்க வைத்த கோரக் கொலை அது.

ஆறுமுகத்தின் அப்பா முனிரத்தினம் மோசமான வட்டி வியாபாரிதான். அதற்காக அப்படியா....?

சாயந்தரம் நாலு மணி இருக்கும். முனிரத்தினம் மத்தியானத் தூக்கம் முடிந்து நடையை ஒட்டிய அவரது பிஸினஸ் மேடையில் உட்கார்ந்து தண்டவாளப் பெட்டியைத் திறந்து நகை நட்டு ரொக்கம் எல்லாம் சரி பார்த்துக் கொண்டிருந்த நேரம். அதெப்படி மோப்பம் பிடித்தார்களோ, இல்லை, உள் வயணமறிந்துதான் செய்தார்களோ திடீரென்று ஒரு புயல் வீசின மாதிரி மோட்டார் பைக்கில் — நாலு பேரா, ஏழு பேரா — இன்று வரை தெரியவில்லை. அந்த வாசலைத் தாண்டிப் புகுந்தார்கள். அக்கம் பக்கத்தில் என்ன ஏது என்ற திகைப்பு நீங்கி விழித்துப் பார்ப்பதற்கு முன்னே அந்த முனிரத்தினம் கண்டம் கண்டமாய்த் துண்டாடப்பட்டுக் கிடந்தார். அத்தனை நகையும் பணமும் சூறையாடப்பட்டிருந்தன.

அங்கே சிவப்புக் கறைத் துண்டுப் பிரசுரங்கள் இறைபட்டுக் கிடந்ததையொட்டி நடந்ததெல்லாம் நக்ஸலைட் லீலைகள் என்று ஊகம் செய்திருந்தார்கள். இன்று வரை குற்றவாளிகள் பிடிபடவில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

அவள் முகத்துக்கு முன்னே விரல்களால் சொடுக்குப் போட்டான் அசோக். ''ஏய் வந்தனா... என்ன ஆச்சு உனக்கு? ஏன் உன் மூஞ்சி இப்படிப் பேயறைஞ்சாப்பல ஆயிடுச்சி?''

''எனக்கென்னமோ ரொம்பப் பயம்மா இருக்கு அசோக். நிஜமாத்தான் சொல்றேன். இந்தப் பக்கமெல்லாம் நடமாடறதுக்கே கூடப் பயம்மா இருக்கு....'' — வறண்ட உதடுகளை நாக்கால் தடவி ஈரப்படுத்திக் கொண்டாள்.

''அப்படி உனக்கு ஏதாவது ஆச்சுன்னா நான் விட்டுருவனா? இதபார், நான் ஒரு தீர்மானத்துக்கு வந்துட்டேன். இடிலே உன்



எஸ். சகுந்தலா

ணைத்தான் நான் ரொம்ப எதிர்பார்க்கி றேன்.''

அவள் அவனைப் புதிரோடு நோக்கி னாள். ஏதோ பெரிய விஷயம் சொல்லப் போகிறான் என்று தோன்றியது.

''இதபார் வந்தனா, எனக்கு உத்தியோ கம் இந்த ஊருக்குள்ள கிடைக்கும்னு நம் பிக்கை இல்லை. சிடியிலே எனக்கு ஒரு ப்ரைவேட் ஃபர்ம்லே வேலை கிடைச் சிருக்கு. உங்கப்பா நியாயமா சம்மதிச்சா முறையாக் கல்யாணம் பண்ணிக்கிட்டு அங்கே போயிடலாம். இல்லே....''


''கல்யாணத்தைப் பற்றி முதல்லே எங் கப்பாவண்டை பேசலாம்னு சொன்னதே எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? முதல்லே அதைச் செய்யுங்க. அதுக்கப்புறம் மற்றதை யோசிக்கலாம்...'' அவள் உற்சாக வடிவானாள்.

''இப்ப உங்கப்பா எங்கே இருப்பார்?''


''இன்னிக்குத் திங்கள் இல்லையா? ரிசர்வ் பாங்க் போயிருப்பார். இல்லே, பாங்க்லதான் இருப்பார்.''

சற்றே ஆழ்ந்த யோசனைவசப்பட்டாற் போல் மௌனமானான் அசோக். பிறகு இறங்கிய குரலில் சொன்னான்: ''எதுக்கும் உங்கப்பாவைக் கொஞ்சம் செக்யூரிட்டி பந் தோபஸ்லோட இருக்கச் சொல்லு வந் தனா. அவர் சர்வீசான வேன் டிரைவர் தான். அதுக்காக ஹெவி காஷ் எடுத்து வர அவரையும் கூட ஒரு பாங்க் கிளார்க்கை மட்டும் அனுப்பறது தப்பு. போதுமான காபந்து வேணாமா? அதுவும் இந்த ஏரியா எப்படி?''

அசோக் சொல்வதில் அர்த்தமிருக்கிறது: அப்பாவை எச்சரிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் அதற் குத் தேவையே இல்லாமல் போகும் என்று



நீ தந்தது நிஜமானால்...



— ரா. ரகோத்தமன்.

அவன் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

வழக்கமாக மாலை ஆறு மணிக்கு வீடு திரும்பும் அப்பாவை ஏன் இன்னும் காணோம்? மணி ஏழாகப் போகிறதே! அசோக்கின் எச்சரிக்கை மனசுக்குள் ஒட்டுண்ணியாய்த் தொற்றிக் கொண்டு அவளது தைரியத்தை உறிஞ்சியது.

வந்தனா வீட்டைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டாள். பாங்க் ஆட்கள் யாரும் எதிர்ப்படுகிறார்களா என்று பார்த்துக் கொண்டே போனாள். வழியில்தான் பஞ்சாயத்துப் படிப்பகம். அசோக்கை இந்த நேரத்தில் அங்கு பார்க்க முடியும். நல்ல வேளை, அவனே வெளிவந்து கொண்டிருந்தான்.

"எங்கே வந்தனா?"

"அப்பாவை இன்னும் காணலே."

"என்னது, அப்பாவைக் காணலியா?" அவனது படபடப்பு அவளுக்கே மிகையாகத் தோன்றியது. "சரி சரி. வா, போய்ப் பார்க்கலாம்."

பாங்கை நெருங்குவதற்குள் ஊர் நிலைமையிலேயே ஒரு வித்தியாசம். ஓர் அன்னியமான கலவரம், ஒரு பரபரப்பு. கன்னா பின்னா நடமாட்டங்கள்.

"என்னங்க சமாசாரம்?"

"முந்திரிக் காட்டுப் பக்கம் பார்க்கலையா?" — நேரே போய்ப் பார்த்தால் விஷயம் தெரியும் என்று சொல்லாமல் சொல்லி விட்டு ஓட்டமும் நடையுமாய் மறைந்தார் ஒரு வழுக்கை மண்டை — கம் — பொடி மூக்குக்காரர்.

வந்தனாவின் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு ஓடாத குறையாய் விரைந்தான் அசோக்.

ஊரெல்லையிலே இருக்கிறது முந்திரிக் காடு. கெட்டியான பச்சை இலைகள் அடித்தண்டு தெரியாதபடி அடர்த்தியாய்க் கவிழ்ந்திருக்கும். உள்ளூர ஒரு கொள்ளைக் கூட்டமே படையோடு பதுங்கியிருக்கலாம். துளி ரேகை வெளித் தெரியாது. அங்கு என்ன ஆச்சு?

திடுதிப்பென்று முந்திரிக் காட்டுப் பக்கமிருந்து மானாவாரியாய்ப் புகை வருகிறதே என்று சந்தேகப்பட்டு ஓடிப் போய்ப் பார்த்தார்களாம், அந்த வட்டாரத்து மாட்டுக்காரச் சிறுவர்கள். பார்த்தால் —

"ஐயோ அப்பா...." அலறிய வந்தனா அந்த இடத்திலேயே மயங்கிச் சுருண்டாள்.

தீயில் கருகி அப்படியே கரிக்கட்டை முறுக்கலாய்க் கிடந்தார். மனிதருக்கு அவருடைய வாகனத்தின் மேல் அப்படியொரு விசுவாசம். எரிந்து பெய்ண்ட் சுருண்டு நடுநடுவே தகட்டின் இளிப்புத் தெரிய அலங்கோலமாய்க் கிடக்கும் அந்த வேனை விட்டு விலகாமல் அதனோடு ஒட்டிக் கொண்டிருந்தார் அந்த டிரைவர் — வந்தனாவின் தந்தை.

பாவம், தப்பியோட முயன்ற வங்கி ஊழியர் அரை குறை எரிவிலே — ஆனால் உடல் வெடித்து — கண்கொண்டு பார்க்கக் கூசும் அருவருப்புத் தோற்றத்திலே சற்றுத் தொலைவிலே முன்னாள் மனிதராய்க் கிடந்தார்.

கிட்டத்தட்ட எட்டு லட்சம் போல் சூறையாடப்பட்டிருக்கலாம் என்று பேசிக் கொண்டார்கள்.

அப்படியே கைத்தாங்கலாய்ச் சுமந்து கொண்டு, சுற்றிச் சூழ்ந்த அனுதாபப் பேச்சுக்கள், போலீஸ் துருவல்கள் போன்றவற்றிலிருந்தெல்லாம் தற்காலிகமாய் அவளை விடுவித்து வெளிக் கொணர்ந்தான் அசோக்.

வந்தனா, ஆற்ற மாட்டாதவளாய், "அசோக், இப்பத்தானே சொன்னே? உனக்குக் கரி நாக்கா? எங்கப்பா கரியாப் போயிட்டாரே!" என்று பொங்கிப் பொங்கி அழுது பொருமினாள்.

"எங்கப்பா யாருக்கு என்ன கெடுதல் செய்தார்?"

"பணம் வந்தனா பணம்! அதைச் சம்பாதிக்கிறவனை உறிஞ்சறவன் மோசக்காரன்கிறாங்க. காவலுக்கு நிற்கிறவனைக் காட்டிக் கொடுக்கிறவன், கருங்காலிங்கறாங்க. அவங்கதான் இந்தக் கொலையைச் செய்திருக்கிறாங்க."

"யாரு அசோக்? அவங்க யாரு? உங்களுக்குத் தெரியுமா?"

"போலீஸ் எதுக்கு இருக்கு? அவங்க பார்த்துப்பாங்க. நீ நிம்மதியா இரு."

"எங்கப்பாவைப் பறிகொடுத்துட்டு என்னை நிம்மதியா இருக்கச் சொல்றீங்களா? உங்களுக்குள்ளே இருந்த மனுஷத்தனம் அடியோடு செத்துப் போச்சா? ஓக் அசோக், நீங்க என்னைக் காதலிக்கிறது உண்மையா இருந்தா, நீங்க உண்மையிலேயே சுவு இரக்கமுள்ள மனுஷராயிருந்தால், என் அப்பாவின் சாவுக்குக் காரணமான அந்தக் கொலைகாரங்களைப் போலீசுக்கு அடையாளம் காட்டுங்க. போலீஸ்ல எப்ப அவங்களைப் பிடிச்சு அவங்க செய்த கொலைக்குத் தண்டனை கொடுக்கறாங்களோ, அன்னிக்கு நான் உங்களுக்குக் கழுத்தை நீட்ட எங்கப்பா சம்மதம் கொடுத்

டிட்டதா நினைப்பேன். அதுவரைக்கும்... ப்ளீஸ் நாம இனிமேல் சந்திச்சிக்க வேண்டாம்.''

அவள் உறுதியுடன் சொன்னாள். அசோக்கும் தலைகுனிந்த யோசனையுடன் வெளி நடந்தான்.

தந்தையைப் பறிகொடுத்த வந்தனாவுக்கு உத்தியோகம் கொடுத்து ஆதரிக்கும்படி மேலிடத்துக்குச் சிபாரிசு போயிற்று. அதற்கு ஏற்றாற்போல் ஏற்கெனவே வங்கித் தேர்வும் எழுதியிருந்தாள் அவள்.

வாத்திச்சி வந்தனா பெயர் மாறி வங்கி வந்தனாவாக உயர்வு பெற்றதைக் கூட அசோக்குடன் பங்கிட்டுக் கொள்ளவில்லை அவள். அவளுடைய தகப்பனாரை எரித்து வங்கி வேனைச் சூறையாடிச் சென்ற யாரோ கொள்ளைக்காரர்களுக்கும் அசோக்குக்கும் என்ன பிணை? போலீஸால் துப்புத் துலக்க இயலவில்லை என்றால் பாவம் அசோக் என்ன பண்ணுவான்?

அப்படியெல்லாம் அறிவுபூர்வமாய் அவளிடம் அசோக்கோ வேறு யாருமோ கேள்வி கேட்கவில்லை. அவளும் தன்னைத் தானே கேட்டுக் கொள்ளவுமில்லை. ஏதோ ஓர் அசட்டுப் பிடிவாதம். என்னவோ ஒரு வீம்பு. தன் தந்தையைக் கொலை செய்து கொள்ளையடித்த அந்தக் கும்பல் என்றைக்குப் போலீசிடம் பிடிபடுகிறதோ அன்றைக்குத் தன் காதல் பற்றி மறுபரிசீலனை செய்யலாம் என்பதில் அவள் உறுதியாக நின்றாள்.

ஆச்சரியம்! போலீசுக்கு ஒரு மொட்டைக் கடிதம் வந்து சேர்ந்தது. இந்தக் கொள்ளையில் சம்பந்தப்பட்டவர்கள் நக்ஸலைட் கும்பலாய்த்தான் இருக்க வேண்டும் என்று சந்தேகப்பட்டதென்னவோ உண்மைதான். அதை உறுதி செய்வது போல் துப்புக் கொடுத்துக் கடிதமே வந்திருந்தது.

அன்றைய தினமே அசோக்கிடமிருந்தும் அவளுக்கு ஒரு கடிதம் வந்தது.

'வந்தனா, நான் உன்னைக் காதலிக்கிறது உண்மை. இந்த ஊரை விட்டுப் போய்க் கண் காணாமல் நீயும் நானும் கணவன் மனைவியாய் வாழணும் என்று நான் ஆசைப்படறது உண்மை. என் நெஞ்சிலே ஈவு இரக்கம், மனுஷத்தனம் எல்லாம் இருக்கிறது உண்மை. கூடிய சீக்கிரம் காவல் நிலையத்திலேயிருந்து உனக்கு நல்ல வார்த்தை வரும் என்று நம்பும், அசோக்.'

காவல் நிலையத்துக்குப் போய் விசாரித்தால் தெரியும். அதென்ன நல்ல செய்தி?

கொள்ளைக் கும்பல் பிடிபட்டு விட்டதாம். ஜவ்வாது மலையில் அந்த நக்ஸலைட் கோஷ்டி எங்கே ஒளிந்திருக்கிறது என்று விவரமாகத் தெரிவித்து ஒரு மொட்டைக் கடிதம் வந்ததாம். அந்தக் கடிதம் எழுதிய 'மக்கள் நலம் விரும்பி' யாராய் இருக்கும் என்று அவர்களால் ஊகிக்க முடியவில்லை.

''அவர் பெயர் அசோக். எனக்காகத்தான் அவர் மெனக்கெட்டுத் துப்புத் துலக்கி உங்களுக்கு நியமிக்கப்படாத இன்பார்மராய் இருந்திருக்கிறார்' என்று நாக்கு நுனி வரை வந்த வார்த்தைகளை விழுங்கிக் கொண்டாள் வந்தனா.

ஜோலார்ப் பேட்டை ஜங்ஷனில் ஏக பரபரப்பு.

''மொத்தம் நாலு பேராமில்ல? எல்லாம் வயசுப் புள்ளைங்க.''

''பார்த்தா இந்தப் புள்ளையும் பால் குடிக்குமான்னு எத்தனை பதவிசா இருக்காளுங்க...''

''திருப்பத்தூர் ஜோதி பவன்லே இவனுங்க டிபன் சாப்பிட்டதை நான் கூடப் பார்த்திருக்கேன். எத்தனை ஜெண்டிலா நடந்துக்கிட்டானுங்க! நம்பவே முடியலியே?''

தலைக்குத் தலை அவர்களைப் பற்றி விமரிசித்தார்கள். அவர்கள் கொள்ளைக்காரர்கள், கொலை செய்தார்கள் என்று நம்ப மாட்டாமல் அவரவரும் மூக்கில் விரல் வைத்தார்கள்.


காவலர்கள் நால்வர் நீட்டிக் கொண்டிருந்த துப்பாக்கிச் சனியனோடு அவர்களுக்குக் காவலில் அணைப்புக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நெருக்கடியிலும் அவர்களுக்குத் தலைவர் போல் தோன்றிய குறுந்தாடி இளைஞன் ஒருவன் விலங்குக் கையில் ஆங்கிலத் தினசரி ஒன்றை விரித்துப் பிடித்தபடி முகத்தில் எந்தக் கலவரமுமின்றிப் படித்துக் கொண்டிருந்தான்.

பெங்களூர் மெயில் வந்து நின்றது. சென்னை செல்லும் வண்டி. தலைமைக் காவலர் ஒருவர் அவர்களை லேசாகத்தான் இடித்தார். சிலிர்த்துக் கொண்டு தலைவன் திரும்பி நோக்கிய முறைப்பில் அவர் தன்னால் ஒடுங்கி, கெஞ்சுதலாய்ப் பார்த்தார். தோரணையுடன் நால்வரும் ஒரு கம்பார்ட்மெண்டில் ஏறிய பிறகு காவலர்கள் தொற்றிக் கொண்டார்கள். பயணிகள் அச்சம் கலந்த மரியாதையுடன் ஒதுங்கி வழி விட்டார்கள்.

கம்பார்ட்மெண்ட் வாசல் கதவையொட்டிய நீள பெஞ்ச் அவர்களுக்காகக் காலியாயிற்று. அமர்ந்தார்கள்.

மெயில் வாணியம்பாடி ஆம்பூர் — கிராஸிங்குக்கு நின்று தாண்டிக் குடியாத்தம் நெருங்கிக் கொண்டிருந்தது. அதற்கு மேல் காட்டு வெளி, மலையடிவாரப் பகுதி போல் ஓர் இடம். ரயில் பாதையில் ஏதோ ரிப்பேர் போலும். மெயில் வேகம் சற்றுத் தணிந்து தடக் தடக் தாலாட்டுக் கேட்டது. திடுதிப்பென்று —

அந்த நாலு பேருக்குள்ளிருந்து ஒரு புயல் உற்பத்தியானது போல் பயங்கரமாய் ஒரு வீச்சு. கண்ணிமைக்கும் நேரம்தான். அந்த நாலு காவலர்களிடமிருந்த இரண்டு துப்பாக்கிகளும் பறி முதலாயிற்று. விலங்கிட்ட கையாலேயே துப்பாக்கியை இயக்கினார்களென்றால்.. அடேயப்பா! எத்தனை



— ரா. ரகோத்தமன்.

பயிற்சி பெற்றவர்களாய் இருக்க வேண்டும். காவலர்கள் கவிழ்ந்து கிடக்க —

அவர்கள் நால்வரும் வெளியே தாவிய மறுகணம் மெயில் வேகம் பிடித்தது.

திக்பிரமையில் ஆழ்ந்திருந்த கூட்டம் தெளியுமுன் புத்திக்கு உரைத்து யாரோ அபாயச் சங்கிலியை இழுக்கு முன் அங்கே அந்த அதிசயம் நிகழ்ந்தது.

பின்னாலிருந்த ஏதோ ஒரு கம்பார்ட்மெண்டிலிருந்து யாரோ அந்த அசாம்பாவிதத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தது போல் வெடிகுண்டு வீசினார்கள், தப்பியோடிய அந்த நாலு பேருக்குக் குறி வைத்து.

அந்த நாலு பேரும் தூக்கியெறியப்படுவது சந்தோஷமாய்த் தெரிந்தது. வாக்குவம் பிரேக்கில் ரயிலும் இழுத்துப் பறித்து நின்றது.

காவலர்கள் முன்னால் இறங்கி ஓட, தைரியசாலி இளைஞர்கள் ஏழெட்டுப் பேர் அவர்களைத் தொடர விலங்கிட்ட நால்வரும் சாகவில்லை. குற்றுயிராய் இருந்தார்கள். தப்பியோடத் திமிறினார்கள். சக்தி இருந்தது. அடிபட்ட சிறுத்தையை வலை போட்டுப் பிடிப்பதைப் போல் அமுக்கிப் பிடித்து விட்டார்கள்.

அதே சமயம் வேறு கம்பார்ட்மெண்டிலிருந்த ரயில்வே போலீசாருக்கு இன்னொரு முக்கியமான கடமை இருந்தது. ரயிலில் வெடிகுண்டு கொண்டு வந்த அந்தக் குற்றவாளி யார்? தேடிப் போனார்கள். அவர்கள் வேலையைச் சுலபமாக்கி விட்டார்கள் அந்தக் கம்பார்ட்மெண்ட் பயணிகள்.

''இதோ பாருங்க இவர்தான். சமயத்திலே இவர் மட்டும் வெடிகுண்டு வீசாம இருந்திருந்தா அந்தக் கொலைகாரக் கும்பல் பிடிபட்டிருக்குமா?'' என்று ஓர் இளைஞரைப் பாராட்டிக் காட்டிக் கொடுத்து விட்டார்கள்.

''வெடிகுண்டு வீசினது நீதானா?''

''யெஸ்.'' எதிர்பார்த்ததுதான். அவன் நீட்டிய கைக்குக் காப்பு மாட்டி இழுத்துக் கொண்டு போனார்கள்.

காவல் நிலையத்தில் அந்த இளைஞன் மேலதிகாரியின் விசாரணைக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

''நானும் அவர்களுடைய கோஷ்டியைச் சேர்ந்தவன். ஆனால் பாங்க் வேனைக் கொள்ளையடித்ததில் எனக்குச் சம்பந்தமில்லை. சொல்லப் போனால் அந்தக் கொள்ளைக்குத் திட்டமிட்ட போது நான் அதைத் தடுக்க வேண்டும் என்று எத்தனையோ எடுத்துச் சொன்னேன். அவர்கள் கேட்கவில்லை.''

''அதை மட்டும் தடுப்பதில் உனக்கு என்ன அக்கறை?''

''நாங்கள் இதுவரை சமுதாயத்தைச் சுரண்டும் பண முதலைகளைத்தான் கொன்றிருக்கிறோம். கொள்ளையடித்திருக்கிறோம். இதிலே பாங்க் பணத்தைக் கொள்ளையடிக்கச் சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருக்கும் டிரைவரையும் கிளார்க்கையும் கொலை செய்வது எனக்கு நியாயமாகப் படவில்லை.''

''உங்களுக்குக் கூட நீதி, நியாயம், மனுஷத்தனம் இதெல்லாம் இருக்கிறதா மேன்?''

''என்னைப் பொறுத்த வரைக்கும் இருக்கு சார். உங்களுக்குத் தெரியாது சார். நான் ஒரு பெண்ணைக் காதலிச்சேன். அவளுக்காக நான் இந்தக் கோஷ்டியிலேர்ந்தே விடுபட்டுக் கண் காணாம எங்கியாவது போய் அவளோட வாழணும்னு ஆசைப்பட்டேன். ஆனா பாவிங்க என்னை விடுவிக்கச் சம்மதிக்கலே. அவங்களண்டையிருந்து என்னை விடுவிச்சிக்க எனக்கு வேற வழி தெரியலே. அவங்க இருப்பிடத்தை எழுதிப் போட்டவன் நான்தான். தப்பியோடின அவங்களை உங்களுக்குப் பிடிச்சுக் கொடுக்கிறதுக்காகக் குண்டெறிஞ்சவனும் நான்தான்.''

''கோர்ட் விசாரணையிலே இதையெல்லாம் சொல்லு. நீ நாட்டு வெடிகுண்டு தயாரிச்சு வச்சிருந்த குற்றத்துக்காக உன்னை ரிமாண்டிலே போட வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கிருக்கு....'' என்றார் அந்த அதிகாரி.

நீரில் நீந்தும் நிலா

சுபா

தோட்டத்தின் மூலையில் ஒரே ஒரு வெள்ளை ரோஜா மட்டும் முழுதும் பழுதுபடாமல் வளைந்திருந்தது. 'வா' என்று மதுமதியை அழைத்தது. வேலிப் படலை மிதித்து இன்னும் கீழே சரித்துக் கொண்டு அதனருகே பாய்ந்து ஓடினாள். கால்கள் சேற்றில் சிக்கி, எடுக்க வராமல் கீழே சரிந்தாள்.

சந்திரமௌலி பதற்றத்துடன் தாவி ஓடினான். அதற்குள் மதுமதி அவசரமாய் எழுந்து அந்தப் பூவை நெருங்கி மெல்ல ஒரு விரலால் தீண்டினாள்.

''சிவா'' என்றாள் கிசுகிசுப்பாய். பதில் சொல்லாமல் பூ அவளுக்காகக் காத்திருந்தது. அதன் காம்பை இருவிரல்களால் பறித்து எடுத்தாள். தலையில் வலது பக்கம் செருகினாள். விரல்களில் முள் தைத்த சிவப்புப் புள்ளிகள்.

''சிவா... சிவா'' என்று அரற்றிக் கொண்டே மதுமதி சரிந்தாள். மயங்கினாள்.

சுவர்க் கடிகாரத்தின் டிக், டிக். வெளியில் சரசரவென்று மழை. மதுமதி ஒருமுறை புரண்டு படுத்தாள். கண்களைத் திறந்து கடிகாரத்தைப் பார்த்தாள். பச்சை முட்கள் செங்குத்தாய் நின்றன. தூக்கம் வரவில்லை.

சாயங்கால நிகழ்ச்சிகள் மனத்தைச் சுரண்டின. மயக்கம் தெளிந்ததும் முதல் காரியமாய் அந்தத் தோட்டக்காரனைப் போய்ப் பார்த்ததும், அவன் ''என்னை மன்னிச்சிடுங்கம்மா... திடீர்னு அம்மா செத்துப் போய்ட்டாங்கன்னு தகவல் வந்தது. ஒண்ணும் புரியாமல் எல்லாத்தையும் விட்டுட்டு ஓடி வந்துட்டேன். ரெண்டு நாளா அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அசைய முடியலை... மத்தியானம்தான் போய்ப் பார்த்தேன். துடிச்சிப் போய்ட்டேன். காரியமெல்லாம் முடிஞ்சதும் உங்க தோட்டத்தைப் பழைய படி ஆக்கிடறேன்'' என்று சொன்னதும் ஞாபகம் வந்தது.

'செத்துப் போகிறவர்கள் பாடு எவ்வளவோ தேவலை.'



இசுரென்று முன்னறையிலிருந்து மெலிதான குரல்கள் மிதந்து வந்தன.

''ப்ளீஸ் மீரா. கொஞ்சம் மெதுவாப் பேசேன். ஹால்ல மது படுத்திட்டிருக்கா. அவளுக்குக் கேட்டுடப் போகுது'' என்று அதட்டும் பாவனையில் சந்திரமௌளியின் குரல் கேட்டது.

''மது... மது... மது... எப்பப் பாத்தாலும் அவ நெனைப்புத்தானா உங்களுக்கு?''

''மது இல்லேன்னா நீயும் இல்லே, நானும் இல்லே மீரா.''

''அப்ப அவளையே கல்யாணம் பண்ணிட்டிருக்கணும். பேருக்கு என்னையும் ஆசைக்கு அவளையும்...''

''மீரா.''

''என் வாயையே மூடப் பாருங்க. நான் வெளியில கூப்பிட்டா அப்புறம் போகலாம். தலைவலி, முதுகுவலின்னு ஏதாவது சொல்ல வேண்டியது. அவ கூப்பிட்டா சொடக்குப் போடற நேரத்துல வாசப் பக்கம் போய் நிப்பீங்க. உங்களுக்குத்தான் தெரியலை... அவளுக்காவது தெரிய வேணாம்?''

மதுமதி காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

'கடவுளே, செத்துப் போனவர்கள் பாடு எவ்வளவோ தேவலை. கடவுளே செத்துப் போனவர்கள் பாடு எவ்வளவோ தேவலை'



சிவா... ஏன் சிவா இப்படி என்னைத் தவிக்க விட்டுப் போய் விட்டீர்கள்?

"ஏன் மது திடீர்னு வேலையை விடணும்?'' என்று கேட்டாள் ரோகிணி.

''எல்லாமே சலிச்சிப் போய்டிச்சிம்மா."

''மது...'' என்று வாயில் வார்த்தை வராமல் தவித்தாள் ரோகிணி. ''மேலே என்ன பண்ணப் போறே?''

''என் மாமியார் வீட்டுக்குப் போகப் போறேன். நான் இங்கே இருந்த வரைக்கும் போதும். மீராவுக்கு வேலை கெடைச்சாச்சி. வீட்டுக்கு ஓர் ஆண் துணை வந்தாச்சி...''

''அதனால?''

''நான் எனக்காக வாழ வேண்டாமாம்மா?''

''அவங்க வீட்ல இதை ஒத்துப்பாங்களா மது?''

''சிவா வீட்லயா? என்னம்மா இது? அவங்கதான் வருந்தி வருந்திக் கூப்பிடறாங்களே. நீயும் புறப்படறே. நான் போன் பண்ணி அவங்க வீட்ல சொல்லிட்டேன். விஜி ரொம்ப சந்தோஷப்பட்டா.''

''நீ போய்த்தான் ஆகணுமா மது?''

''முடிவு பண்ணிட்டுத்தான் அவங்களுக்கு ஃபோன் பண்ணினேன்மா....''

"சீச்சி... இந்த நாளுக்காகத்தான் நான் காத்துக்கிட்டிருந்தேன். ஒரு நிம்மதிக்காகத்தான் நான் இப்ப அங்கே போறேன். அப்பப்ப இங்கேயும் வந்து போய்க்கிட்டிருப்பேன். கண்ணைத் தொடச்சிக்கோ. நீ சந்தோஷமாயிருக்கணும் மீரா. சந்துருவையும் சந்தோஷமா வச்சிக்கணும்.''

''மதுக்கா.''

''உனக்கும் பொறுப்பான வேலையைக் கொடுத்திருக்காங்க. பேரைக் காப்பாத்திக்க.''

''மதுக்கா...''

''அழாதே மீரா... அழாதே... சென்ட்ரலுக்குச் சந்துரு மட்டும் வந்தாப் போதும்.''

சென்ட்ரல் ஸ்டேஷனில் அவரவர்கள் தங்கள் சந்தோஷங்களையும், துக்கங்களையும் வழிய விட்டுக் கொண்டு, சிவப்புச் சட்டைக் கூலிகள் பின் தொடர நடந்தார்கள்.

கடைசி நேரப் பரபரப்பில் பிளாட்ஃபாரமே புரண்டு கொண்டிருந்தது.

''மது! நான் இதை எப்படித் தாங்கிக்கப் போறேன் மது. என் லைஃப் ஆம்பிஷனே உன்னைப் பார்த்துக்கறது தான்னு இருந்தது மது. இப்ப நீயே பிரிஞ்சி போய்ட்டா...?''

''நான் என்ன ஃபாரினுக்காப் போறேன்? பெங்களூர்தானே! மீராவை இனிமே சந்தோஷமா வச்சிக்க சந்துரு."

சந்திரமௌலி அடிபட்டவன் போல் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

''எனக்கு ராத்திரி நேரங்கள்ல சரியாத் தூக்கம் வரதில்ல சந்துரு. ஒரு வாரமா எனக்கு அப்படித்தான். திருவான்மியூர்த் தோட்டம் நாசமாகிப் போனதில எனக்கு மெட்ராஸ் மேல வெறுப்பு வந்தாச்சி சந்துரு. இனிமே என்னை நம்பித்தான்னு யாரும் இல்ல. அதனால எல்லாத்தையும் மறந்துட்டு முழுக்க முழுக்கச் சிவாவை நெனச்சி வாழணும்னு துடிப்பாயிருக்கு சந்துரு. இல்லேன்னா தற்கொலை பண்ணிக்கலாம்னு அடிக்கடி வர டெம்ப்டேஷன் என்னைக் கொன்னுடும்.''

''மது...''

''ஆம்பிளை அழக் கூடாது சந்துரு. ஆம்பிளை அழக் கூடாது. குட்—பை.

ரயில் மெல்ல நகர்ந்தது.



எழுத்தாளர்: என்னோட தொடரைப் போட்டப்புறம் சர்க்குலேஷன் எப்படி இருக்கு?

ஆசிரியர்: அது சறுக்குலேஷன் ஆயிடுச்சு!

— கீழை. அ. கதிர்வேல்.

செட்டில் விதியே என்று காத்திருந்த ஒரே ஒரு காக்கிச் சட்டைக்காரன், பிருத்விராஜையும், ஸ்ரீநாத்தையும் எரிச்சலுடன், செருகிய கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஸ்ரீநாத் அவனைப் பார்த்து விட்டு மணிக்கட்டைப் பார்த்தான்.

''வா, போகலாம்'' என்று எழுந்து கொண்டான். காக்கிச் சட்டைக்காரனை நெருங்கி, ''ஸாரிப்பா'' என்று சொல்லி விட்டு அவன் பதிலுக்குக் கூடக் காத்திராமல் குறுக்கில் ஓடிய ஒயர்களை மிதித்துக் கொண்டு வாசலுக்கு வந்தான்.

பிருத்விராஜும், அவனும் வீடு போய்ச் சேரும் வரை பேசிக் கொள்ளவே இல்லை.

''புனிதா தூங்கியாச்சா கிருஷ்ணா?''

''இல்லைங்க. புஸ்தகம் படிச்சிட்டிருக்காங்க,'' என்றான் வேலையாள் கிருஷ்ணன்.

அவள் தூங்கப் போயிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்துக் கொண்டான் பிருத்விராஜ். கதையைத் தவிர வேறு பேச்சுப் பேசவே பயமாக இருந்தது அந்த வீட்டில். எதற்குத் தயங்க வேண்டும்? சொல்லி விடலாமே. சொல்லி விட்டால் முள் வெளியே வந்து விழுந்து விடுமே.

''ஸ்ரீநாத் உங்கிட்ட கொஞ்சம் பேசணும்'' என்றான் பிருத்விராஜ். அவனுக்

காக ஒதுக்கப்பட்ட அறை வாசலில் நின்று கொண்டு.

''பேசலாமே! கம் ஆன் ட்ரஸ் சேஞ்ச் பண்றது எல்லாம் அப்புறம்'' என்று பிருத்வி ராஜின் அறையில் நுழைந்தான் ஸ்ரீநாத்..

''ஹலோ ப்ரதர்'' என்றாள் அறையில் அமர்ந்திருந்த புனிதா.

''புனிதா...'' என்றான் ஸ்ரீநாத் ஆச்சரியமாய். ''புஸ்தகம் படிச்சிட்டிருக்கேன்னு கிருஷ்ணன் சொன்னான்?''

''இவர் அறையில்தான் உக்காந்து படிச்சிட்டிருந்தேன். நீங்க வந்துட்டீங்க. அவர் அறையிலே அவரோட பர்மிஷன் இல்லாம புகுந்துட்டேன்னு பிருத்வி தப்பா நெனைச்சிட்டா என்ன செய்யறதுன்னு எழுந்து வரப் பார்த்தேன். அதுக்குள்ள நீங்க வந்துட்டீங்க. ஸாரி பிருத்வி...''

''எதுக்கு ஸாரியெல்லாம்? இது உங்க வீடு. எங்க வேணாப் போகலாம். வரலாம். ஒரு வகையில் நீ இருக்கிறதும் நல்லதுதான். உக்காரு. போக வேணாம். நான் சொல்ல வந்ததைச் சொல்லிடறேன்.''

பிருத்விராஜ் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். ஸ்ரீநாத் கட்டில் மேல் உட்கார்ந்து கொண்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்,

ஒரு கனமான மௌனம். பிருத்விராஜ் தான் உடைக்க வேண்டியிருந்தது.

''நான் அனாதை ஆசிரமத்துக்காரன். எதனால் அனாதையானேன்? எங்கம்மாவை ஒரு பெரிய பணக்காரன் லவ் பண்ணான். அம்மா ஏமாந்துட்டாங்க. நான் பொறந்துட்டேன். நான் அம்மா வயத்துல ஏறினவுடனேயே பணக்காரன் அம்மாவை விட்டுட்டுப் போய்ட்டான். முதல்ல தொழிலை மாத்திக்கிட்டான். அப்புறம் ஊரை மாத்திக்கிட்டான். எனக்குப் பழி வாங்கணும்னு எல்லாம் தோணலை. அம்மா கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்திருக்கலாம்னுதான் தோணிச்சி. என்னைப் பெத்த உடனேயே அனாதை ஆசிரமத்துக்குக் கொண்டு வந்துட்டாங்க. அனாதை ஆசிரமத்தைப் பார்த்துக்கிட்டிருந்தவர் ஒரு பெரியவர். அம்மாவும் அங்கேயே வந்து சேர்ந்துட்டாங்க. ஒவ்வொருத்தருக்கு அம்மா ஏமாந்துட்டா ஒவ்வொரு மாதிரி ஐடியா வரும். எனக்கு வந்த ஐடியா வேற மாதிரி. கொஞ்சம் கொஞ்சமா நான் வளர வளர அம்மா அவங்க கதையைச் சொன்னாங்க. 'என்னை ஒரு பணக்காரன் ஏமாத்திட்டான்டா'ன்னு அழுதாங்க. ஏமாந்துட்டோமேன்னு மிச்சமிருக்கற நாள் எல்லாம் கவலைப்பட்டதிலயே... ப்ச்... அம்மாவும் போய்ட்டாங்க...''

''உங்கப்பா இப்ப எங்கே இருக்கார் பிருத்வி?''

''அவரைப் பத்தித்தான் நான் கவலைப் படவே இல்லியே. எனக்குத் தோணின ஐடியாவே வேறன்னு சொன்னேனே. நான் ஒரு பெரிய பணக்காரனா ஆகணும். ஓர் ஏழைப் பொண்ணை லவ் பண்ணணும். அவளைக் கல்யாணம் பண்ணிக்கணும். சந்தோஷமா வச்சிக்கணும். சந்தோஷமா இருக்கணும். ஊர்ல நாலு பேர் 'பார்யா இப்படி ஒரு பையன்'னு சொல்லணும்னு தான் நான் ஆசைப்பட்டேன். எங்க அனாதை ஆசிரமத்திலேயே மதுமதின்னு ஒரு பொண்ணு. சின்ன வயசிலேர்ந்து எங் கூட வளர்ந்தவ. கையில் காசுங்கறதையே பாக்காதவ. புத்திசாலி. நல்ல அழகு. அவ மேல எனக்கு ஒரு மயக்கம். லவ் பண்ணினேன். மதுமதி, மதுமதின்னு உருகினேன். என் காதலை அவகிட்ட சொல்லவேயில்ல. நான் பெரிய ஆளா ஆகலியே. சிங்கியடிச்சிட்டிருக்கறவன் எப்படி காதலைப் பத்திப் பேச முடியும். நான் கொஞ்சம் பணம் சேர்த்தவுடனே அவகிட்ட சொல்லலாம்னு நெனைச்சிட்டிருந்தேன்... ப்ச்.''

''ஏன்... என்ன ஆச்சி?'' என்றாள் புனிதா, லேசான எதிர்பார்ப்புடன்.

''எனக்கு 'லக்' இல்ல. அந்த மதுமதி செத்துப் போய்ட்டா. மஞ்சள் காமாலைன்னாங்க. லிவர் சரியா ஃபங்ஷன் பண்ணலேன்னாங்க. போய்ட்டா. நான் அவ மூஞ்சைக் கூடப் பாக்கலே. ஏன்னா கடைசி வரைக்கும் படுக்கையில் கெடக்கற மொகமே ஞாபகத்தில் வரும்னு. எம் மதுமதி சிரிச்சிப் பாத்திருக்கேன். அதையே ஃப்ரேம் ஃப்ரேமா மனசில் மாட்டியிருக்கேன். எங்கம்மா ஏமாந்தது, மதுமதியை நான் லவ் பண்ணினது எல்லாம் வெச்சித்தான் நான் இந்த நீரில் மிதக்கும் நிலாவை உருவாக்கினேன். பணக்காரப் பையன்னா ஏமாத்திட்டுத்தான் போகணுமா? இல்லை. அப்படிக் கெடையாதுன்னு சொல்றதுக்காகத்தான் சிவாவைப் படைச்சேன். சிவா வேற யாருமில்ல, நான்தான். வெயிட். நான் பாய்ன்டுக்கு வந்துடறேன். நான் இளங்குமரன் கிட்ட சேந்த மொத நாளே மறுபடி என் மதுமதியைப் பாத்துட்டேன். ஷில்பாவா அவ இருந்தா. செத்துப் போன மதுமதி ஷில்பா மாதிரியே இருப்பா. அந்த ஒரு காரணத்தினாலேயே ஷில்பாவை நான் லவ் பண்ண ஆரம்பிச்சிட்டேன், என்னை அறியாமயே. ஷில்பாகிட்ட நான் அதைச் சொல்லலை. நான் உண்மையா லவ் பண்றது மதுமதியை. அவளை மாதிரியே நீ இருக்கே. அதனால நான் உன்னை லவ் பண்றேன்னு அவகிட்ட எப்படிச் சொல்றதுன்னு தவிச்சிட்டிருந்தேன்... ஆனா என்னை லவ் பண்ற விஷயத்தை எங்கிட்ட அவளே சொல்லிட்டா....''

பிருத்விராஜ் பேசுவதை நிறுத்தினான். தலையைக் குனிந்து கொண்டான்.

''கங்கிராட்ஸ்'' என்றான் ஸ்ரீநாத், விழியோரத்தில் துளித்து இருந்த நீரை மற்ற இருவரும் அறியாமல் துடைத்துக் கொண்டு.

''புனிதா நான் உன்னை....'' பிருத்விராஜ் வார்த்தை வராமல் தவித்தான். அவளை நிராகரிக்கும் விஷயத்தை எப்படி அவளிடம் அப்பட்டமாகச் சொல்ல முடியும்.

''கங்கிராட்ஸ்'' என்றாள் புனிதா.

(தொடரும்)



மின்கம்பியில் வரிசையாக அமர்ந்திருக்கும் ஊர்க்குருவிகளைப் போல, கல்லூரி வளாகத்தின் கட்டைச் சுவரின் மீது காலாட்டிக் கொண்டு இருந்த அரும்பு மீசை மாணவர் கோஷ்டி, வண்ணத்துப் பூச்சிகளின் கூட்டமாகச் சமீபித்துக் கொண்டு இருந்த மாணவிகளை எதிர்நோக்கி, ஆவலோடு காத்திருந்தது.

சற்றுத் தள்ளி அமர்ந்து, பாடப்புத்தகத்தைப் புரட்ட முயன்றான் ரவிக்குமார்.

''என்னடா மச்சி, 'நாங்கள்லாம் கலர் பார்க்கத் தயாராகிட்டு இருக்கோம். நீ மட்டும் பொறுக்கித்தனமாப் படிக்க ஆரம்பிச்சுட்டியே?''

மனத்தில் மண்டிய எரிச்சலைக் கூட்டி விழுங்கினான் ரவிக்குமார். ''ப்ச், ஏண்டா என்னைத் தொல்லைப்படுத்தறீங்க?''

''அடேய், இதெல்லாம் அனுபவிக்காம அப்புறம் என்னடா? காலேஜ் லைஃப் வேண்டிக் கிடக்குது?'' எனச் சலித்துக் கொண்டான் ஒரு கிருதா. ''உன்னால் மாணவர் சமூகத்துக்கே பெரும் இழுக்குடா.''

''எனக்கு விருப்பமில்லைன்னா விட்டுடுங்களேண்டா, ப்ளீஸ்...''

அதற்குள் மாணவிகள் வண்ணங்களும், வாசங்களுமாக நெருங்கினர். தான் மட்

மாணவக் காதல்



விலகிச் சென்ற மாணவிகள் அந்த மாணவர் கோஷ்டியை வாய்க்குள்ளாகவே வைதனர்.

''ஏண்டி எல்லோரையும் ஒட்டுமொத்த மாத்திட்டதீங்க?'' என்றாள் ஒருத்தி.

''பின்னே?''

''அந்த ரவிக்குமார் ரொம்ப நல்லவர்டி. அவர் நம்மை நிமிர்ந்து கூடப் பார்க்கறதில்லை. வேற வழி இல்லாமதான் அந்த நாகரிகமில்லாத முண்டங்களோட உட்கார்ந்திருக்கார். அவனுங்களுக்கு அவர் அட்வைஸ் செய்யறதை நான் பலமுறை கவனிச்சிருக்கேன்.''

இந்த வார்த்தைகளை அனைவருமே ஏகமனதாக ஆமோதித்தனர்.

மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டாள் திவ்யா. அவள் அறிந்த விஷயம்தான் இது. ரவிக்குமாரின் மீது எப்போதுமே அவளுக்குத் தனி மதிப்பும், மரியாதையும் உண்டு.

இதுவரை இருவரும் பேசிக் கொண்டதில்லை என்றாலும், பல விஷயங்களில் அவர்களுக்குள் ஒற்றுமை இருந்தது. வகுப்பில், இருவருமே அதிகம் பேசாதவர்கள். மற்றவர்களுடன் கண்ணியமான முறையில் பழகும் தன்மையுள்ளவர்கள். படிப்பில் இருவருமே முதன்மையானவர்கள். அதாவது, ஆண்களில் அவன், பெண்களில் அவள். இப்படிப் பல.

இப்போதும் தோழிகள் ரவிக்குமாரைப் பற்றி உயர்வாகப் பேசியதும் ஏற்பட்ட உந்துதலால், திரும்பிப் பார்த்தாள் திவ்யா. அதே வினாடியில், அவனும் அவளை நோக்கினான்.

பார்வைகள் சந்தித்துக் கொண்டன. கண நேரத் திகைப்பிற்குப் பின், விழிகளை விலக்கிக் கொண்டனர் இருவரும்.

தன் தோழிகளோடு சேர்ந்து கொண்டு குறுகுறுப்பாக நடந்தாள் திவ்யா.

டுமே அப்போதைக்கு சூப்பர் ஸ்டார் என்ற நினைப்பில், ஆளாளுக்குக் 'கமெண்ட்' அடிக்க ஆரம்பித்தனர்.

இவர்களுக்கும், எனக்கும் சற்றும் சம்பந்தமில்லை என்பது போல, ஒதுங்கி அமர்ந்திருந்தான் ரவிக்குமார்.

கல்லூரியின் காலை நேரமாதலால், இன்னும் வகுப்பறை முழுமையாக நிரம்பவில்லை.

டார்வின் கோட்பாடுகளை அக்கு

இராஜா.பாலச்சந்தர்

வேறு, ஆணிவேறாகக் குதறிக் கொண்டு இருந்தார் பேராசிரியர். மாணவர்கள் கவனமாகக் குறிப்பெடுத்துக் கொண்டு இருந்தனர். சிலர் ரகசியமாகக் 'கடி' ஜோக்குகளில் லயித்திருந்தனர்.

முக்கியமான ஒரு புத்தகத்தைக் கட்டைச் சுவரின் மீதே வைத்து விட்டு வந்து விட்டது நினைவுக்கு வரவே, எழுந்து நின்றான் ரவிக்குமார். வினாக் குறியோடு தன்னை ஏறெடுத்த பேராசிரியரிடம் அனுமதி பெற்று, அவசரமாக வெளியேறினான்.

அதே சமயம், சற்று தாமதமாகக் கல்லூரிக்கு வந்த திவ்யா, அதே அவசரத்தோடு வகுப்பறையின் வாயிலுக்கு நேராக வந்தாள்.

தவிர்க்க இயலாமல் போனதால், இருவரும் நேருக்கு நேராக மோதி, ஒன்றாகக் கீழே சரிந்தனர். இருவருக்குமே பலமான அடி.

தன்னைச் சுதாரித்துக் கொண்டு எழுந்தான் ரவிக்குமார். அனிச்சைச் செயலாக, இன்னும் எழ முடியாமல் தரையில் துவண்டிருந்த திவ்யாவின் சிவந்த இடையை அணைத்துத் தூக்கி விட்டான்.

இருவரும் தடுமாற்றங்களோடு, "ஸாரி...." சொல்லிக் கொண்டனர்.

சில வினாடிகளில் நிகழ்ந்து முடிந்து விட்ட இந்தச் சம்பவத்தைக் கண்டு, மொத்த வகுப்பும் ஸ்தம்பித்து விட்டது. மாணவ, மாணவிகளுக்கு அது ஒரு தித்திப்பான காட்சியாக இருந்தது.

எழுந்து நின்ற திவ்யா, கலைந்திருந்த தன் உடைகளைச் சரிசெய்தபடி திரும்பி ஓடினாள். நாணம் மேலிடப் பெண்கள் ஓய்வறைக்குள் புகுந்து கொண்டாள்.

கைகளைப் பிசைந்தபடி நின்ற ரவிக்குமார், வராந்தாவில் நடக்க ஆரம்பித்தான். கட்டைச் சுவரை அடைந்தான். தேடி வந்த புத்தகம் அங்கே பத்திரமாக இருந்தது.

அதே இடத்தில் அமர்ந்தான்.

ஒரு பருவப் பெண்ணோடு முதன் முறையாக — அதுவும் அனைவரின் முன்னிலையில் மோதிக் கொண்டதால் ஏற்பட்ட உடல் நடுக்கமும், பதைபதைப்பும் இன்னும் அவனை விட்டு விலகவில்லை.

பெண்கள் அறைக்குள், மேசை மீது தலை கவிழ்ந்து அமர்ந்திருந்த திவ்யாவின் நிலைமையும் அதே விதமாகவே இருந்தது. எச்சிலைக் கூட்டி விழுங்கிய போது, தொண்டைக் குழியில் இன்ப அடைப்பு ஏற்பட்டது. மார்புக்குள் பலமாகக் கடிகாரம் இயங்கியது.

வகுப்பு முடிந்து வெளியேறிய மாணவர்கள், ரவிக்குமாரைச் சூழ்ந்து கொண்டனர். ஆபாசமாகக் கலாட்டாச் செய்தனர். "என்னடா மச்சி, பஞ்சு மெத்தை எப்டிம்மா இருந்துச்சு? கொடுத்து வச்சவம்பா நீ."

பெண்களின் அறையில் படாதபாடு பட்டாள் திவ்யா. அவளை மொய்த்த குறும்புக்காரத் தோழிகள் கேலி செய்தனர், "என்னடா கண்ணு, மேனி எப்டிடா இருக்கு? ஒத்தடம் கொடுக்கணுமா?"

நாணத்தால் சிவந்து விட்ட முகத்தை, விரல்களால் மறைத்துக் கொண்டாள் திவ்யா.

இரவு மணி பதினொன்று.

உறக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டு இருந்தாள் திவ்யா. அடிக்கடி நீண்ட சுவாசங்களைப் பிரசவித்தாள்.

அந்த நிகழ்ச்சி அவளை ஆழமாக ஊடுருவியிருந்தது. காரணம், இதுவரை அவள் எந்தவொரு அன்னிய ஆணையும் கண்டு விரலால் கூடத் தீண்டியவளில்லை. தீண்டப்பட்டவளும் அல்ல.

எனவே, தன் அங்கங்களோடு ஸ்பரிசித்த ரவிக்குமாரின் உடல் திண்மை, அவளின் பருவவுணர்வுகளைத் தூண்டி விட்டிருந்தது.

தீவிர சிந்தனைக்குப் பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தாள் திவ்யா.

அந்த முடிவை ரவிக்குமாரிடம் சொல்லி விடத் துடித்தாள். எப்போது விடியும், எப்போது அவனைக் காணலாம் என்ற தவிப்புடன், விடியலை விரைந்தழைத்தாள் திவ்யா.

அதே கதிதான் ரவிக்குமாருக்கும்.

விழித்திருந்தவனின் மனத்திரையில் அந்தக் காட்சி மீண்டும், மீண்டுமாகப் பிரகாசித்தது.

திவ்யாவின் மென்மை அவனுக்குள் பரவசமூட்டியிருந்தது. சீக்கிரமாக விடிந்தால், அவளைக் காண முடியுமே என்ற ஆவல் அவனை வாட்டியெடுத்தது.

வெகு நிதானமாகப் புலர்ந்தது காலை.

அவசரமாகப் புறப்பட்டு, மிகவும் முன்னதாகவே கல்லூரியை அடைந்தான் ரவிக்குமார்.

இன்னும் மாணவர்கள் வரத் தொடங்கவில்லை.


வகுப்பறைக்குள் நுழைந்தவுடன்,

"முன்பு சாதாரண மசாலா படங்கள் தான் எடுத்துக் கொண்டிருந்தார்..."

"இப்போ?"

"ஸ்பெஷல் மசாலா எடுக்கிறார்!"

— மோகன்.





— இம்ரான்கான்.



நோயாளி: டாக்டர்! என் காதுக்குள் டிரெயின் ஓடுகிற மாதிரி இரைச்சல் கேட்டுக் கொண்டே இருக்கிறது!''

டாக்டர்: மீட்டர் கேஜா, பிராட் கேஜா?

— எஸ். பிரியதர்சினி.

அங்கே ஓர் அதிசயம் காத்திருந்தது.

அவனது எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில், தனிமையாக அமர்ந்திருந்தாள் திவ்யா. அவள் சூட்டியிருந்த மல்லிகைச் சரம், வகுப்பறை முழுவதையும் வாசனையால் நிறைத்திருந்தது.

கண்களில் ஒரு காந்தம்.

ரவிக்குமாரைக் கண்டதும், வெட்கத்தோடு எழுந்து நின்றாள் திவ்யா. அவனுக்காகவே அவள் காத்திருப்பது புரிந்தது. அவனோடு தனிமையில் பேச வேண்டும் என்ற அவளின் உள்ளத் துடிப்பு விளங்கியது. செந்தூர இதழ்கள் நர்த்தனமிட, மெல்லிய புன்னகையை அரும்ப விட்டாள், ''ரவி....''

''திவ்யா...'' என விளித்தபடி, அவளை நெருங்கினான் ரவிக்குமார். ''நேற்று எதிர்பாராமல் நடந்த அந்தச் சம்பவம் உங்களை அதிகமா பாதிச்சிட்டது இல்லையா?''

''ஏன், உங்களைப் பாதிக்கலையா?'' குறும்போடு பார்த்தாள் திவ்யா.

புன்னகை செய்தான் ரவிக்குமார். ''உண்மைதான் திவ்யா. என் உணர்வுகள் என்னை இம்சைப்படுத்திடுச்சு.''

''என்னையும்தான்.''

''அதைப் பற்றி உங்களிடம் மனம் திறந்து பேசத்தான் இரவு முழுசும் தூங்காம தவிச்சுக்கிட்டு இருந்தேன்.''

''என்ன சொல்லப் போறீங்க ரவி?'' நாக்கு நுனியால் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு, ஆவலோடு கேட்டாள் திவ்யா.

''சொன்னா தவறா எடுத்துக்கக் கூடாது?''

சிரித்தாள், ''சும்மா சொல்லுங்க.''

''இது நமக்குப் புதிய அனுபவம். உண்மையைச் சொல்லணும்னா இனிமையானதும்கூட. இழுத்துக் கட்டப்பட்ட வீணை நரம்பைப் போன்றது நமது இந்தப் பருவ வயசு. ஸோ, நரம்பை விரல் மீட்டியவுடனே அருவியாப் பீறிடற இசை போல, நமது வாலிப உடல்கள் தொட்டுக் கொண்டதும், நமக்குள்ள இன்பவுணர்வுகள் பொங்கி வழிய ஆரம்பிச்சுட்டது. இது இயற்கையான ஒரு நிகழ்வுதான்.''

''எக்ஸாக்ட்லி ரவி.''

''ஆனா.....''

''ம். தயங்காம சொல்லுங்க'' என ஊக்கமளித்தாள் திவ்யா.

அவளின் கூரிய விழிகளைப் பார்த்தபடி கூறினான் ரவிக்குமார். ''நாம இந்த இன்பத்துக்கு அடிபணிஞ்சு, நம்மோட அந்த உணர்வுகளை உசுப்பி விட்டுக் கொண்டா, இப்போதைக்கு வேண்டுமானால் சுகமா இருக்கும். பட், ஃப்யூச்சர்ல அதுக்காக நாம நிச்சயமா ஃபீல் பண்ணுவோம் திவ்யா. ஏன்னா, நம்மோட வாழ்க்கை இன்னும் பக்குவப் படலை.''

''.....''


''அஸ்திவாரம் பலப்படுவதற்கு முன்பே, அவசரப்பட்டு அதன் மேல கட்டப்படும் சுவர்கள் நீண்ட நாட்களுக்கு நிலைச்சு நிற்க முடியாது.''

''நிஜம்.''

''ஸோ, இந்தச் சம்பவத்தை நாம இன்றையோடு மறந்திடுவோம். இனி படிப்பில் கவனம் செலுத்துவோம். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, வாழ்க்கையில் உயர்வை அடைவதற்கான உன்னத நோக்கத்தின் மீது நமது ஆர்வத்தையெல்லாம் ஒருமுகப்படுத்துவோம். என்ன, நான் சொல்றதுல உங்களுக்குச் சம்மதமா திவ்யா?''

கீழுதட்டைக் கடித்து, நீண்ட பெருமூச்சை வெளியிட்டாள் திவ்யா. சிறிது நேரம் மௌனம் சாதித்தாள்.

''எதை உங்களிடம் மனம் திறந்து சொல்லிடணும்னு நான் இரவு முழுவதும் தவிச்சுக்கிட்டு இருந்தேனோ, அதே விஷயத்தை, நீங்களாவே சொன்னது எனக்கு மகிழ்ச்சியா இருக்கு ரவிக்குமார்'' என மனநிறைவுடன் புன்னகை செய்தாள் திவ்யா.


கல்கி



Colour Transparency: K. V. Anand

1989

	JANUARY	FEBRUARY	MARCH	APRIL	MAY	JUNE
SUN	1 8 15 22 29	5 12 19 26	5 12 19 26	30 2 9 16 23	7 14 21 28	4 11 18 25
MON	2 9 16 23 30	6 13 20 27	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26
TUE	3 10 17 24 31	7 14 21 28	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27
WED	4 11 18 25	1 8 15 22	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28
THU	5 12 19 26	2 9 16 23	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29
FRI	6 13 20 27	3 10 17 24	3 10 17 24 31	7 14 21 28	5 12 19 26	2 9 16 23 30
SAT	7 14 21 28	4 11 18 25	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27	3 10 17 24

	JULY	AUGUST	SEPTEMBER	OCTOBER	NOVEMBER	DECEMBER
SUN	30 2 9 16 23	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29	5 12 19 26	31 3 10 17 24
MON	31 3 10 17 24	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25
TUE	4 11 18 25	1 8 15 22 29	5 12 19 26	3 10 17 24 31	7 14 21 28	5 12 19 26
WED	5 12 19 26	2 9 16 23 30	6 13 20 27	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27
THU	6 13 20 27	3 10 17 24 31	7 14 21 28	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28
FRI	7 14 21 28	4 11 18 25	1 8 15 22 29	6 13 20 27	3 10 17 24	1 8 15 22 29
SAT	1 8 15 22 29	5 12 19 26	2 9 16 23 30	7 14 21 28	4 11 18 25	2 9 16 23 30

புதிய நந்திகள்...

'கடவுளாலும் கைவிடப்பட்ட ஓர் அனாதைக் கிராமம் — காணீர்!'

அன்றைய தபாலில் வந்திருந்த மனுக்களை ஒவ்வொன்றாகப் படித்து வந்த, புதிதாகப் பணியேற்றுள்ள சப்-கலெக்டர் அருண்குமாரை, இந்த வித்தியாசத் தலைப்பிட்ட மனு பளிச்சென்று தாக்க, ஒருவித ஆர்வக் குறுகுறுப்புடன் படிக்க ஆரம்பித்தார்.

'எண்பது வீடுகள் கொண்ட கோவிலடி என்ற எங்கள் கிராமத்திற்குப் போக வரப் பாதை கிடையாது. எங்கள் கண்களுக்கு, மின் விளக்குகளை எப்போது பார்ப்போம் என்று ஏகப்பட்ட ஏக்கம். குடிக்க நல்ல தண்ணீர் கிடையாது. சுதந்திரம் வந்த நாளில் இருந்து இந்த அடிப்படைத் தேவைகளுக்காக, நாங்கள் ஏறி இறங்காத அரசாங்க அலுவலகங்கள் கிடையாது. முறையிடாத அரசியல் தலைவர்கள் இல்லை. இருந்தாலும் என்ன? பலன் பூஜ்யம்தான்! சாலை மறியல் செய்தோம்; சமாதானப்படுத்தப் பட்டோம். உண்ணாவிரதம் இருந்தோம்; திரும்பிப் பார்க்க நாதியில்லை. சரி... சாகும் வரை உண்ணாவிரதம் இருப்போமா என்று யோசித்தோம். ஆனால் கூடவே ஒரு பயமும் வந்துவிட்டது. தாராளமாக இருக்கட்டும், செத்துத் தொலைக்கட்டும் என்று யாருமே கண்டு கொள்ளாமல் இருந்து விட்டால்...? ஆகவே விதியை நொந்து கொண்டு, நரகத்தில் வாழ்வது போல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கடவுள்கூட மறந்துவிட்ட இந்தக் கிராமத்தைப் புதிய சப்-கலெக்டர் ஐயா அவர்கள் பெரிய மனசு வைத்து ஒரே ஒரு முறை நேரில் வந்து பார்க்க வேண்டும். அதுவே எங்களுக்குப் போதும் — இப்படிக்கு, கா. இளவரசன், கோவிலடி.'

படித்து முடித்த அருண்குமார் 'இவ்வளவு காலத்திற்குப் பிறகும் இப்படி ஒரு கிராமமா?' என்று மனம் வேதனையால் கனக்க கண் கலங்கினார்.

தம் பதவியைப் பயன்படுத்தி மக்களுக்கு என்னவெல்லாம் நல்லது செய்ய முடியுமோ, அவ்வளவையும் செய்து முடித்துவிட வேண்டும் என்ற ஆர்வத் துடிப்போடு இப்பொழுதே அந்தக் கிராமத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று, வெளியில் வந்து, ஜீப்பில் ஏறி உட்கார்ந்து, "கோவிலடி கிராமம் போங்க!" என்றார் டிரைவரிடம்.

பியூன் பொன்னுசாமி பின் இருக்கையில் ஏறிக் கொள்ள ஜீப் சீறிக் கொண்டு பாய்ந்தது.

முல்லையாற்றின் மேற்குக் கரையைத் தொட்டுத் திரும்பிய சாலை வளைவில் ஜீப் நின்றது.

"அதோ தூரமா... கிழக்கால குப்பலாத் தெரியுது பாருங்க... அதுதான் கோவிலடி கிராமம். ரெண்டு கிலோ மீட்டருக்கு மேலே இருக்கும். ஆத்தைத் தாண்டி, வாய்க்கால் கரை வழியா நடந்துதாங்க போகணும்..." — முன்னதாக இறங்கிக் கொண்ட பியூன் பொன்னுசாமி பணிவாய் விவரம் சொன்னார்.

"பரவாயில்லே... நடந்தே போகலாம்" என்ற அருண்குமார் இறங்கி, முன்னே நடக்க ஆரம்பித்தார்.

ஊஞ்சல் போல் ஆடும் மூங்கில் தட்டிப் பாலத்தின் வழியே ஆற்றின் மறுகரைக்குச் சென்றவர்கள், சரேலென்று கீழிறங்கி, ஊரை நோக்கிச் செல்லும் வாய்க்காலின் வடக்குக் கரையின் வழியே நடக்க ஆரம்பித்தனர்.

அந்நியமாய்த் தெரிந்த இவர்களைச் சட்டென்று அடையாளம் கண்டு கொண்ட, ஆற்றங்கரை மதகில் உட்கார்ந்து கொண்டு ஊர் வம்பு பேசிக் கொண்டிருந்த ஊர்க்காரர்கள் நெருங்கி வந்து வணக்கம் தெரிவித்து ஒற்றை வரிசை ஊர்வலம் போல் (வாய்க்கால் கரை அதற்கு மேல் அகலம் இல்லாததால்) பின்தொடர்ந்தனர்.

ஏதோ யோசனையுடன் முன்னால் நடந்து கொண்டிருந்த சப் கலெக்டர் பின்னால் வந்தவர்களிடம், "இந்த வாய்க்கால் கரையையே இன்னும் கொஞ்சம் அகலப்படுத்திட்டா ஒரு மண் ரோடு போட்டிடலாம் போலிருக்கே!" என்றார்.

பின்னால் நின்றிருந்தவர் பட்டென்று பதில் சொன்னார்...

"நீங்க சொன்ன மாதிரி ஏற்கெனவே கரையோட சேர்த்துப் பட்டா நிலத்திலும் கொஞ்சம் விலைக்கு வாங்கிச் சர்க்கார்லே ரோடு போட்டிருந்தாங்க..."

"அப்படியா! இப்ப ரோட்டையே காணோமே! ஒரு சின்ன வரப்பால்லே இருக்கு!"

"ரோடு போட்டுப் பத்துப் பதினைந்து வருஷம் இருக்குமுங்க. பக்கத்து வயல்காரங்க, கொஞ்சம் கொஞ்சமா ரோட்டை வெட்டி வயலாக்கிட்டாங்க."

"என்னங்க இது அநியாயமா இருக்கு? அவங்கதான் யோசனையில்லாம வெட்டி எடுத்தாங்கன்னா நீங்களாவது அதைத் தடுக்க வேணாமா?"

உத்தமசோழன்

பதிலில்லை.

"சரி, இந்த நிலமெல்லாம் யாருது?"

"எல்லாமே கோவில் நிலந் தாங்க. இந்த ஊர்க்காரங்க தான் குத்தகைக்குச் சாகுபடி பண்றாங்க..."

"ஓகோ! உங்களுக்காகப் போடப்பட்ட பாதையை நீங்களே வெட்டி எடுத்திட்டீங்க. அப்படித்தானே! இல்லே தெரியாம தான் கேக்கறேன். ஒவ்வொருத்தரும் பாதையை வெட்டி வயலாக்கிட்டா அதிலேருந்து எத்தனை லட்ச ரூபாய்க்கு நெல் அறுத்திடுவீங்க, ஹூம்...?"

கோபத்துடன் அவர் திரும்பிப் பார்த்தபோது, ஏற்கெனவே பதில் சொல்லிக் கொண்டு வந்தவர் மற்றவர்களால் கடைக்கோடியில் கொண்டு போய் நிறுத்தப்பட்டிருந்தார்.

பதிலாகக் கண்ணைக் குத்தும் வண்ணத் துண்டு போட்டிருந்த நடுவயதுக்காரர், "வணக்கங்க!" என்றார்.

"வணக்கம். நீங்க யாரு?"

"எம்பேரு இளவரசன். ஐயாவை எங்க ஊருக்கு வரணும்னு மனு எழுதியவனே நான் தான்."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்!" என்ற அருண்குமாரின் கோபம் கொஞ்சம் அடங்கிவிட்டிருந்தது.

குடியிருப்புப் பகுதி வந்துவிட்



டது.

வாய்க்கால் கரையிலிருந்து தெருவிற்குள் நுழைந்ததும் முதல் வீட்டின் அருகே நின்றார். அந்த வீட்டின் கொல்லைப்புறம் வாய்க்கால் வரை நீண்டிருந்தது. வாய்க்காலின் முக்கால் பகுதி தூர்க்கப்பட்டு அதில் இரண்டொரு வாழைக் கன்றுகள் போடப்பட்டிருந்தன. அதனால் அந்த இடத்தில் தண்ணீர் தேங்கி அதற்கப்பால் மிகச் சன்னமாய் ஓடிக் கொண்டிருந்தது.

''இந்த வீட்டுக்காரர் யாரு? பாசன வாய்க்காலை இப்படி தூர்த்திட்டா அந்தப் பக்கம் இருக்கிறவங்களுக்கு எப்படிங்க தண்ணீர் பாயும்?''

''என்ன சார் பண்றது? இல்லாதவங்க சர்க்கார் இடம்தானேன்னு கொஞ்சம் போல தூர்த்துட்டாங்க.''

இளவரசன்தான் பதில் சொன்னான். 'அது ஒன்றும் பெரிய தவறல்ல' என்பது போல. இருந்தாலும் தூர்த்தவர், சப் கலெக்டரின் தார்மீகக்கோபத்தைப்புரிந்துகொண்டு தலை கவிழ்ந்து கொண்டார்.

''ஹும்'' என்று பெருமூச்சு விட்டபடி தெருவிற்குள் நுழைந்தவர், அறுந்து போன வொயர்களுடன் கூடிய விளக்குகளைக் கொண்ட மொட்டை மின் கம்பங்களைப் பார்த்தார்.

''எலெக்ட்ரிக்சிட்டிக்காரங்க இதைக் கவனிக்கிறதில்லையா?''

''அவங்க இந்தப் பக்கமே திரும்பறதில்லேங்க.''

தெருவின் நடுவில் கண்ட கண்ட இடங்களில் வெட்டி எடுத்து அவரவர் வீட்டு வாசலை மட்டும் மேடாக்கியிருந்தனர். அதனால் தெருவில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கிச் சேறும் சகதியுமாய் இருந்தது.

தெருவின் மையப் பகுதிக்கு வந்தனர். அங்கே சிமெண்ட் தொட்டி போன்று தெரிந்ததைக் காட்டி ''என்னங்க இது?'' என்றார்.

''நல்ல தண்ணீர்க் கிணறுங்க. பஞ்சாயத்துலே வெட்டிக் கொடுத்தது.''

''நல்ல தண்ணீரா? அப்புறம் குடிக்கத் தண்ணீர் இல்லேன்னு சொன்னீங்களே!'' என்று கேட்டுக் கொண்டே கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தவர் அதிர்ச்சியடைந்தார்.

தழைகளும் குப்பை கூளங்களும் விழுந்து அழுகிக் கொசு மொய்த்துக் கன்னங்கரேலென்று சாக்கடைத் தொட்டியாய் மாறியிருந்தது கிணறு.

''என்னங்க இது? நல்ல தண்ணிருங்கிறீங்க. ஏங்க இப்படிப் போட்டு வச்சிருக்கீங்க?''

ஆயாசமாய்க் கேட்டார் அருண் குமார்.

''பஞ்சாயத்திலே வாங்கித் தந்த வாளியும் கயிறும் வீணாயிடிச்சு. புதுசா வாங்கித் தரக் கேட்டோம். அவங்க கண்டுக்கலை. இதுக்கிடையிலே சின்னப் புள்ளைங்க குப்பை கூளங்களை விளையாட்டுத்தனமாகக் கிணத்திலே அள்ளிப் போட்டுடிச்சுங்க. அதான் தண்ணி இப்படி ஆயிடிச்சு. 'கிணத்தை இறைச்சுச் சுத்தம் பண்ணிக் கொடுங்க, புதுசா வாளியும் கயிறும் வாங்கிக் கொடுங்க'ன்னு பஞ்சாயத்து பிரசிடெண்டுகிட்டே நூறு தடவையாவது கேட்டிருப்போம். கடைசியாப் பஞ்சாயத்திலே பணம் இல்லேன்னுட்டாரு. அப்புறம் ஒரு நாள் இதே காரணத்துக்காக ஓர் அம்பது பேர் புறப்பட்டுப் போய்ப் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ் வாசல்லே உண்ணாவிரதமும் இருந்து பார்த்துட்டோம்...'' என்று விவரித்துக் கொண்டே போன இளவரசனைப் பொறுமை பறி போன அருண் குமார், ''போதும் நிறுத்துங்க!'' என்று ஜாடை காட்டி நிறுத்தினார்.

பறி போன பொறுமையில் ஒரு பாதியைச் சிரமப்பட்டு வரவழைத்துக் கொண்டு மெதுவாய்ச் சொல்ல ஆரம்பித்தார்...

''இத பாருங்க... நான் ஆபீஸுக்குப் போனதும் முதல் வேலையா சர்வேயரை அனுப்பி வைக்கிறேன். அவரு ஏற்கெனவே இருந்த ரோட்டின் அகலத்தை அளந்து அடையாளக் கல் போடுவார். பஞ்சாயத்து யூனியன்லே சொல்லி ரோடு போட ஏற்பாடு பண்றேன். மின்சார இலாகா மூலமா சீக்கிரம் சரி செஞ்சு விளக்கு எரியச் செய்யறேன். இதெல்லாம் அரசாங்கம்தான் செஞ்சாகணும். இதையெல்லாம் செஞ்சு தர நானாச்சு.... ஆனா....''

இளவரசன் இடைமறித்தான். ''கேட்கவே சந்தோஷமா இருக்குங்க. நிஜமாச் சொல்றோம். சப்—கலெக்டர் மாதிரி எல்லா அதிகாரிகளும் இருந்துட்டா எங்களை மாதிரி ஏழைகளுக்கு என்னங்க கவலை..:?'' அவனது பாராட்டுக்குச் சுற்றி நின்றவர்களும் பின்பாட்டுப் பாடினர்.

இந்தப் பாராட்டெல்லாம் அருண் குமாரின் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை.

''...ஆனா இன்னொரு விஷயத்தையும் நீங்க மனசுலே வச்சுக்கணும். அரசாங்கத்



— ரா. ரகோத்தமன்.



“மாதங்களில்



மார்கழி நான்.

பகவான் கூறுகிறார்:

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்தராய புண்ணிய காலம் அவர்களுக்கு சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்கு பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற் காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனே, வந்தனே, வழிபாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவைகளாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுதும் இணைக்கப்பட்டிருக்கிறபடியால் மாதங்களுள் நாம் மார்கழி மாதம் என்கிறார் பகவான்.

ஸ்வீட்களில் சிறந்தது **கிராண்ட் ஸ்வீட்ஸ்**

இனிப்புகள்:— மங்களூர் போளி, ரஸமலாய், ஸோன்பப்டி, இனிப்பு சோமாஸ், பொரிவிளங்காய் உருண்டை, தேங்காய் கோவா குங்குமப்பூ ஹல்வா.

காரவகைகள்:— தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, சீடை, ஸ்பெஷல் மிக்ஸர், சீப்புச்சீடை, இரயில்கட்டிடம், வறுபயறு, விஜிடபிள் சமோசா.

பொடிவகைகள்:— கருவேப்பிலேபொடி, பருப்புப்பொடி, இட்லிபொடி, ரசப்பொடி, சாம்பார்பொடி, உறுகாய்பொடி.

திருமண வைபவங்களுக்கு:— சீர்முறுக்கு, சீர்அதிரசம், முள்ளுத்தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால், அப்பம் முதலியன.





தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்னாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை-600 020.
போன்: 412557

துக்குன்னு எப்படி சில கடமைகள் இருக்கோ, அதே மாதிரி நமக்கும் சில கடமைகள் இருக்கு. சர்க்கார் செஞ்சு கொடுக்கிற வசதியை நாம சரியாப் பயன்படுத்திக்க வேண்டாமா? உங்களால கிணறு வெட்ட முடியாது. ஆனா வெட்டிக் கொடுத்த கிணற்றை இப்படி வச்சிருக்கீங்களே, இது சரியா? இதுக்காக அம்பது பேர் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸிலே போய் உண்ணாவிரதம் இருந்தேங்கிறீங்க. அப்படி போயிட்டு வர்றதுக்குப் பஸ் செலவே நூறு ரூபாய்க்கும் மேலே ஆகியிருக்கும். அந்தப் பணத்துலே ரெண்டு வாளி கயிறு வாங்கியிருக்கலாமே! நீங்க எல்லாருமாச் சேர்ந்து ஒரு மணி நேரம் மெனக்கட்டா இந்தக் கிணத்தைச் சுத்தம் பண்ணிடலாமே! ரொம்ப வேண்டாம்... இந்தத் தெருவோட பொதுப் பாதையை அவங்கவங்க இஷ்டத்துக்கு வெட்டி எடுத்துட்டு, பாதையைச் சேறும் சகதியுமாக்கி அது மேலேயே நடந்து போறீங்க. நாம மனசு வச்சா எதையும் நல்லா வச்சுக்கலாம். நம்ம பெரியவங்கள்ளாம் அப்படித்தான் இருந்திருக்கிறாங்க..."

நிஜமான அக்கறையுடனும் ஆதங்கத்துடனும் சொல்லிக் கொண்டிருந்த அருண்குமார், இளவரசனின் அதிரடிக் கத்தலால் திடுக்கிட்டுத் தடைப்பட்டார்.

"சரிதான் நிறுத்துங்க சார்! நீங்க இங்கே எதுக்கு வந்தீங்க? எங்க குறைகளைக் கேட்கவா? இல்லே உபதேசம் செய்யவா? நீங்க வந்த வேலையை விட்டுட்டு, இந்த ஏழை ஜனங்க ஏதோ ஊரு உலகத்திலே செய்யாத தப்பைச் செஞ்சுட்ட மாதிரி, ஒவ்வொண்ணையும் பூதக் கண்ணாடி வச்சுப் பார்த்துப் பெரிசாக்கி, ரொம்ப ஆர்ப்பாட்டம் பண்ணீங்களே? ஐயா! உங்களைக் கையெடுத்துக் கும்பிடறோம். உங்களால ஒண்ணும் செய்ய முடியாட்டியும் பரவாயில்லே. இந்த ஏழைகளை வார்த்தைகளாலே அவமானப் படுத்தாம அர்த்தமில்லாத குற்றம் சொல்லி வேதனைப்படுத்தாம போய்ச் சேர்ந்தீங்கன்னா அதுவே பெரிய உதவி..." என்று ஏகப்பட்ட ஏற்ற இறக்கங்களுடன் பேசிக் கொண்டிருந்தவன் சட்டென்று நிறுத்திச் சுற்றி நின்ற தன் ஊர்க்காரர்களைப் பார்த்தான்.

"ஏய்யா இன்னும் இங்கேயே நின்னுக்கிட்டிருக்கீங்க. இதுவரைக்கும் உங்களை அவர் கேவலப்படுத்திப் பேசினது பத்தாதா? அவர் மேலே ஒரு குத்தமும் இல்லே. அவர் மாதிரி பணக்கார வீட்டுப் பிள்ளைங்க அதிகாரியா வர்றப்ப நம்மைப் போல ஏழை எளியவங்க, அவங்ககிட்டே நியாயத்தை எதிர்பார்க்கிறது நம்ப தப்புத்தானே! வாங்கய்யா போவலாம். இவராலே நமக்கொண்ணும் ஆகப் போறதில்லே. வர்ற திங்கட் கிழமை கலெக்டர் ஆபீஸ் போய் மனுக் கொடுப்போம். அவரும் கேக்கலேன்னா அதுக்கு மேலே உள்ளவங்களைப் பார்ப்போம்... இவர்கிட்ட பட்ட அவமானத்தையும் அவங்ககிட்ட சொல்வோம்."

இப்படி, எதிர்பாராத தாக்குதலால் விக்கித்துப் போன அருண்குமாருக்குத் தாமும் தமது பியூனும் மட்டுமே அனாதையாக நிற்கிறோம் என்பதோ, ஏதோ மந்திரத்திற்குக் கட்டுப்பட்டது போல், ஊர் மொத்தமும் மந்தை மாதிரி இளவரசனின் பின்னால் சென்று மறைந்ததோ ஒன்றும் தெரியவில்லை. அவர் சுவாதீனத்திற்கு வரக் கொஞ்ச நேரமானது.

தயக்கமாய் அருண்குமாரை நெருங்கினார் பியூன் பொன்னுசாமி. ஆறுதலாய்ச் சொன்னார்.

"...இந்த இளவரசன் பய இருக்கானே... அவன் இந்த கிராமத்துக்கே தலைவன் மாதிரி. ஆமாம்.... யாரும் அவனைத் தலைவன் ஆக்கலே. தன்னைத் தானே தலைவனா உருவாக்கிக்கிட்டான். அவனாலேயும் அப்பப்ப சில பொதுக் காரியங்க நடக்கத்தான் செய்யும். ஆனா அதுலேயும் அவனுக்குத்தான் லாபம் அதிகமா இருக்கும். அவனுக்கு எப்பவெல்லாம் பணத்தட்டுப்பாடு வருமோ அப்பவெல்லாம் அதிகாரிங்களைப் பாக்கணும், மனுக் கொடுக்கணும், தந்தி கொடுக்கணும்னு ஊருலே வசூல் பண்ணுவான். எல்லாத்துக்குமே சர்க்கார்தான் பொறுப்பும்பான். இப்ப நீங்க சொன்ன நியாயமெல்லாம் அவனுக்கும் தெரியும். அதைச் சொன்னா அவன் தலைவனா இருக்க முடியாதே.....!"

....

"...ஜனங்களுக்காகச் சண்டை போடற மாதிரி உங்ககிட்டே பேசினானே அதுதான் அவனோட ராஜதந்திரம். இப்போ ஊர்க்காரங்க மத்தியிலே அவன் பெரிய ஹீரோவா மாறியிருப்பான்..."

ஆச்சரியம் மாறாமல் கேட்டுக் கொண்டே வந்தார் அருண்குமார்.

"...ஏதோ இந்த ஊர்லே இவன் மாத்திரம்தான் இப்படின்னு நினைச்சுக்கிடாதீங்க. ஊருக்கு ஊரு இவனை மாதிரியே ரெண்டு மூணு தலைவனுங்க இருக்கானுங்க. ஊரு உலகத்திலே இருக்கிற ஏழை எளியவங்களைக் கரையேத்த வந்த அவதார புருஷனுங்க மாதிரி நடந்துக்குவானுங்க. ஏழைங்களாக இருக்கிறதாலேயே அவங்க எந்தத் தப்புச் செஞ்சாலும் அது ஒண்ணும் பெரிய விஷயம் இல்லேன்னு வாதாடுவானுங்க. ஜனங்க உண்மையைத் தெரிஞ்சுக்க, அதிகாரிங்ககிட்டச் சுயமா நெருங்க விடாம நந்தி மாதிரி குறுக்கே நின்னுக்குவானுங்க. ஏன்னா, ஜனங்க யதார்த்த விஷயங்களை, உண்மை நிலவரங்களைத் தெரிஞ்சுக்க விட்டுட்டா, இவனுங்க தலைவர் அந்தஸ்து காத்துலே பறந்திடுமே... அதனாலேதான்..."

பொன்னுசாமியின் அனுபவபூர்வமான பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டே தட்டுத் தடுமாறி அந்த வாய்க்கால் கரை வழியே ஜீப்பை நோக்கி நடந்து கொண்டிருந்தார் அருண்குமார்.

பொன்னியின் செல்வன்

அத்தியாயம் 10
மனித வேட்டை

வந்தியத் தேவன் நாயின் வாயில் அகப்படாமல் தரையில் குதிக்கப் பார்ப்பதா, அல்லது மறுபடியும் மதில் சுவரின் மேல் ஏறுவதா என்று தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தான். அதே சமயத்தில் பக்கத்திலிருந்த மரங்களின் மறைவில் யாராவது ஒளிந்திருக்கிறார்களா என்றும் கூர்மையாகக் கவனித்தான். ஒரு மரத்தின் மறைவில் வெள்ளைத் துணி தெரிவது போலிருந்தது. சற்று முன் நாயின் குரைப்புச் சத்தத்தோடு மனிதனின் சிரிப்புக் குரல் கலந்து கேட்டது நினைவுக்கு வந்தது. மனிதர் யாராவது உண்மையில் மறைந்திருந்தால்? ஒரு மனிதனோ? பல மனிதர்களோ? அதைத் தெரிந்து கொள்ளாமல் குதிப்பது பெருந் தவறாக முடியும்? நாயின் வாயிலிருந்து தப்பினாலும் மனிதர்களின் கையில் அகப்படும்படி நேரிடலாம். அரண்மனை மேல் மாடத்திலிருந்து பார்க்கும்போது ஆழ்வார்க்கடியானுடைய முகம் மதில் சுவர் மேல் தெரிவது போலத் தோன்றியது. அந்த வைஷ்ணவன் தான் அய்யனார் கோவிலில் காத்துக் காத்துப் பார்த்து அலுத்துப் போய் இங்கு வந்து நாயை ஏவி விட்டு வேடிக்கை செய்கிறானா, என்ன? எல்லாவற்றுக்கும் கூப்பிட்டுப் பார்த்தால் போகிறது. "வைஷ்ணவரே! வைஷ்ணவரே! இது என்ன வேடிக்கை?" என்றான். மறுபடியும் ஒரு சிரிப்புச் சத்தம் கேட்டது. அது ஆழ்வார்க்கடியான் குரல் அல்ல. ஆகையால் திரும்ப மதில் மேல் ஏறி அரண்மனைக்குள் இறங்குவதுதான் சரி. பெரிய பழுவேட்டரையரின் வரவேற்பு தடபுடல்களில் எப்படியாவது தப்பித்துக் கொள்ளலாம். அல்லது சுரங்க வழி இருக்கவே இருக்கிறது. மணிமேகலையிடம் மீண்டும் கொஞ்சம் கெஞ்சுமணியம் செய்தாற் போகிறது. இல்லாவிடில் பழுவூர் இளைய ராணியின் தயவையே சம்பாதித்துக் கொள்ள வேண்டியதுதான்! இது வரை தன்னைக் காட்டிக் கொடுக்காதவள் இப்போது மட்டும் காட்டிக் கொடுத்து விடுவாளா?....

வந்தியத் தேவன் இறங்கிய வழியில் மறுபடி மேலே ஏறத் தொடங்கினான்.

நாய் இன்னும் உயரமாக எழும்பிக் குதித்துக் குரைத்தது.

மீண்டும் சிரிப்புச் சத்தம் கேட்டது.

அமரர் கல்கி

மரத்தின் மறைவிலிருந்து ஓர் உருவம் வெளியே வந்தது. அதன் கையில் ஒரு வேல் இருந்தது.

அவன் தேவராளன் என்பதை வந்தியத் தேவன் தெரிந்து கொண்டான்.

தேவராளன் வந்தியத்தேவன் சுவரில் தொங்கிய இடத்திற்கு அருகில் வந்தான்.

"அப்பனே! உன் உயிர் வெகு கெட்டி!" என்றான்.

"அதுதான் தெரிந்திருக்கிறதே! ஏன் மறுபடியும் என்னிடம் வருகிறாய்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இந்தத் தடவை நீ தப்ப முடியாது!" என்று கூறித் தேவராளன் தன் கையிலிருந்த வேலை வந்தியத் தேவனை நோக்கிக் குறி பார்த்தான்.

வந்தியத்தேவன் தன்னுடைய ஆபத்தான நிலையை உணர்ந்து கொண்டான். பாதிச் சுவரில் தொங்கிக் கொண்டிருப்பவன் கீழேயிருந்து வேலினால் குத்தப் பார்ப்பவனுடன் எப்படிச் சண்டையிட முடியும்? குதித்துத் தப்பப் பார்க்கலாம் என்றால், வேட்டை நாய் ஒன்று மேலே பாயக் காத்துக் கொண்டிருக்கிறது.

"தேவராளா! ஜாக்கிரதை! உங்கள் எஜமானி பழுவூர் ராணியின் கட்டளையை ஞாபகப்படுத்திக் கொள்! என்னை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று உங்களுக்கு ராணி சொல்லியிருக்கவில்லையா?"

தேவராளன் ஒரு பேய்ச் சிரிப்புச் சிரித்து விட்டு "பழுவூர் ராணி என் எஜமானி அல்ல; எந்த ஊர் ராணியும் என் எஜமானி அல்ல. பத்திர காளி துர்க்கா பரமேசுவரிதான் என்னுடைய எஜமானி!" என்றான்.

"என் குலதெய்வமும் துர்க்கா பரமேசுவரிதான்! அவளுடைய அருளினால்தான் நடுக்கடலில் எரிகிற கப்பலிலிருந்து தப்பித்து வந்தேன். என்னைத் தொட்டாயானால் துர்க்கை உன்னை அதம் செய்து விடுவாள்!" என்றான் வந்தியத் தேவன்.

"நீ துர்க்கையின் பக்தன் என்பது உண்மையானால், இப்பொழுது எனக்கு ஒரு காரியம் செய்ய வேண்டும். அப்போதுதான் உன்னைக் கொல்லாமல் விடுவேன்!" என்றான் தேவராளன்.

"என்ன செய்ய வேண்டும்! — முதலில், உன்னுடைய நாயை அப்பால் போகச் சொல்லு!"

"இந்தப் பக்கம் ஒரு வீர வைஷ்ணவன் வந்தான். அவனைத் தேடிப் பிடிப்பதற்கு நீ ஒத்தாசை செய்தால் உன்னைச் சும்மா விட்டு விடுகிறேன்."

"எதற்காக அவனைப் பிடிக்க வேண்டும்?" என்றான் வந்தியத் தேவன்.

"துர்க்கா தேவிக்கு ஒரு வீர வைஷ்ணவனைப் பலி கொடுப்பதாக நான் சபதம் செய்திருக்கிறேன். அதற்காகத்தான்!" என்றான் தேவராளன்.

அந்தச் சமயத்தில் வந்தியத் தேவன் மதில் சுவரில் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த சிறிய செடி வேரோடு பெயர்ந்து வர ஆரம்பித்தது.

வேலின் முனையில் சிக்காமல் எப்படித் தேவராளன் கழுத்தின் மேல் குதிப்பது என்று வந்தியத் தேவன் யோசித்துக் கொண்டே "அந்த வீர வைஷ்ணவன் என் அருமைச் சிநேகிதன். அவனுக்கு ஒருபோதும் நான் துரோகம் செய்ய மாட்டேன். அவனுக்குப் பதிலாக என்னையே பலி கொடுத்து விடு!" என்றான்.

"அப்படியானால் இந்த வேலுக்கு இப்போதே இரையாகி விடு!" என்று தேவராளன் வேலைத் தூக்கி வந்தியத்தேவன் மீது குறி பார்த்தான்.

வந்தியத் தேவன் செடியை விட்டு விட்டு வேலின் முனைக்கு அடியில் அதைத் தாவிப் பிடித்துக் கொண்டு கீழே குதித்தான். குதித்த வேகத்தில் தரையில் மல்லாந்து விழுந்தான். தேவராளன் அந்த அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு வேலைத் தூக்கினான்.

அந்தச் சமயத்தில் பின்னாலிருந்து ஓர் உருவம் ஓடி வந்து தன் கையிலிருந்த தடியினால் தேவராளன் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டது.

தேவராளன் வந்தியத் தேவன் பேரில் பொத்தென்று விழுந்தான்.

நாய் தன் எஜமானனைத் தாக்கியவன் பேரில் பாய்ந்தது. ஆழ்வார்க்கடியான் அதற்கும் சித்தமாயிருந்தான். தன்னுடைய மேல் துணியை விரித்து நாயின் தலை மீது போட்டான். நாய் சில வினாடி நேரத்துக்குக் கண் தெரியாத குருடாகியிருந்தது. அச் சமயம் சுருக்குப் போட்டுத் தயாராக வைத்திருந்த காட்டுக் கொடியை அதன் கழுத்தில் எறிந்து வைஷ்ணவன் நாயை ஒரு மரத்தோடு சேர்த்துப் பலமாகக் கட்டினான்.

இதற்குள் வந்தியத் தேவன் தேவராளனைத் தன் மேலிருந்து தூக்கித் தள்ளி விட்டு எழுந்தான்.

தேவராளன் வைஷ்ணவனுடைய ஒரே அடியில் நினைவு இழந்து மூர்ச்சையாகிக் கிடந்தான். இருவரும் இன்னும் சில காட்டுக் கொடிகளைப் பிடுங்கி அவனுடைய கால்களையும் கைகளையும் கட்டிப் போட்டார்கள்.

பிறகு வந்தியத் தேவன் வேலையும் ஆழ்வார்க்கடியான் கைத் தடியையும் எடுத்துக் கொண்டு கிளம்பினார்கள்.

சம்புவரையர் மாளிகையின் வாசற் பக்கத்தைத் தவிர மற்ற மூன்று பக்கங்களிலும் நெடுந் தூரத்துக்குக் காடு மண்டிக் கிடந்தது. அதற்குள்ளே புகுந்து விட்டால் வெளியில் வருவது கஷ்டம். ஆகையால் வந்தியத் தேவனும் ஆழ்வார்க்கடியானும் மதில் சுவர் ஓரமாகவே விரைந்து சென்றார்கள்.

விரைந்து நடக்கும் போதே ஆழ்வார்க்கடியான் "நீ புத்திசாலி என்று நினைத்தேன். நான் நினைத்தது தவறு என்று இப்போது தெரிந்தது!" என்றான்.

"அவசரப்பட்டுச் சுரங்க வழியில் புகுந்ததைச் சொல்கிறீரா? அதன் மூலமாக எவ்வளவு பயங்கரமான மர்மங்களைக் கண்டுபிடித்திருக்கிறேன் தெரியுமா?" என்றான் வந்தியத் தேவன்.

"அது ஒருபுறம் இருக்கட்டும். 'வைஷ்ணவனைக் கண்டுபிடிப்பதற்கு ஒத்தாசை செய்கிறாயா?' என்று தேவராளன் கேட்டதும், 'ஆகட்டும்' என்று சொல்லித் தொலைப்பதற்கு என்ன? வீணாக ஏன் அபாயத்துக்கு உள்ளாக வேண்டும்?" என்றான் வைஷ்ணவன்.

"எல்லாம் சகவாச தோஷந்தான்!" என்றான் வந்தியத்தேவன்.

"யாருடைய சகவாசத்தைச் சொல்கிறாய்? இத்தகைய தவறு செய்யும்படி நான் உனக்கு ஒருநாளும் சொன்னதாக நினைவில்லையே?"

"உம்மைச் சொல்லவில்லை, ஐயா! பொன்னியின் செல்வரைச் சொல்லுகிறேன். அவரைப் பார்த்துப் பழகிய பிறகு, பொய் சொல்லுவதற்கு உள்ளம் இடம் கொடுக்கவில்லை...."

"உயிர் தப்புவதற்காகக் கூடவா? அவ்வளவு சத்தியசந்தனாகி விட்டாயா?"

"அது மட்டுமல்ல. நீர் எங்கேயோ பக்கத்தில் மறைந்திருக்கிறீர் என்று எனக்குத் தெரியும். நான் உம்மைப் பிடித்துக் கொடுக்கிறேன் என்று தேவராளனிடம் சொல்வதை நீர் கேட்டுக் கொண்டிருந்து அதை உண்மை என்று நம்பி விட்டால்! இந்த ஆபத்துச் சமயத்தில் எனக்கு உதவி செய்ய வந்திருப்பீரா?"

"அப்பனே! உன் அறிவுக் கூர்மை அபாரம்; சந்தேகமில்லை. உண்மையில், தேவராளன் கேட்ட கேள்விக்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய் என்று கேட்க நான் மிகுந்த ஆவலாய்த்தான் இருந்தேன்!"

"பார்த்தீரா? நீர் ஒரு சந்தேகப் பிராணி என்று நான் கருதியது சரியாய்ப் போயிற்று. அதைத் தவிர, எப்பேர்ப்பட்ட நன்மை வருவதாயிருந்தாலும் வாய் வார்த்தைக்குக் கூடச் சிநேகத் துரோகமாக எதுவும் நான் சொல்லும் வழக்கமில்லை. ஆனால் நீர் 'அய்யனார் கோவிலில் காத்திருக்கிறேன்' என்று சொல்லி விட்டு இங்கு வந்தது எப்படி? சுரங்க வழியில் நான் திரும்பி வந்திருந்தால் உம்மைக் காணாமல் திண்டாடியிருப்பேனே?" என்றான் வந்தியத்தேவன்.

"சுரங்க வழியில் நீ திரும்பி வந்திருந்தால் உயிரோடு வந்திருப்பது சந்தேகந்தான். நீ சுரங்க வழியில் புகுந்து சிறிது நேரத்துக்கெல்லாம் சதிகாரர்கள் அதில் புகுந்தார்கள். நீ புத்திசாலியாகையால் நிச்சயம் வேறு வழியாகத்தான் வருவாய், அநேகமாக இங்கே சுவர் ஏறிக் குதித்து வரக்



கூடும் என்று எண்ணினேன்.''

''அவ்வாறு எண்ணிக் கொண்டா இவ்விடத்துக்கு வந்தீர்?''

''அதுமட்டுமல்ல. சுரங்கப் பாதையில் புகுந்த சதிகாரர்கள் தேவராளனை மட்டும் வெளியில் காவலுக்கு வைத்துவிட்டுச் சென்றார்கள். அவர்கள் திரும்பி வரும்போது அய்யனார் கோவிலில் யாரும் இல்லாமலிருக்க வேண்டாமா? அதற்காக, ஏதோ சமிக்ஞை சொல்லிவிட்டுப் புகுந்தார்கள் போலிருக்கிறது. ஆனால் அது எனக்குத் தெரியாது. எல்லாரும் சுரங்கத்துக்குள் புகுந்துவிட்டார்கள் என்று நினைத்தேன். நீ உள்ளே போய் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாயே என்று வேறு கவலையாயிருந்தது. சுரங்கப் பாதையை வெளியிலிருந்து திறப்பதற்கு என்ன



உபாயம் என்று தெரிந்து கொள்ளவும் விரும்பினேன். ஆகையால் பலிபீடத்தின் அருகில் சென்று அதைத் திருப்ப முயன்று கொண்டிருந்தேன். காலடிச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். தேவராளன் கையில் வேலுடன் வந்து கொண்டிருந்தான். என்னைக் கண்ட இடத்தில் கொன்று விடச் சதிகாரக் கூட்டத்தார் வெகு நாளைக்கு முன்பே தீர்மானித்திருந்தார்கள். அது எனக்குத் தெரியும். என் கையிலோ ஆயுதம் இல்லை. ஆகையால் ஓட்டம் பிடிப்பதைத் தவிர வேறு வழி இல்லை. தேவராளனும் தொடர்ந்து ஓடி வந்து கொண்டிருந்தான். அடர்ந்த காடாக இருந்தபடியால் அவனால் என்னைப் பிடிக்க முடியவில்லை. வேலை எறியவும் முடியவில்லை. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு என்னை அவன் தொடர்ந்து வரவில்லை என்று தோன்றியது. வேட்டையைக் கைவிட்டு விட்டான் என்று எண்ணிக் காட்டிலிருந்து இனி இராஜ பாட்டைக்குப் போய் விடலாம் என்று உத்தேசித்தேன். சற்றுத் தூரத்தில் ஒரு குடிசை தெரிந்தது. அதில் ஒரு சிறிய விளக்கு மினுக்கு மினுக்கு என்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்தக் குடிசையில் இராஜ பாட்டைக்கு வழி கேட்கலாம் என்று நினைத்து அதை அணுகினேன். சற்றுத் தூரத்திலிருந்து உற்றுப் பார்த்தேன். நல்ல வேளையாய்ப் போயிற்று. குடிசை வாசலில் தேவராளன் நின்று கொண்டிருந்தான். ஒரு பெண் பிள்ளையும் ஒரு நாயும் அவன் அருகில் நின்றார்கள். தேவராளன் பெண் பிள்ளையிடம் ஏதோ சொல்லி விட்டு நாயை அழைத்துக் கொண்டு மறுபடியும் புறப்பட்டான். நாய் நான் நின்ற திசையை நோக்கிக் குரைத்தது. ஆகவே அபாயம் இன்னும் அதிகமாயிற்று. இராஜ பாட்டைக்குப் போகும் உத்தேசத்தைக் கைவிட்டுக் காட்டு வழியிலேயே புகுந்து ஓடி வந்தேன். நாய் அடிக்கடி குரைத்துக் கொண்டு வந்தபடியால் அவர்கள் எங்கே வருகிறார்கள் என்பதை நான் ஊகிக்க முடிந்தது. ஓடி வந்து கொண்டிருக்கும் போதே மூளையும் வேலை செய்து கொண்டிருந்தது. இரவு முழுவதும் காட்டில் சுற்றிக் கொண்டிருப்பது அசாத்தியம். எப்படியும் அவர்கள் வந்து பிடித்து விடுவார்கள். கையில் வேலுடன் கூடிய தேவராளனையும் வாயில் பல்லுடன் கூடிய வேட்டை நாயையும் ஏக காலத்தில் சமாளிப்பது சுலபம் அல்ல. அச் சமயத்தில் இப் பெரிய மாளிகையின் மதில் சுவர் தெரிந்தது. மதிலில் ஏறி உள்ளே குதித்து விட்டால் எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம் என்று எண்ணினேன். அப்படியே ஏறி விட்டேன். அச் சமயம் நீ அரண்மனை மேன் மாடத்தில் ஓடி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். நீ மதில் ஏறி வெளியே குதிப்பதற்குத்தான் ஓடி வருகிறாய் என்று தெரிந்து கொண்டு மறுபடியும் கீழே குதித்தேன். நாம் இரண்டு பேருமாகச் சேர்ந்து தேவராளனையும் அவனுடைய நாயையும் சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இதற்குள் நாய் குரைக்கும் சத்தம்



கேட்கவே பக்கத்திலிருந்த மரத்தின் மேலே ஏறிக் கொண்டேன். நாயும் தேவராளனும் நான் ஏறியிருந்த மரத்தை அணுகித்தான் வந்தார்கள். அதற்குள் நீ மதில் சுவரிலிருந்து இறங்கியது தேவராளனின் கண்ணில் பட்டது போலும். நாயையும் அழைத்துக் கொண்டு நீ இறங்குமிடத்தை நெருங்கினான். பிறகு நடந்ததெல்லாம் உனக்குத் தெரியும்....."

"வைஷ்ணவரே! விதியின் வலிமையைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இது என்ன கேள்வி! திடீரென்று விதியின் பேரில் உன்னுடைய எண்ணம் போனது, ஏன்?"


"ஒவ்வொருவனும் பிறக்கும் போதே 'இன்னாருக்கு இன்னபடி' என்று பிரம்மதேவன் தலையில் எழுதி விடுவதாகச் சொல்கிறார்களே! அதை நீர் நம்புகிறீரா, இல்லையா?"

"இல்லை! எனக்கு விதியில் நம்பிக்கையில்லை. விதியை முழுதும் நம்புவதாயிருந்தால், பரந்தாமனிடம் பக்தி செய்து உய்யலாம் என்பதற்குப் பொருள் இல்லாமற் போய் விடும் அல்லவா. ஆழ்வார்கள் என்ன சொல்லியிருக்கிறார்களென்றால்...."

"ஆழ்வார்கள் எதையாவது சொல்லியிருக்கட்டும். எனக்கு விதியில் பூரண நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. விதியின்படிதான் எல்லாம் நடக்கும் என்று கருதுகிறேன். இல்லாமற் போனால் இன்றைக்கு நான் தப்பித்துக் கொண்டு வந்திருக்க முடியாது....."

"அப்பனே! விதியினால் நீ தப்பித்து வரவில்லை. மதியின் உதவியினால் தப்பித்து வந்தாய்....."

"இல்லவே இல்லை; என் மதி என்னை ஆழந் தெரியாத அபாயத்தில் கொண்டு போய்ச் சேர்த்தது. விதி என்னை அதிலிருந்து கரையேற்றியது!"



இப்படி அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே காட்டைக் கடந்து வந்து விட்டார்கள். கடம்பூர் அரண்மனையின் முன் வாசல் அங்கிருந்து தெரிந்தது. அங்கு ஒரே அல்லோலகல்லோலமாக இருந்ததும் தெரிந்தது. பழுவேட்டரையரின் யானை, குதிரை, பரிவாரங்கள் வெளியிலிருந்து வாசலை நெருங்கி வந்து கொண்டிருந்தன. அமோகமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அரண்மனை வாசலில் சம்புவரையரும், அவருடைய பரிவாரங்களும் வரவேற்பதற்குக் காத்திருந்தார்கள். நூற்றுக்கணக்கான தீவர்த்திகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. பேரிகைகள், முரசுகள், கொம்புகள், தாரைகள், தப்பட்டைகள் ஒன்று சேர்ந்து முழங்கின.

ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனுடைய கையைப் பிடித்து இழுத்து "வா! போகலாம், யாராவது நம்மைப் பார்த்து விடப் போகிறார்கள்!" என்றான்.

"இந்தப் பக்கம் ஒருவரும் பார்க்க மாட்டார்கள். பார்த்தாலும் என்னுடைய விதி என்னைக் காப்பாற்றும்."

"அப்படியாவது எதற்காக இங்கே நிற்க வேண்டும்?"

"பெரிய பழுவேட்டரையர் யானை மீது வந்து இறங்கும் காட்சியைப் பார்க்க வேண்டாமா?"

"அது மட்டுந்தானா?"

"பழுவூர் ராணி நந்தினி அவருடன் யானை மீதில் வந்து இறங்குகிறாளா, அல்லது மூடு பல்லக்கில் வருகிறாளா என்று பார்க்கவும் விரும்புகிறேன்..."

"தம்பி! விதி எப்போதும் உனக்கு அனுகூலமாக இருக்கும் என்று எண்ணாதே. ஒரு மாயமோகினியின் உருவத்தில் வந்து உன்னைக் குடை கவிழ்த்தாலும் கவிழ்த்துவிடும்......"

"அப்படியெல்லாம் மயங்கி விடுகிறவன் நான் அல்ல, வைஷ்ணவரே! அதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள்!"

கம்பீரமான யானை வந்து அரண்மனை வாசலில் நின்றது. அதன் மேலிருந்து பெரிய பழுவேட்டரையர் இறங்கினார். அவரைத் தொடர்ந்து பழுவூர் இளைய ராணியும் இறங்கினாள்.

"ஓ! இந்தத் தடவை இளைய ராணி மூடு பல்லக்கில் வரவில்லை. பகிரங்கமாகவே அழைத்து வந்திருக்கிறார்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அதைத் தெரிந்து கொள்ளத்தான் விரும்பினேன். இனிப் போகலாம்" என்று வந்தியத்தேவன் பின்னால் சென்றான்.

ஆனால் இப்போது ஆழ்வார்க்கடியான் பின் செல்வதற்கு அவ்வளவு அவசரப்படவில்லை. மேலும் அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தான். பழுவூர் இளைய ராணி நந்தினியைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

தற்செயலாகவோ, அல்லது அவனுடைய மனோ சக்தியினால் இழுக்கப்பட்டுத்தானோ என்னவோ நந்தினி அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.

ஆழ்வார்க்கடியானுடைய முகம் இருண்ட மரங்களின் மத்தியிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கூர்ந்து கவனித்தாள்.

அவள் முகத்தில் உடனே பீதியின் சாயல் பரவிற்று.

இளைய ராணியின் முக மாறுதலைப் பெரிய பழுவேட்டரையர் கவனித்தார். அவள் பார்த்த திசையை அவரும் ஒரு தடவை கூர்ந்து நோக்கினார்.

இரண்டு உருவங்கள் நெருங்கி வளர்ந்திருந்த மரங்களின் இருண்ட நிழலில் மறைந்து கொண்டிருந்தன.

உடனே சம்புவரையரின் காதோடு ஏதோ சொன்னார்.

சம்புவரையர் தம்முடைய வீரர்களில் இருவருக்கு ஏதோ கட்டளையிட்டார்.

பழுவேட்டரையரும் இளைய ராணியும் அமோகமான வாத்திய கோஷங்களுக்கிடையில் அரண்மனை வாசல் வழியாக உள்ளே பிரவேசித்தார்கள்.

அதே சமயத்தில் இரண்டு குதிரை வீரர்கள் அரண்மனை மதிலைச் சுற்றியிருந்த காட்டிற்குள் பிரவேசித்தார்கள்.

குதிரைகளைக் காட்டுக்குள் அவர்கள் கஷ்டத்துடன் செலுத்திக் கொண்டு போனார்கள்.

வெகுதூரம் சென்றும் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. கிட்டத்தட்டக் காட்டைக் கடந்து அப்புறத்தில் சமவெளியாக இருந்த திறந்த மைதானத்தண்டை வந்து விட்டார்கள்.

"அண்ணே! காட்டில் ஒருவரும் இல்லை. கிழவரின் மனப்பிராந்திதான்!" என்றான் அவர்களில் ஒருவன்.

அச்சமயம் நாய் ஒன்று அவர்களுக்கெதிரே ஊளையிட்டுக் கொண்டு வந்தது.

"தம்பி! நாய் எப்போது ஊளையிடும் தெரியுமா?" என்று மற்றவன் கேட்டான்.

"யாராவது செத்துப் போனால் ஊளையிடும்!" என்றான் முதலில் பேசியவன்.

"பேய், பிசாசு, வேதாளம் முதலியவைகளைக் கண்டாலும் ஊளையிடும்!" என்றான் இன்னொருவன்.

"உன்னைப் பார்த்துத்தான் பிசாசு என்று நினைத்துக் கொண்டு விட்டதோ, என்னவோ?"

"இல்லை, தம்பி! உன்னை வேதாளம் என்று எண்ணிக் கொண்டு விட்டது!"

இச்சமயத்தில் அவர்களுடைய தலைக்கு மேலே பயங்கரமான பேய்ச் சிரிப்பைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டு அண்ணாந்து பார்த்தார்கள்.

இரண்டு பேரின் தலைக்கு மேலேயும் இரண்டு மரக்கிளைகளில் இரண்டு வேதாளங்கள் உட்கார்ந்திருந்தன!

இரண்டு வேதாளங்களும் அந்த இரண்டு வீரர்களின் கன்னத்திலும் பளீர் என்று அறைந்து, கழுத்தைப் பிடித்து நெட்டிக் கீழே தள்ளின!

பிறகு, அந்தப் பொல்லாத வேதாளங்கள் குதிரைகளின் மீது ஏறிக் கொண்டு காட்டைக் கடந்து திறந்த மைதானத்தில் விரைந்து சென்றன!

அத்தியாயம் 11
தோழனா? துரோகியா?

மணிமுத்தா நதி வெள்ளாற்றில் கலக்கும் வனப்பு வாய்ந்த இடத்தைத் தாண்டி ஆதித்த கரிகாலனும் அவனுடைய தோழர்களும் பரிவாரங்களும் வந்து கொண்டிருந்தார்கள்.

முதல் நாள் இரவு திருமுதுகுன்றத்தில் இளவரசருக்கு நடந்த உபசாரங்களைப் பற்றியும், அந்த க்ஷேத்திரத்தில் நடந்து கொண்டிருந்த ஆலயத் திருப்பணியைப் பற்றியும் அவர்கள் பேசிக் கொண்டு வந்தார்கள்.

"திருமுதுகுன்றத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் செய்த காரியம் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது!" என்றான் பார்த்திபேந்திரன்.

"எதைப் பற்றிச் சொல்லுகிறாய்?" என்று ஆதித்த கரிகாலன் கேட்டான்.

"கிழவியைப் பாட மாட்டேன் என்று சொன்னதைத்தான்!"

"அது என்ன? எனக்குத் தெரியாதே? விவரமாகச் சொல்" என்றான் ஆதித்த கரிகாலன்.

சுந்தரமூர்த்தி நாயனார் க்ஷேத்திர யாத்திரை செய்து கொண்டு வந்த பொழுது திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்துக்கு வந்தார். வழக்கம் போல் அந்த ஊர் சிவாலயத்துக்குச் சென்றார். பட்டர்கள் நாயனாருக்குச் சுவாமி தரிசனம் பண்ணுவித்து, "எங்கள் ஊர் இறைவன் பேரிலும் பதிகம்பாடி அருள வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டார்கள்.



"பார்ப்போம். இந்த ஆலயத்திலுள்ள சுவாமியின் பெயர் என்ன?" என்று சுந்தரர் கேட்டார்.

திருமுதுகுன்றம் என்ற பெயரைக் கொண்டு அந்தச் சிவாலயத்திலுள்ள சுவாமிக்கு **விருத்தகிரீசுவரர்** என்று பெயர் சூட்டியிருந்தார்கள். பட்டர்கள் அந்தப் பெயரைச் சொன்னார்கள்.

நாயனாரின் முகம் சுருங்கிற்று. போயும் போயும் கிழவரையா பாட வேண்டும் என்று மனத்தில் எண்ணிக் கொண்டு, "போகட்டும்; அம்மன் பெயர் என்ன?" என்று வினவினார்.

"விருத்த கிரீசுவரி" என்றார்கள் கோவில் பட்டர்கள்.

"சுவாமிக்குத்தான் கிழவர் என்று பட்டம் கட்டினீர்கள்; அம்மனையும் கிழவியாக்கி விட்டீர்களே? கிழவனையும் கிழவியையும் என்னால் பாட முடியாது போங்கள்!" என்று சொல்லிவிட்டுச் சுந்தரமூர்த்தி நாயனார் கோபமாகக் கோவிலை விட்டுக் கிளம்பி விட்டார்.

சுந்தரமூர்த்தி நாயனாரால் பதிகம் பாடப் பெறாவிட்டால் தங்கள் ஊர் ஆலயத்துக்கு மகிமை ஏற்படாது என்று பட்டர்கள் கருதினார்கள்.

ஆகையால் ஆலயத்தில் இன்னொரு அம்மனைப் பிரதிஷ்டை செய்து 'பாலாம்பிகை' என்று பெயர் சூட்டினார்கள்.

மறுபடியும் சுந்தரமூர்த்தி நாயனார் இருந்த இடத்துக்குப் போய் அவரிடம் மேற்படி விவரத்தைச் சொல்லித் திரும்பவும் திருமுதுகுன்றம் ஆலயத்துக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனார் பெரிய மனசு செய்து மீண்டும் அந்த ஊருக்குச் சென்று பாலாம்பிகை சமேத விருத்த கிரீசுவரர் மீது பதிகம் பாடித் துதித்தார்!

இந்தக் கதையைக் கேட்டுவிட்டு ஆதித்த கரிகாலன் உடல் குலுங்கக் குலுங்கச் சிரித்தான்.

"பெரிய பழுவேட்டரையரிடம் வந்த கவிஞன் யாராவது ஒருவேளை சுந்தரமூர்த்தியைப் போல் சொல்லியிருப்பான். கிழவனையும் கிழவியையும் பாட மாட்டேன் என்று கூறியிருப்பான். அதற்காகத்தான் அவர் நந்தினியை மணந்து கொண்டாரோ, என்னவோ?" என்றான்.

இதைக் கேட்டுப் பார்த்திபேந்திரனும் கந்தமாறனும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். அப்படி அவர்கள் சிரித்த சிரிப்பில் குதிரை மேலிருந்து கீழே விழுந்து விடுவார்கள் போலிருந்தது.

சிரித்து ஓய்ந்த பிறகு, பார்த்திபேந்திரன், "கடவுள் முதுமை என்பதாக ஒன்றை எதற்காக ஏற்படுத்தியிருக்கிறாரோ, தெரியவில்லை. அவரவர்களும் அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட வயது வரையில் ஒரே மாதிரி இருந்து விட்டுச் சாவது என்று ஏற்படுத்தியிருக்கக் கூடாதோ?" என்றான்.

"கடவுள் என்ன ஏற்படுத்தினால் என்ன? முதுமை அடைவதும் அடையாததும் நம்முடைய கையிலேதான் இருக்கிறது?" என்றான் கரிகாலன்.

"அது எப்படி முடியும்?" என்று கந்தமாறன் கேட்டான்.

"அபிமன்யுவையும் அரவானையும் கிழவர்கள் என்று நாம் எண்ணுவதுண்டா?"

மற்ற இருவரும் ஒன்றும் கூறாமல் மௌனமாயிருந்தார்கள்.

"தஞ்சாவூர் அரண்மனைச் சித்திர மண்டபத்தில் என் மூதாதையர்களின் சித்திரங்கள் எல்லாம் எழுதியிருக்கின்றன. விஜயாலய சோழர், ஆதித்த சோழர், பராந்தகசக்கரவர்த்தி எல்லாரும் முதிய பிராயத்தவராகக் காட்சி அளிக்கிறார்கள். ஆனால் என் பெரிய பாட்டனார் இராஜாதித்தர் எப்படியிருக்கிறார்? நவ யௌவன வீர புருஷராக விளங்குகிறார்! இராஜாதித்தர் இளம் வயதில் இறந்து போனார்; அதனால் என்றைக்கும் அவர் யௌவனம் நீங்காத பாக்கியசாலி ஆனார்! நம்மில் யாருக்கு அத்தகைய பாக்கியம் கிட்டுகிறதோ, தெரியவில்லை!"

மற்ற இருவருக்கும் இந்தப் பேச்சு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அவர்கள் மௌனமாகவே இருந்தார்கள்.

"ஏன் திடீரென்று மௌனமாகிவிட்டீர்கள்? சாவு என்றால் உங்களுக்கு ஏன் இவ்வளவு பயம்? இந்த உடம்பு போனால் இன்னொரு புத்தம் புதிய உடம்பு கிடைக்கிறது. எதற்காக மரணத்துக்கு அஞ்ச வேண்டும்? என்னுடைய நண்பன் வந்தியத்தேவன் இங்கே இருந்தால் என்னை ஆமோதிப்பான். அவனைப் போன்ற உற்சாக புருஷனைக் காண்பது அரிது. யமலோகத்தின் வாசலில் கொண்டு போய் விட்டாலும் அவன் குதூகலமாய்ச் சிரிப்பான்!" என்றான் இளவரசன் கரிகாலன்.

அச்சமயத்தில் அவர்களுக்கு எதிரே சாலையில் இரண்டு குதிரைகள் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வெகு வேகமாக வருவதை அவர்கள் பார்த்தார்கள். கண்மூடித் திறக்கும் நேரத்தில் அக்குதிரைகள் அவர்களை நெருங்கி வந்து விட்டன. அவை வந்த வேகத்தைப் பார்த்தால் இளவரசர் கோஷ்டி எதிரில் வருவதைக் கூடக் கவனியாமல் தாண்டிப் போய்விடும் எனத் தோன்றியது.


அவ்வளவு அகம்பாவம் பிடித்தவர்கள் யார் என்று பார்ப்பதற்காகக் கந்தமாறனும் பார்த்திபேந்திரனும் வேல்களை நீட்டிச் சாலையின் குறுக்கே வழிமறிக்க ஆயத்தமானார்கள்.

ஆனால் வந்த குதிரைகள் அவர்களுக்குச் சிறிது தூரத்தில் தடால் என்று பிடித்து இழுத்து நிறுத்தப்பட்டன.

வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் குதிரைகள் மீதிருந்து கீழே குதித்தார்கள்.

வந்தியத்தேவனைக் கண்டதும் இள

அருள்வாக்கு



உங்களில் ஒவ்வொருவருமே நம்முடைய இத்தனை சாஸ்திரங்களில் வித்யைகளில், கலைகளில் ஏதாவதொன்றிலாவது தேர்ச்சி பெற வேண்டும். ஆபீசுக்குப் போனேன், சம்பாதிச்சேன், குடும்பம் நடத்தினேன் என்பதோடு நின்று விடாமல் நூற்றுக்கணக்காக இருக்கப்பட்ட நம்முடைய வித்யைகளில் ஏதாவதொன்றிலாவது ஒவ்வொருத்தரும் நல்ல ஞானம் சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

''எத்தனையோ வாழ்க்கைப் பிரச்னை எங்களுக்கு. ஆபீஸ் கார்யம், வீட்டுக் கார்யம் என்று அலைகிறோம், அவதிப்படுகிறோம். அது தெரியாமல், எங்கேயோ மடத்தில் உட்கார்ந்து கொண்டு 'அதைக் கத்துக்கோ, இதைக் கத்துக்கோ' என்று நீங்கள் உபதேசம் பண்ணினால் எப்படி? '' என்று கேட்கலாம். மனஸிருந்தால் எதையும் செய்து விடலாம். இத்தனை வாழ்க்கை பிரச்னை இருந்தாலும் எத்தனை பொழுது அரட்டை, நியூஸ் பேப்பர், சினிமா, சீட்டுக்கட்டு இத்யாதியிலே போகிறது? இப்படி வீணாகப் போகிற காலத்தில் பாதி பொது நலப் பணிகளுக்கு என்றும், பாதி ஏதாவது வித்தியாப்யாஸத்துக்கு என்றும் வைத்து விட்டால் போதும் — ஸமூஹப் பணிகளும் நடந்து விடும், நம்முடைய வித்யைகளும் பிரகாசம் பெற்றுவிடும். நாமும் ப்ரகாசம் பெற்று விடுவோம்.

வேலை வெட்டி குடும்பத் தொல்லை என்று மன்றாடுபவர்களுக்கு 'டைவர்ஷன்' வேண்டாமா என்று கேட்கலாம். ஆசையோடு மனஸ் ஈடுபட்டு ஏதாவது ஒரு வித்யை அப்யஸிக்க ஆரம்பித்தீர்களானால் உங்களுக்கே தெரியும், இந்த அப்பியாஸத்தை விடப் பெரிய 'டைவர்ஷன்' எதுவும் இல்லையென்று. களைத்துப் போன மனஸுக்கு வேண்டிய உத்ஸாகத்தை இவையே (வித்யைகளே) ஊட்டி விடும். அப்படியும் ஒரேயடியாக நீங்கள் 'டைவர்ஷன்' என்பதை விட்டு விடும்படி சொல்லவில்லை. அதுவும் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள்! ஆனால் நீங்களே ஆலோசித்துப் பார்த்து, ''இப்படிப் பொழுதை வேஸ்ட் பண்ணுகிறோமே' என்று நினைக்கக் கூடியவைகளை விட்டு விட்டு — இப்படி நிறைய அகப்படும் — அந்தப் பொழுதை இப்படியொரு Pursuit—ல் (தேட்டத்தில்) செலவிட்டால் போதும் ஏதாவதொரு ஸ்வதேச வித்யையில் ஈடுபட்டுத் தேர்ச்சி பெற்று விடலாம்! நம் முன்னோர்கள் போன வழி அதுதான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

வரசன் ஆதித்த கரிகாலனுக்குக் குதூகலம் தாங்கவில்லை. அவனும் குதிரை மீதிருந்து கீழே குதித்து முன்னேறிச் சென்று வந்தியத்தேவனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.


''தம்பி! உனக்கு வயது நூறு. இப்போதுதான் உன் பெயரைச் சொல்லி ஒரு கண நேரங்கூட ஆகவில்லை!'' என்றான் கரிகாலன்.

கந்தமாறனும்... பார்த்திபேந்திரனும் இந்தக் காட்சியைப் பார்த்து அடைந்த அசூயை அவர்கள் முகத்தில் தெரிந்தது. அவர்கள் சற்று முன்னால் குதிரையைச் செலுத்திக் கொண்டு போய் நின்றார்கள்.

சிறிது தூரத்தில் இன்னும் சில குதிரைகள் வருவதை அவர்கள் கண்டார்கள். சில நிமிஷத்துக்கெல்லாம் அந்தக் குதிரைகளும் வந்து நின்றன. அந்தக் குதிரைகளின் மீது வந்தவர்கள் கடம்பூர் ஆட்கள் என்பதைக் கந்தமாறன் கவனித்தான். அவர்களிடம் நெருங்கிச் சென்று விவரம் கேட்டான்.

பின்னர், இளவரசன் ஆதித்த கரிகாலனிடம் வந்தான். ''கோமகனே! இந்த வந்தியத்தேவன் தங்களுக்கும் நண்பன்; எனக்கும் சிநேகிதனாகத்தான் இருந்தான். ஆனால் இவன் மீது நான் குற்றம் சுமத்த வேண்டியதாயிருக்கிறது. இவன் சிநேகத் துரோகி! இவன் என்னை முதுகில் குத்திப் படுகாயப்படுத்தினான்! ஆகையால் இவன் விஷயத்தில் தாங்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்று எச்சரிப்பது என் கடமையாகிறது!'' என்றான் கந்தமாறன்.

(தொடரும்)



மகிழ்ச்சியின்



ராகத்தை



ஆண்டுமுழுவதும் அனுபவிக்க எங்கள் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

SHRIRAM GROUP COMPANIES MADRAS

ஸ்ரீராம் குருப் கம்பெனிகள்

தலைமை அலுவலகம் :
''ஸ்ரீராம் ஹவுஸ்'', 10, கஸ்தூரி எஸ்டேட்,
சென்னை-86. போன் : 454805/452113.

கிளைகள்: சென்னை • அடையாறு • அண்ணாநகர் • ஜார்ஜ் டவுன் • மவுண்ட் ரோடு • மைலாப்பூர் • தி.நகர் • தெற்கு உஸ்மான் ரோடு • கச்சேரி ரோடு • T.H. ரோடு.

அகமதாபாத் • எர்ணாகுளம் • கல்கத்தா • கும்பகோணம் • கோயம்புத்தூர் • செகந்தராபாத் • சேலம் • திருச்சி • நாகப்பட்டிணம் • நாக்பூர் • நெய்வேலி • நெல்லூர் • பம்பாய் • புது டில்லி • புனே • பெங்களூர் • மதுரை • மைசூர் • ராஜமுந்திரி • விசாகப்பட்டிணம் • விஜயவாடா • ஹுப்ளி.

ADWAVE/SGC/3698 TAM

சேமிப்பு என்பது தேன் கூடு-ஸ்ரீராமில் சேமித்துப் பார்த்தால் கண் கூடு!


துப்பறியும்
சூர்யா - கிரண்
நவீன் பிரதாப் முல்லிக்
ரேணை மீட்க வந்த அதிகாரிகள், பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், முப்படைத் தளபதிகள் அனைவருக்கும் சதித் திட்டம் பற்றிய தகவல்கள் அனுப்பினர்.
கல்தானின் நீர்மூழ்கியை இந்தியக் கப்பற் படை நாலா திசைகளிலும் சூழ்ந்து கொண்டது.
கல்தானுடன் ரேடியோ தொடர்பு கொண்டு......
கல்தான்! உன் சதித் திட்டம் அம்பலமாகிவிட்டது......
...நாலாபுறமும் உன்னைக் கடற்படை சூழ்ந்திருக்கிறது. நீ சரணடைவது நல்லது.
முடியவே முடியாது! எனக்கு வழிவிடுங்கள்; இல்லாவிட்டால் கடற்படையையே தாக்கி அழிப்பேன்!
கோபத்தில் கல்தான் மதியிழந்து தன் நீர்மூழ்கியிலிருந்து ஏவுகணை அனுப்பினான்.
கடற்படை பதிலுக்குத் தாக்க, நீர்மூழ்கி நொறுங்கிச் சிதறியது. சதிகாரர்களில் ஒருவர் கூட உயிர்தப்பவில்லை.
ரேணுக்குத் தேசிய விருது......
கல்தானின் மறைவிடத்தை போலீஸ் கண்டுபிடித்தது... விஞ்ஞானிகள் விடுதலை!
22
(முற்றும்)

வட்டமேஜை

* சப்தப்படாமல் ஒரு சங்கீதச் சிறப்பிதழ் அளித்து ஜமாய்த்து விட்டீர்கள்... சிறுகதையிலிருந்து சிரிப்புகள், சிறப்புத் துணுக்கு கள் வரை எல்லாவற்றிலும் சங்கீத மணம்!

திருக்குவளை, கவிஞர். வெற்றிப்பேரொளி.

* மேல்நாட்டு இசையின் காது கிழியும் கூச்சலுக்கு இளைஞர் கள் ஆசைப்படும் இக் காலத் தில், கர்நாடக இசை, மெல்லிய குரல், இனிமையான பாட்டு என்று இளைஞர்களின் மனத் தில் ஒரு மாறுதலையும், மன நிறைவையும் தரும் சம்பிரதாய வின் பணி மிகவும் பாராட்டுதற் குரியது.

லால்குடி. எம். இராஜேந்திரன்.

* கலை விழாச் சிறப்பிதழுக் குப் பொருத்தமாய், இசையில் லயித்து நின்ற இரு இளைஞிக ளைத் தாங்கி வந்த அட்டைப் படம் மிக அருமை.

கோவை, உமார்த்தி.

* 'கலைவிழாச் சிறப்பிதழ்' மிக அருமையாகத் தயாரிக்கப்பட்டுள் ளது. நாட்டிய தாரகைகளின் வண் ணப்படங்கள் வெகு அருமை. விருது பெறும் கலைஞர்களைப் பற்றிய செய்திகள், தாங்கள் கற்ற முதல் கீர்த்தனை பற்றி வித்வான் களின் பேட்டி, அற்புதம். வாச கர்கள் சார்பாக மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

வெம்பாக்கம்,
கு. கன்னியப்பன்.

* லட்சுமி, ராதிகா ஆகியோ ரின் அரசியல் அறிவு இன்றைய பல அரசியல்வாதிகளை விடக் குறைந்ததல்ல என்ற தராசின் பதில், நூற்றுக்கு நூறு உண்மை. அந்த அளவிற்கு நமது அரசியல் வாதிகள் தரம் தாழ்ந்துதான் இருக்கிறார்கள். இது மறுக்க முடியாத உண்மை.

கரூர், எம். தனபாலன்.

* 'மீசைக்கும் ஆசை கூழுக்கும் ஆசை' என்ற நிலையில் இருக் கும் திலீபன் போன்ற கவசித் தனை இல்லாத கோழைகளுக்கு சரோஜினி கேரக்டர் மூலம் 'சவுக்கடி' கொடுத்த சொ. பிர பாகரனின் 'தண்டனை' ரிவ்வி ஆப்பர்!

மயிலாடுதுறை, கிருட்டிண. எழில்.

* "தண்டனை" — சிறுகதை யில் வருகிற மாதிரி, பாதிக்கப் பட்ட பெண்கள் வீட்டிற்கும்



சப்தம் இல்லாமல் ஒரு சங்கீதச் சிறப்பிதழ்...

ளுக்கும் பயந்து கோழைத்தன மாக இல்லாமல் துணிந்து போராடினால்தான் ஆண்கள் அனைவரும் திருந்துவார்கள்.

தக்கோலம், அ. முஸ்தபா.

* கண்மூடித்தனமாக செலவு செய்யும் அரசுக்கு நன்கு உறைக் கும்படி அமைந்திருந்தது தலை யங்கம். ராஜீவ் தமது ஆடம்பரச் செலவுகளைக் குறைத்தால் நாட் டுக்கும் நல்லது; ஆட்சிக்கும் நல்லது.

சிதம்பரம், எஸ். சக்திவேல்.

* உற்பத்திப் பெருக்கிற்கும், நாட்டின் பொருளாதார முன் னேற்றத்திற்கும், நாட்டு மக் களின் நல்வாழ்விற்கும் பணத் தைச் செலவழிக்காமல், ஊதா ரித்தனமான செயல்களுக்காகச் செலவிடும் நமது அரசாங்கத் தின் போக்கினால் நாட்டில் பண வீக்கம் ஏற்படுவதோடு, விலை வாசி உயர்வும், புதிய வரிகள் என்ற வகையில் பல இன்னல் களும் ஏற்படுகின்றன. இதைத் தலையங்கம் மூலம் தெளிவாக உணர்த்தி விட்டீர்கள்!

மதுரை, எஸ். செல்வன்.

* கலைகளில் மட்டுமல்ல, வாழ்வின் எல்லா அம்சங்களி லும் இன்று தேக்கம் நேர்ந்திருக் கிறது. இதிலிருந்து விடுபட வேண்டுமானால் இந்தியா ஒரு கருத்துப் புரட்சிக்குத் தயாராக வேண்டும். புதிய மாற்றங்கள் வலுக்கட்டாயமாகப் புகுந்தால், அவை வெறும் அலங்காரமா கவே இருக்கும். அவை ஒரு நெறி முறையாக Ethics ஆக உருப் பெறும் போதுதான் முரண்பாடு கள் தீரும். மாலனின் இந்த வரிகள் மிக அருமை.

சஞ்சிபுரம், தமிழ். எழிலன்.

* கலைவிழாச் சிறப்பிதழை அணி செய்தவற்றுள் மாலனின் 'அலங்காரம்' குறிப்பிடத்தக்கது. 'சமூகத்தைப் போஷிக்காத வெற்று அலங்காரக் கலைகளால் பலனேதுமில்லை' என்பதை எத் தனை அழகாகவும் தெளிவாக வும் சொல்லி விட்டார் மாலன்!

பறங்கிப்பேட்டை, ஹ. பாபு.

* கிரீஷ்கர்னாட் ஓர் உண்மைக் கலைஞன் என்றால் பணத்துக் காகத்தான் சினிமாவில் நடிக்கி றேன் என்று கூற மாட்டார். சினிமாவிலும் நல்ல கதாபாத் திரங்களையே நடிப்பது, நல்ல கதைகளையே படமாக இயக்கு வது போன்றவையும் நல்ல கலைச் சேவைதான் என்பதை எப்படி அவர் மறந்தார்?

வள்ளியூர், என். பெனிட்டோ குமார்.

* கிரீஷ்கர்னாட் பேட்டி மூலம் நாடகத் தொடர்பான பல நல்ல விவரங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. அவரின் பேட்டி கலை விழாச் சிறப்பிதழை மேலும் சிறப்பாக்கியது.

பாண்டிச்சேரி, நா. கிருஷ்ண வேலு.

* 'சங்கீத சேவி'ல் விருது பெறுகின்ற கலைஞர்களைப் பற்றிய கட்டுரையில், சென்னை இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸின் 'சங்கீத கலாசிகாமணி' விருது பெற்றுள்ள பிரம்மஸ்ரீ டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகளைப் பற்றி ஒரு வார்த்தை கூட குறிப் பிடாதது ஏன் என்று புரிய வில்லை!

சென்னை — 11, என். சி. சேகர்.

(எமது நிருபர் பாலகிருஷ்ண சாஸ்திரிகளுடன் போனில் தொடர்பு கொண்ட போது, அவர் தம்மைப் பற்றியோ ஹரி கதையைப் பற்றியோ ஏதும் வெளியிட வேண்டாம் என்று தெரிவித்து விட்டார். — ஆசிரியர்.)

9

இன்று இறப்பு விழா

இரவு மணி எட்டு.

அமைச்சர் காமோத் 'பான்' போடவும் மறந்து பதற்றமாய் நடை பயில, சுற்றிலும் போலீஸ் அதிகாரிகள். மையமாய் ஹில் தெரிந்தார். போன நிமிஷம் அமைச்சரிடம் சொன்ன அதே வாக்கியத்தை மறுபடியும் சொன்னார்.

''நாம் அந்த இந்தியக் கழுகுகளை அலட்சியப்படுத்துவதற்கில்லை ஸார். அவர்கள் எதையும் செய்யக் கூடியவர்கள் என்றே என் மனத்துக்குப் படுகிறது.''

நடை பயில்வதை நிறுத்திய காமோத், தம் யானைக் கண்களினால் கமிஷனரைக் கோபமாய்ப் பார்த்தார்.

''அவர்களுக்குப் பயந்து ஒலிம்பிக் போட்டியை பகிஷ்காரம் பண்ணச் சொல்கிறீர்களா...?''

''நான் அப்படிச் சொல்லவில்லை ஸார்.''

''பின்னே நீங்கள் சொல்வதற்கு என்ன அர்த்தம்?''

ஹில் தயக்கமாய்ப் பேசினார். ''அவர்களைச் சாதுரியமாகக் கையாள வேண்டும் என்று சொல்கிறேன். நாம் பிடிவாதம் காட்டுவதாக அவர்கள் உணரக் கூடாது...''

''சரி... எப்படிக் கையாள வேண்டும்...? நீங்களே சொல்லுங்கள்.''

''யோசிக்க வேண்டும்...''

காமோத் எரிச்சலானார்: ''மிஸ்டர் கமிஷனர்! இதில் யோசிக்க ஒன்றுமேயில்லை. ஒலிம்பிக் வீரர்களைப் பாதுகாக்க நீங்கள் மேற்கொண்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் சரியில்லை. ஹோட்டலுக்குள்ளேயே கயல்விழி கடத்தப்பட்டிருக்கிறாள். பொய்த் தகவல் கொடுத்த பேரர் யார் என்பதை உங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. நம் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏகப்பட்ட ஓட்டைகளை வைத்துக் கொண்டு, இந்தியக் கழுகுகளை நினைத்து பயப்படுவது தவறு...''

''ஸார்....!''

''எந்த ஒரு சால்ஜாப்பையும் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். பாதுகாப்பு ஏற்பாடுகளை மாற்றிப் பாருங்கள். அந்த இந்தியக் கழுகுகள் முடக்கப்பட்டு விடுவார்கள்.''

''ஒலிம்பிக் வீரர்களை வேறு ஹோட்டலுக்கு மாற்றி விடலாமா ஸார்?''

''நகரத்தில் வேறு எந்த ஹோட்டல்... உங்களுக்குப் பாதுகாப்பாய்ப் படுகிறது?''

''ஹோட்டல் காபிடல்.''

''எந்த விதத்தில் அந்த ஹோட்டல் ஒலிம்பிக் வீரர்களுக்குப் பாதுகாப்பாய் இருக்கும் என்று நினைக்கிறீர்கள்...?''

''மத்திய பம்பாயில் மிகவும் நெரிசலான பகுதியில் அமைந்துள்ள அந்த ஹோட்டலுக்குள் சமூக விரோதிகள் நுழைந்தால் தப்பிப் போவது மிகவும் சிரமம். மேலும் ஹோட்டல் காபிடலுக்குப் பக்கத்திலேயே போலீஸ் 'ஹெட்குவார்ட்டர்ஸு'ம், **சிறிய போலீஸ்** ஸ்டேஷனும் அமைந்துள்ளது.''

காமோத் யோசித்தார். பின், ''ஹோட்டல் காபிடலுக்கு ஒலிம்பிக் வீரர்களைக் கொண்டு வந்த பிறகு பாதுகாப்பு ஏற்பாடுகளில் என்ன மாற்றங்களைச் செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டார்.


ஹில் சொன்னார்: ''த்ரீ லேயர் ப்ரொடக்ஷன் முறையை மேற்கொள்ளப் போகிறோம் ஸார். ஹோட்டலையும், ஒலிம்பிக் வீரர்களையும் தீவிரமாய்க் கண்காணிக்க, டெலஸ்கோப்பிக் செக்யூரிடி ஸ்போர்ஸை ஹோட்டலைச் சுற்றியும் உள்ள உயரமான கட்டடங்களின் டெரஸில் நிறுவி அந்த ஸ்போர்ஸை இருபத்தி நான்கு மணி நேரமும் செயல்பட வைக்கலாம். இனி வரும் ஒரு மாத காலம் வரை அந்நியர் யாருக்கும் ஹோட்டல் காபிடலில் அறை தரக் கூடாது. ஹோட்டலில் பணிபுரிகிற அனைவருக்கும் அடையாளக் கார்டுகளைக் கொடுத்து.....''

அமைச்சர் காமோத் கையமர்த்தினார். ''எதையும் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். உடனே செயல்படுத்துங்கள். மேற்கொண்டு கவலையளிக்கிற மாதிரி எனக்கு எந்த செய்தியும் வரக் கூடாது...''

''எஸ் ஸார்'' கமிஷனர் ஹில் அமைச்சருக்கு ஒரு விறைப்பான சல்யூட்டைக் கொடுத்து விட்டு, பூபேஷோடு வெளியே வந்தார். போலீஸ் அதிகாரிகளும் பூட்ஸ் சத்தங்களோடு பின் தொடர்ந்தார்கள். எல்லோர் உடம்பிலும் ஒரு பதற்றம்.

''மிஸ்டர் பூபேஷ்... இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் விளையாட்டு வீரர்களை

ராஜேஷ்குமார்



ஹோட்டல் ஒபராய் டவர்ஸிலிருந்து ஹோட்டல் காபிடலுக்குக் கொண்டு போக வேண்டும்.''

''கார்களில்தானே...?''

''வேண்டாம்...''

''பின்னே?''

''துப்பாக்கி குண்டுகள் துளைக்காத கண்ணாடிக் கதவுகள் பொருத்தப்பட்ட ஒரு வேனை ஏற்பாடு செய்து தருகிறேன். போலீஸ் பாதுகாப்போடு அவர்கள் ஹோட்டல் காபிடல் போய்ச் சேரட்டும். காலையில் எழுந்து பயிற்சிகளை மேற்கொள்கிறவர்கள் அந்த வேனிலேயே ஸ்டேடியம் சென்று வரட்டும்...''

பூபேஷ் தம் முகத்தில் பொழிந்திருந்த வியர்வையைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டே சொன்னார். ''நீங்கள் எவ்வளவுதான் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தாலும் மனதுக்குள் ஒரு திகில் உறைந்து போயிருக்கிறது ஸார். அமைச்சர் பேகம் பேச்சுக்கள் கவலையைத் தருகின்றன. மனித உயிர்களைப் பற்றி அவர் கவலைப்படவில்லை.''

''பயப்படாதீர்கள் பூபேஷ். பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்தினால் இந்தியக் கழுகுகளை நிச்சயம் கட்டுப்படுத்தி விட முடியும்.''

மறுநாள் காலை ஐந்து மணி. பம்பாய் காலைப் பனியில் பதமாய் ஊறியிருந்தது.

துப்பாக்கிகளை ஏந்திய போலீஸ் ரெஜிமெண்ட் வேனுக்கு முன்னாலும் பின்னாலும் ஊர்ந்து வர, வேன் ஸ்டேடியத்திற்குள் நுழைந்தது. ஃப்ளட் லைட்டுகளின் வெளிச்சத்தில் போலீஸார் திடலைச் சுற்றிலும் வியூகம் போட்டிருப்பது தெரிந்தது. ஸ்டேடியத்தின் இருட்டான காலரிப் பகுதிகளில் டார்ச் லைட்களோடு செக்யூரிடி விங் செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள். எங்கும் ஓர் ராணுவ அவசரம்.

வேனின் வயிற்றிலிருந்து அத்லெடிக் ரோஸி பால்ராஜ், ஆஷா ராவ், சர்மா, தினேஷ், டெக்காத்தலேன் அர்ஜுன் கிருஷ்ணா... பயப் பார்வைகளோடு இறங்கினார்கள். அவர்களைத் தொடர்ந்து கீழே இறங்கிய நிகிலா உற்சாகமாய்க் கைகளை உயர்த்தி 'வார்ம் அப்' செய்து கொண்டே சிரித்தாள். ரப்பர் பந்தாய்க் குதித்தாள்.

''இப்படி போலீஸ் பாதுகாப்போடு ப்ராக்டீஸ் செய்வதும் ஒருவித த்ரில்தான். அம்மாடி....! எவ்வளவு போலீஸ்...''

''உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ப்ராக்டீஸ் செய்வது உனக்கு த்ரில்லாக இருக்கிறதா நிகிலா?'' ஆஷாராவ் கேட்டாள்.

''நிச்சயமாய் த்ரில்தான். நம் நாட்டின் பிரதம மந்திரிக்குக் கூட இவ்வளவு பாதுகாப்பு இல்லையே...?''

கோச் ரீடாசென் குறுக்கிட்டாள்.

''நிகிலா! வெட்டிப் பேச்சு வேண்டாம். ஸ்விம்மிங் ஸ்பாட்டுக்குப் புறப்படு.''

''நான் ரெடி...'' — நிலா ரீடா சென்னோடு ஸ்டேடியத்தின் பக்கவாட்டில் இருந்த ஸ்விம்மிங் பூலை நோக்கி நடந்தாள்.

''இன்னிக்கு முழுக்க முழுக்க உனக்கு டைவிங்தான்.''

''மேடம்.''

''சொல்லு.''

''டைவிங்ல எனக்கு தங்கம் கிடைக்கும்னு நம்பறீங்களா?''

ரீடாசென் சிரித்தாள். ''ஹாப் ட்விஸ்ட் டைவிங்ல முயற்சி பண்ணினாக் கிடைக்கும்.''

''எனக்கு நம்பிக்கையில்லை மேடம்.''

''நீச்சலில் நான்கு தங்கம். டைவிங்கில் ஒரு தங்கம். இது என்னோட அசைக்க முடியாத நம்பிக்கை. ஒலிம்பிக்கிலிருந்து நீ திரும்பியதும் இந்தியாவில் இருக்கிற ஒவ்வொரு குடிமகனும் உன் பெயரை உச்சரிக்கப் போகிறான். டெல்லியில் இருக்கும் ஏதாவது ஒரு ரோட்டுக்கு உன் பெயரை வைக்கப் போகிறார்கள். எல்லா வார இதழ்களின் அட்டைகளிலும் நீ சிரிக்கப் போகிறாய்.''

நீச்சல் குளத்தைத் தொட்டார்கள்.

ஃப்ளோரஸண்ட் விளக்குகள் நீச்சல் குளத்தை வெளிச்சமாக்கிக் காட்டியிருக்க, அதன் கரையோரத்தில் போலீஸ் எஸ்கார்ட்ஸ் ரைஃபிள்களோடு தெரிந்தார்கள். அதிகாரி ஒருவர் ரீடாசென்னை நோக்கி வந்தார்.

''குட்மார்னிங் மேடம்.''

''குட் மார்னிங்.''

''உங்கள் பாதுகாப்புக்காகத்தான் இருக்கிறோம். ஏதாவது உதவி வேண்டுமானால் எஸ்கார்ட்ஸ்களைக் கூப்பிடலாம்.''

''தாங்க்யூ.''

இருவரும் டைவிங் போர்டை நோக்கிப் போனார்கள். நிலா தான் தரித்திருந்த அங்கியைக் கழற்றிப் பக்கத்தில் இருந்த திட்டின் மேல் வைத்து விட்டு, ஸ்விம்மிங் சூட்டில் ஒரு மின்னல் மாதிரி வெளிப்பட்டுப் படிகளில் ஏறி, டைவிங் போர்டின் நுனிக்கு வந்து நின்றாள். கைகளைத் தொடைகளோடு பொருத்தி ஒரு நேர் கோடு மாதிரி நின்றாள்.

ரீடா சென் சொன்னாள்.

''ஹாப் ட்விஸ்ட் டைவ் போவதற்கு முன் ஃபார்வர்ட் டைப் ட்ரை பண்ணு.. நேற்றைக்கும் கூட நீ அதைச் சரியாப் பண்ணலை.''

நிலா தலையாட்டிக் கொண்டே உடம்பை ஒரு வெளிச்சக் கீற்று மாதிரி எம்பிக் காற்றில் இரண்டு முறை சுழன்று பின் கத்தி வீச்சு மாதிரி நீருக்குள் பாய்ந்தாள். 'ப்ளக்க்..'

''குட்...'' ரீடாசென் வாய் விட்டுக் கத்துவது நிலாவுக்கு கேட்க, நீரினின்றும் சிரிப்போடு தலையை உயர்த்திச் சிரித்தாள். அப்படியே மல்லாந்து பேக் ஸ்ட்ரோக் ஸ்விம்மிங் செய்து கொண்டே குளத்தின் கார்னரில் இருந்த இரும்புக் கைப் பிடிகளை நோக்கி வந்தாள்.


''க்விக்.. மை டியர் பேபி...'' — ரீடா சென் குரல் கொடுக்க வேக வேகமாய் நீந்தி வந்து இரும்புக் கைப்பிடிகளைப் பற்றினாள்.

அடுத்த விநாடி —

காற்று மண்டலமே கிழிந்து போகிற மாதிரி —

''ஈ ஈ ய்...ய்...ய்.....ய்....ய்...'' என்று பற்களை கிட்டிக் கொண்டு வீறிட்டாள் நிலா. உடம்பு நீருக்குள் விலுக் விலுக்கென்று உதறிக் கொண்டது.

போலீஸ் ஜீப் காற்றைக் கரைத்துக் கொண்டு ஸ்டேடியத்தின் காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைந்து ஸ்விம்மிங் பூலைத் தொட்ட போது இரண்டரை மணி. கமிஷனர் ஹில்லும் பூபேஷும் இறுகிப் போன முகங்



• மெர்வ் ஹ்யூஸ்

ஹாட்-டிரிக்

நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆஸ்திரேலியா — வெஸ்ட் இண்டீஸ் டெஸ்ட் தொடரில், முதல் டெஸ்டில், வெ. இண்டீஸின் வால்ஷ், தொடர்ந்து மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தி, 'ஹாட்-டிரிக்' சாதனை புரிந்தார்.

இதுவரை நடந்த டெஸ்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஹாட்-டிரிக் சாதனைகளில் இது முற்றிலும் மாறுபட்டது. ஏனெனில், இவர் முதல் இன்னிங்ஸின் கடைசி விக்கெட்டையும், அடுத்த இன்னிங்ஸில், இவர் போட்ட முதல் இரு பந்துகளில் மற்ற இரண்டு விக்கெட்டுகளையும் எடுத்து, முதன் முறையாக 'Broken hat-trick' எடுத்தார். hat-trick எடுத்த

களோடு இறங்கினார்கள். நீச்சல் குளத் திட்டைச் சுற்றிலும் ஒலிம்பிக் குழுவில் இடம் பெற்றிருந்த வீரர்கள் உறைந்து போய் நிற்க, நிகிலா கோணலாய்க் கிடத்தப் பட்டிருந்தாள். அருகே ரீடா சென் கர்ச்சிப் பால் வாய் பொத்தி உடல் குலுங்கிக் கொண்டிருந்தாள்.

ஹில் மெதுவாய் நடந்து வந்து நிகிலா வின் உடலருகே நின்றார். ப்ளோரஸண்ட் விளக்குகளின் வெளிச்சத்தில் நிகிலாவின் முகமும், உள்ளங் கைகளும் மசி பூசின சைஸில் தீய்ந்து போயிருந்தன. அருகே நின்றிருந்த டாக்டர் மெல்லிய குரலில் சொன்னார்.

''நிகிலாவின் உடல் ஏகப்பட்ட வோல் டேஜில் மின்சார அதிர்ச்சியை வாங்கியிருக் கிறது. உடனடி மரணம்...''

ஹில் திரும்பி நின்று குரல் கொடுத்தார். ''இங்கே எஸ்கார்ட் இன்சார்ஜ் யார்?''

''மிஸ்டர் வர்மா ஸார்.''

''அவரைக் கூப்பிடுங்கள்.''

''ஸ்டேடியத்திற்குப் பின்பக்கம் இருக்கும் ட்ரான்ஸ்பார்மரை பார்ப்பதற்காகப் போயி ருக்கிறார்.'' யாரோ சொல்லிக் கொண் டிருக்கும் போதே வர்மா வேக, வேகமாய் வந்தார். தரித்திருந்த யூனிஃபார்ம் அந்தக் காலை நேரத்திலும் எக்கச்சக்கமாய் வியர்த் திருந்தது. கமிஷனரின் எதிரே நின்று மூச்சு வாங்க சல்யூட் அடித்தார்.

''எங்கே போய்ட்டு வர்றீங்க...?''

''ட்ரான்ஸ்பார்மரை பார்க்க ஸார்'' — வர்மா திணறும் குரலில் சொல்லிக் கொண்டே ஸ்டேடியத்தின் பின்பக்கம் கை யைக் காட்டினார்.

''எதுக்கு...?''

''கரெண்ட் அங்கே இருந்துதான் இந்த இரும்புக் கைப்பிடிகளுக்கு சப்ளையாகி யிருக்கு ஸார்...''

''எப்படி கண்டுபிடிச்சீங்க?''

கையிலிருந்த ஒயரைக் காட்டினார்.

''கைப்பிடிகள் இணைகிற பாகத்திலி ருந்து இந்த மெலிசான ஒயர் உற்பத்தியாகித் தரைக்குக் கீழாகவே போய் அந்த ட்ரான்ஸ் பார்மரின் முக்கிய கேந்திரத்துக்குள் ஐக்கிய மாயிருக்கு ஸார். எலெக்ட்ரிக்கல் **உத வியாளர்** யாரையாவது வரழைச்சா மின் சாரம் எப்படி சப்ளையாச்சுங்கிற சூட்சுமம் தெரியும் ஸார்.''

''இங்கே மொத்தம் எத்தனை எஸ் கார்ட்ஸ்?''

''அஞ்சு பேர் ஸார்.''

''அஞ்சு பேரும் இங்கேதானே இருந் தீங்க?''

''எஸ்.. ஸார்.''

''உங்களுக்குத் தெரியாமே.. இந்த ஒயரிங் வேலை எப்படி நடந்திருக்கும்?''

''எக்ஸ்க்யூஸ்மீ ஸார்'' — வர்மா குறுக் கிட்டார்.

ஹில் திரும்பினார்.

''எஸ்.''

''இந்த ஒயரிங் ஒர்க் நாங்க ஸ்பாட்டுக்கு வர்றதுக்கு முந்தியே நடந்திருக்கு ஸார். ஒயரைப் புதைச்சு வெச்சிருந்த மண் பரப்பு ரொம்பவும் இறுகிப் போயிருந்தது. நிகிலா வைத் தீர்த்துக் கட்ட முன்னமேயே செஞ்ச ஏற்பாடு இது. நிகிலா அந்த இரும்புக் கைப் பிடியைத் தொடும் போது மட்டும் மின்சா ரம் பாய்கிற மாதிரி... யாரோ ட்ரான்ஸ் பார்மர்க்குப் பக்கத்தில் இருந்து செயல் படுத்தியிருக்காங்க...''

ஹில்லின் போலீஸ் மனத்தில் முதன் முதலாய் இந்தியக் கழுகுகளைப் பற்றி பெரி தாய் ஒரு பயம் ஜனித்தது.

(தொடரும்)

இரண்டாவது வெஸ்ட் இண்டீஸ் ஆட்டக் காரர் இவர்.

ஆனால் நடந்து முடிந்த இரண்டாவது டெஸ்டில், ஆஸ்திரேலிய ஆட்டக்காரர் ஹ்யூஸ் மற்றொரு புதுமையான ஹாட்-டிரிக் எடுத்துச் சாதனை புரிந்தார். எப்படி? அவர் எடுத்த மூன்று விக்கெட்டுகளில், முதலாவது விக்கெட்டை எடுத்தது, அவரது 36-வது ஓவரின் கடைசிப் பந்தில். இரண் டாவது விக்கெட்டை எடுத்தது, அவரது அடுத்த ஓவரின் முதல் பந்தில். அதுதான் அந்த இன்னிங்ஸின் கடைசி விக்கெட் ஆகும்.

எனவே, மூன்றாவது விக்கெட்டாக அடுத்த இன்னிங்ஸின் தன் முதல் பந்தில் கிரீனிட்ஜை வீழ்த்தினார்! இம்மாதிரி 'ஹாட்-டிரிக்' எடுக்க முடியுமா என்று சந்தேகம்தான்.

ஆஸ்திரேலியாவின் டி. ஜெ. மாத்யூஸ், தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக ஒரே டெஸ் டில், இரு தடவை ஹாட்-டிரிக் எடுத்துச் சாதனை புரிந்தார்.

டெஸ்டுகள் தவிர, முதல் தர ஆட்டங் களில், **(First Class Matches)** ஒரே மாட்சில் இரு தடவை 'ஹாட்-டிரிக் எடுத்து இதுவரை எட்டுப் பேர் சாதனை புரிந்துள்ளனர்.

கடைசியாக, 1978 — இல் இந்தியா, பாகிஸ்தானுக்குச் சென்ற போது, ஒரு மாட்சில் இந்தியாவுக்கெதிராக அமீன் லக் கானி இரு இன்னிங்ஸ்களிலும் 'ஹாட்-ட்ரிக்' எடுத்தார். இதில் முக்கியமான அம்சம் என்ன வென்றால், இரு இன்னிங்ஸ்களிலும் அவர், அதே ஆட்டக்காரர்களை வீழ்த்தினார் என் பது! அது மாத்திரமல்ல. மொஹிந்தர் அமர் நாத், ஒரே ஒரு ரன்னை ஏறக்குறைய எடுத் திருந்தால், அதுவும் ஒன்றாகவே இருந்திருக் கும்!

அதாவது மொஹிந்தர் 11 & 12 (இரு இன்னிங்ஸ்களில்).

கிர்மாணி 0 & 0.

கபில்தேவ் 0 & 0.

தகவல்: **மாலி**

முண்டாசை அவிழ்த்துக் கட்கத்தில் வைத்துக் கொண்டு, ஒரு விவசாயி கை கூப்பியபடி சொன்னார்: ''ஐயா! ரொம்ப சகஜமா நாங்க செய்யற காரியம் எவ்வளவு பெரிய தப்புன்னு, உங்க புள்ளைங்க சொல்லித் தந்தாங்க. அதுக்கு எப்படி நன்றி சொல்லறதுன்னே தெரியலை.'' இடம் பெரியார் மாவட்டம் முத்தாயி பாளையம் கிராமம். விவசாயியின் நன்றிக்குப் பாத்திரமானவர் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஜெயராஜ். பல்கலைக்கழக மாணவிகள் தென்னை பற்றி நடத்தின ஒரு விளக்கக் கூட்டத்துக்கு வந்த விவசாயிதான் நன்றி தெரிவித்தவர். ''வழக்கமான காரியம்'', என்று விவசாயி குறிப்பிட்டாரே அது என்ன தெரியுமா? தென்னை மரமேறும் போது அரிவாளை 'சரக்' 'சரக்' என்று மரத்திலே குத்திக் கொண்டே ஏறுவது.

''இதிலே என்ன தப்பு?'' என நாம் கேட்ட போது, ''அரிவாள் குத்து, தென்னை மரத்தில் துளை ஏற்படுத்துகிறது. இதன் மூலம் மரத்தினுள் வண்டு நுழைந்து, மேலே மேலே துளைத்துச் செல்கிறது. முடிவில் முழு மரமும், உள்ளுக்குள் குடையப்படுவதால், பயனற்று விழுகிறது. ஆனால் அரிவாள் வெட்டுத்தான் இந்த அழிவுக்கு அடிப்படைக் காரணம் என்று விவசாயிகளுக்குத் தெரியாது'' என்று விளக்கம் தந்தார் இணைப் பேராசிரியர் அரங்கநாதன்.

நிகழ்ச்சி முடிந்து வீடு திரும்பிய விவசாயிகள், தென்னங்கன்று நடும் போது என்ன உரம் இட வேண்டும்? எப்படி இட வேண்டும்? எப்போது, எவ்வளவு நீர் பாய்ச்ச வேண்டும்? என்று பல புதிய தகவல்களைத் தெரிந்து கொண்டு போனார்கள்.

இடம்: கணபதி பாளையம் கிராமம். உமையாள், கருணா, பெல்லா, உலகம்மாள், உமா என்று வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவிகள், நெல்லுக்கு நீலப் பச்சைப் பாசி இடுவதனால் ஏற்படும் பயன்களை விளக்குகிறார்கள். இதன் மூலம் காற்றிலுள்ள நைட்ரஜன் சத்து பயிருக்கு அதிகப்படியாய்க் கிடைக்கிறது; உரச் செலவு குறைகிறது; மகசூல் அதிகரிக்கிறது போன்ற உண்மைகளைக் கூடியிருக்கும் விவசாயிகளுக்கு உணர்த்துகிறார்கள்.



* முத்துசாமி

* வயலில் வகுப்பு





* எலிகளைக் கொல்ல...

விவசாய மாணவர்களும் மாணவ விவசாயிகளும்!

விவசாயிகள் மனத்தில் நாமும் இதை முயன்று பார்த்தால் என்ன?' என்கிற எண்ணம் தோன்றுகிறது.

சேலம் மாவட்டம் பேலூரில் மாணவர்கள் முகாம். தானிய சேதத்துக்கு முக்கிய காரணம் எலிகள்தான் என்று எடுத்துச் சொல்வதோடு நிற்காமல் எலிகளை ஒழிப்பது எப்படி என்றும் விளக்குகிறார்கள். வீடுகளில் குப்பை கூளம் சேராமல் பார்த்துக் கொள்வதிலிருந்து, ஜிங்க் பாஸ்பேட் வைத்து எலிகளைக் கொல்வது வரை ஏகப்பட்ட வழிகளைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். ''எலிகளை ஒழிப்போம்! இழப்பினைத் தவிர்ப்போம்!'' என்று அச்சிட்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கிறார்கள்.

கடந்த நவம்பர் மாதம் சுமார் நாற்பது வேளாண்மைப் பல்கலைக் கழக இறுதி யாண்டு மாணவ, மாணவிகள் சேலம், தர்மபுரி, பெரியார், கோவை மாவட்டங்களில் ஏழு கிராமங்களில் தனித் தனிக் குழுக்களாய் முகாமிட்டிருந்தனர். இதற்கு 'வயல்வெளி அனுபவத் திட்டம்' என்று பெயர். ''இது மாணவர்களிடையேயும், விவசாயிகள் மத்தியிலேயும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்தகைய திட்டம் இந்தியாவிலேயே, இங்கே மட்டும்தான் செயல்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்க அம்சம்'' என்றார் பல்கலைக் கழகத்தின் விவசாய விரிவாக்கப் பிரிவின் பேராசிரியர் டாக்டர் பெருமாள்.

பல்வேறு கிராமங்களிலும், இத் திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகள் காளான் வளர்ப்பு, சொட்டு நீர்ப் பாசனம், பருத்தியில் புழுக்களைக் கட்டுப்படுத்தும் முறைகள், கரும்புச் சாகுபடியில் சந்திக்கும் பிரச்னைகள், மண் மாதிரி எடுத்தல், வாழைச் சாகுபடியும் நோய்த் தடுப்பு வழிகளும் என்று பலப்பல விஷயங்கள் குறித்துச் செயல்முறை விளக்கக் கூட்டங்கள் நடத்தியுள்ளனர். இதனால் பலனடைந்துள்ளது விவசாயிகள் மட்டுமல்ல; மாணவர்கள் மட்டுமல்ல; விவசாய விஞ்ஞானமே பயன் அடைந்திருக்கிறது! எப்படி?

''உதாரணமாய் ''நெல்லுக்கு யூரியா போடுங்கள்'' என்று நாங்கள் விவசாயிகளிடம் சொல்கிறோம். ஆனால் நெல்லுக்கு யூரியா போடும் போது புண்ணாக்குத் தூளுடன் கலந்து வைத்திருந்து, பின்னர் உரமிட்டால், யூரியாவிலிருந்து, அதிகப்படி சத்து நெல்லுக்குக் கிடைக்கும் என்பது விவசாயிகளுடன் பேசி, அவர்கள் பிரச்னையை அறிந்து, அதன் பேரில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டறிந்த உண்மை'' என்று ஒரு மாணவர் விளக்கினார்.

பல்வேறு கிராமங்களிலுமுள்ள



* செயல்முறை விளக்கக் கூட்டம் நடக்கிறது...

விவசாயிகளிடம் பேசிய போது, அனைவருமே பொதுவாய்த் தெரிவித்த பிரச்னை, குறித்த நேரத்தில் பாங்குகள் விவசாயத்துக்குக் கடனுதவி செய்வதில்லை; அரசாங்க மான்யம் சரிவரக் கிடைப்பதில்லை என்பதுதானாம். ''காலம் தவறின பின் விவசாயத்துக்குக் கடன் கிடைத்தால் என்ன? கிடைக்காமல் போனால்தான் என்ன?'' என்று ஒரு மாணவர் அலுத்துக் கொண்டார்.

இந்த மாணவர்கள் வருகை, எந்த அளவுக்கு விவசாயிகளுக்குப் பயனளித்துள்ளது என்று அறிய பள்ளிபாளையம் கிராமத்தில் ஒரு சாம்பிள். ஒன்பது ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரரான முத்துசாமி சொன்னார்: ''இந்தப் பக்கத்துல, இப்பல்லாம் கூலிக்கு ஆள் கிடைக்கிறது குதிரைக் கொம்பு. கூலியும் ஏகமாக் கேட்கறாங்க; கட்டுபடியாகலை. பயிரில் களை எடுக்கிற வேலையைச் சுலபமாக்க, களைக் கொல்லி மருந்து போடச் சொன்னாங்க இவங்க. நானும் போட்டிருக்கேன். நிச்சயம் நல்ல பலனிருக்கும்னு நம்பறேன்.''

மாணவி விஜயப்பிரியாவைக் கேட்டோம்: ''பழக்கமில்லாத கிராமத்தில், முன் பின் தெரியாத மக்களுடன் வந்து ஒரு மாதம் தங்கியிருக்க வேண்டுமே, இந்தத் திட்டத்தில்... இங்கே நீங்கள் எல்லாம் எப்படி இருக்கிறீர்கள்?''

முத்தாயி பாளையத்துப் பிரமுகர் முத்துசாமிக் கவுண்டரையும், அவரது மனைவியையும் சுட்டிக்காட்டி, ''ஐயாவும், அம்மாவும் எங்க எல்லாரையும் சொந்தப் பெண்களா நினைச்சு, உதவறாங்க; உற்சாகப் படுத்தறாங்க. மற்ற ஊர்களிலேயும் இதே மாதிரிதான் அன்பும், ஆதரவும் எங்களுக்குக் கிடைக்கின்றன'' என்றார் விஜயப்பிரியா. ''இந்த வருஷம் தீபாவளி, கார்த்திகையைக் கூட இங்கேயேதான் நாங்கள் ஜாலியாய்க் கொண்டாடினோம்னா பார்த்துக்குங்களேன்!'' என்றனர் அந்தக் குழுவைச் சேர்ந்த இதர மாணவிகள்.

கட்டுரை: **ஜங்லி**

படங்கள்: **சோமு**


புதிய வானம்

ஆர். எம். வீ. ரொம்பத்தான் பக்தி சிரத்தையோடு அமரர் எம். ஜி. ஆருக்குப் படையல் செய்திருக்கிறார்.

கதை என்னவோ கௌபாய் தர்ஜமா தான். முறையாகச் சட்டப் பிடிப்பு எட்டிப் பார்க்காத புறநகரில் ஒரு பக்கா ரௌடி அட்டகாசக் கொடுமைகள் பல செய்வான். அவனுக்குச் சவால் விட்டுப் பல தியாகங்கள் செய்து ஒரு நெறியான சட்டக் காவலர் அவனைப் பலி கொள்வார். அதே மேற்கத்தியக் கதைதான்.

ஒரு வித்தியாசம். ஹாலிவுட் கௌபாய் தயாரிப்பில் சுற்றுச் சூழலாகட்டும், உடையாகட்டும், வாகனாதிகளாகட்டும் ஏற்றுக்





கொள்கிற மாதிரியாய் இருக்கும். மன்னிக்கவும், இதிலே அப்படி இல்லை.

நடிகர் திலகத்துக்கு இரண்டே முக்கால் நூறாவது படமாம். இன்னும் அசரவில்லை.

இளைய தலைமுறையை எடுத்தெறிந்து பேசியவர் பிறகு எதிரியிடம் அடிபட்டு விழுந்து கிடக்கும் போது தன் பழுத்த அனுமானம் பொய்த்துப் போக இளசின் கணிப்பு நிஜமாகிவிட்டதே என்று ஒருபுறம் அவமானமும் ஒருபுறம் உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் சேர, 'நீ சொன்னது சரிதான்,' என்று குரலிறங்கச் சொல்லும் போது எத்தனை முதிர்ச்சி!

'நான் இதுவரைக்கும் வந்தவங்களைப் போலவும் இல்லே; இனிமே வரப் போறவங்க மாதிரியும் இல்லே. என் டைப்பே தனி,' என்று தன்னை சத்யராஜ் அறிமுகப் படுத்திக் கொள்ளும்போது அந்த வித்யா கர்வத்தைப் பாராட்டத்தான் செய்கிறோம்.

மனைவியிடம் கொஞ்சலில் காட்டும் அன்னியோன்னியம்,தன்தந்தையைக்கொன்றவன்தான் இன்றைய எதிரி என்று இனம் கண்டு கொண்டதும் பீறிடும் வெறி, பிள்ளைக்குப் பிறந்தநாள் பரிசு வாங்கிப் போய் ஆசையோடு அழைக்கும் போது அவன் கொலை செய்யப்பட்டு விட்டதாய்ச் சொல்லக் கேட்டுப் பொங்கும் துக்கம் அத்தனையிலும் சத்யராஜின் தனி முத்திரை தெரிகிறது.

ரூபினி கதாநாயகி. ஊடலில் கிளுகிளுக்கிறார். என்னவோ உரையாடலில் அவர் உதடுகள் ஒத்துழைக்காமல் உதைக்கிறது. இருந்தாலும் கர்ப்பிணித் தோற்றத்தில் அவர் கதறும் கட்டத்தில் மனசைத் தொடுகிறார். அதிலும் பிள்ளை கொலை செய்யப்பட்டதைக் கணவனிடம் பாதி வார்த்தையும் பாதி அழுகையுமாய் விவரிக்கும் அந்த இடம் —

தேவலை, நடிக்க வரும் போலிருக்கிறதே!

கௌதமி ரொம்பச் சுத்தம். ஒரு சிருங்காரம், ஒரு சிரிப்பு — மூச். எதிர்பார்க்கக் கூடாது. நடிகை பயன்படவில்லையா, தயாரிப்பாளருக்குப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியவில்லையா?

ஜனகராஜ் தூள். அமீனா புகுந்த வீடு மட்டும் உருப்படாது என்பதில்லை. ஜனகராஜ் எந்த இடத்தில் அடியெடுத்து வைத்தாலும் அது அம்பேலாகிவிடுமாம். இதை மற்றவர்கள் சொல்வதில்லை. அவரே சொல்வது தான் விசேஷம்.

வல்லாளகண்டனான எதிரியின் முகாமுக்குள் என்னமோ சொந்தம் கொண்டாடிக் கொண்டு புகுந்து இஷ்டத்துக்குக் காமெராவைச் சுழற்றிப் படம் எடுத்துக் கொண்டு வந்து சேர்க்கிறாராம். சரியான காது புஷ்ப சமாசாரம். அதற்கப்புறம் அவரே அஸ்தமனமாகி விடுகிறார்.

கொலைகாரக் கோவிந்தன் சோச்சாவாக வெளிச்சம் போட்டுக் கோடீசுவரர் ஆகிக் கொடுங்கோல் நடத்துவது அட்டகாசம். விஜயகுமார் வில்லன் குரூப்பில் புதுக் கோணம் காட்டியிருக்கிறார். 'நான் யாருக்கும் எதிரியில்லை. என்னை எதிர்க்கிற பலம் எதிரிக்கு வந்துவிட்டதாக நினைக்கும் போதுதான் என் வேலையைக் காட்டுவேன்,' என்று அழகாகச் சிரித்துக் கொண்டே சாந்த சொரூபியாய் அவர் சொல்வது கிலி தருகிறது.


குதிரைக்கார சார்லி சரியான அவசரக் குடுக்கை. ஏதோ சத்யராஜ் அடியெடுத்து வைத்த கையோடு சாந்தி நகர் அந்தரங்கங்களையெல்லாம் பிட்டுப் பிட்டு வைத்தார். அடுத்து அவரைத் தேடிக் கொண்டு அவர் துணைவி வரும்போது அப்படியா 'உன் புருஷன் ஊரை மேய்கிறார்' என்கிற மாதிரி வத்தி வைத்து உசுப்பேற்றி விடுவார்!

அகலத் திரைக்கு வாகான அடிதடிகளில் ஆகட்டும், ஆர்ப்பாட்டமான செட்டிங்குகளிலாகட்டும், காமெரா அள்ளிக் கொடுத்திருக்கும் விதம் நிறைவு.

புது இசையமைப்பாளர் ஹம்சலேகா 'இம்ப்ரஸ்' பண்ணியிருக்கிறார். பாடலாசிரியர்கள் சிரத்தையோடு வார்த்தைக் கோப்புச் செய்திருப்பதும் தெரிகிறது.

இப்படி நடக்குமா என்று கேட்காமல் வெறும் கதை என்ற அளவில் ஏற்றுக்கொண்டால் நல்ல மசாலா, குளுமையான இசை, துள்ளலான நடிப்பு, நகைச்சுவை, கிளுகிளுப்பு — முதிர்ந்த தயாரிப்பாளர் போதிய விகிதாசாரத்தில் கலந்து கொடுத்திருக்கிறார் என்பதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

— பி. எஸ். எஸ்.



அவள்: ஏண்டி, உன் கணவர் எழுதின கதைகள்ல எது உனக்குப் பிடிச்சது?

இவள்: சந்தேகமென்ன, திரும்பி வந்த கதைகள்தான்!

— கடுவை கோபால்சாமி.

செந்தமிழ் நாடென்னும் போதினிலே...

ராமாவரம் அம்மையார்
மௌனப் புரட்சி மூலமே
ராஜ்யம் மீட்க நினைக்கிறார்!

ரோமாபுரி ராணியார்
வாஞ்சீஸம் காட்டியே
வரலாறு படைக்கிறார்!

மூவரான நால்வரோ
மூலைதேடி முடங்கியே
மோனத்தவம் செய்கிறார்!

சூரக்கோட்டை நாயகன்
வீரம்பேசிக் குலுங்கிட
விழிபிதுங்கி நிற்கிறார்!

கபிஸ்தலம் பெரியவர்
தில்லிராஜா பவனியில்
புள்ளிக் கோலம் போடுறார்!

குவளையூர்த் தமிழரோ
கூட்டுமேடைக் காட்சியில்
கோட்டையாளத் துடிக்கிறார்!

பேட்டைவாசி பொதுஜனம்
நாட்டையாளும் மன்னராய்
ஒட்டையேந்தி முழிக்கிறார்!

— சு. சங்கரசுப்பிரமணியன்

நீங்கள் கேட்டவை

— தராசு



* டெபாசிட் வசூல்.

* சிறந்த அறிவுரை





கருணை மனு

*** ரோஸ்லேண்டு ஸிலார் அஹமது. சென்னை.**

? வரப்போகும்தேர்தலையொட்டிபொது மக்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

! இந்த இதழில் உதயமூர்த்தி எழுதியுள்ளதைப் படித்துப் பாருங்கள். அதைவிடச் சிறப்பான அறிவுரையை யாரும் வழங்க முடியாது. ஹேட்ஸ் ஆஃப் டு உதயமூர்த்தி! (அவர் அறிவுரைப்படி நடந்து கொள்கிற மனப்பக்குவத்தை மக்கள் பெற்று விட்டார்களா என்பது வேறு விஷயம். நல்ல பாடத் திட்டங்களுடன் கூடிய சிறந்த கல்வி அறிவை அனைத்து மக்களுக்கும் அளிப்பதுதான் அத்தகைய மனோதிடத்தை உறுதி செய்ய முடியும்.)

*** ஜெ... பிஸ்மி, திருத்துறைப்பூண்டி. ***

? ஜெயலலிதா அணி சார்பில் தேர்தலில் போட்டியிட சீட் கேட்பவர்களிடம் ஒரு லட்சம் டெபாஸிட் வசூலிக்கப்படுகிறதே? ஒருவேளை இவர்கள் வெற்றி பெற்றால்?

! அவர்களால்தேர்தலுக்குச் செலவுசெய்ய முடியுமா என்று உறுதி செய்து கொள்ளத்தான் டெபாஸிட் வசூலிக்கப்படுகிறது என்றும் அவர்களிடமே திருப்பித் தரப்படும் என்றும் ஜெ. கூறுகிறார். இது தேர்தல் விதிமுறைகளுக்கே முரணானது என்பது ஒருபுறமிருக்க, நடப்பது ஜனநாயகமல்ல, பணநாயகமே என்பதற்குப் பகிரங்கமான சாட்சியும். இவர் மட்டுமல்ல, (கட்சிப் பணம் நிறைய இருப்பதால்) காங்கிரஸ் தவிர, இதர கட்சிகள் எல்லாமே வேட்பாளர்களால் செலவு செய்ய முடியுமா என்று பார்த்தே 'டிக்கெட்' தருகின்றன. இப்படி லட்ச லட்சமாகச் செலவு செய்து எம். எல். ஏ. பதவி பெறுகிறவர்கள் கோடி கோடியாகச் சம்பாதிக்கத்தான் எண்ணுவார்கள். நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ள தேர்தல் சீர்திருத்தச் சட்டம் இதையெல்லாம் சீர்திருத்தப் போவதில்லை என்பதுதான் துயரத்திலும் துயரம்!

*** ஆர். ரத்தினசாமி, புன்செய் புளியம்பட்டி.**

? பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள பெனாசிர் புட்டோவுக்கு எந்த முஸ்லிம் நாடும்வாழ்த்துத்தெரிவிக்கவில்லையாமே?

! வாழ்த்துத் தெரிவிக்காவிட்டாலும், பெண்ணுக்குச் சகலத்திலும் சம உரிமை என்னும் மாறி வரும் சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு வெறுப்புத் தெரிவிக்காமல் இருந்தாலே போதும். அதைக் கூட எதிர்பார்க்க முடியாத போது ஏமாற்றமாகத்தான் இருக்கிறது.

*** எ. பாலசந்திரன், கே. வி. குப்பம்.**

? பிரேமதாசா இலங்கை அதிபரானால்...?

* வாரிசு?



சோனியாவை கஸ்தூரிபாவின் வாரிசு என்கிறார்களா?

! ஆகிவிட்டாரே. சிறிமாவோவும் தோல்வியைக் கண்ணியமாக ஏற்றுக் கொள்ளத் தெரியாமல் போர்க் கொடி உயர்த்தி விட்டாரே! இத்தேர்தலே ஒரு மோசடி என்பதற்கு ஒரு கத்தை வோட்டுச் சீட்டுக்களைக் கண்டெடுத்துக் காட்டியிருக்கிறார். வாக்குப் பதிவு குறைந்த சதவீதத்தில் நடந்திருப்பதையும் சாட்சியமாக்குகிறார். சிறிமாவோ ஆதரவு பெற்றுள்ள ஜே. வி. பி. இயக்கத்துக்குப் பயந்துதான் பல வாக்காளர்கள் வோட்டளிக்க முன்வரவில்லை என்பதை அவர் மறந்து விட்டுப் பேசுகிறார். இனி, பிரேமதாசாவுக்குச் சோதனைக் காலம் தான். அதைவிடப் பெரிய சோதனை பிரேமதாசா பகிரங்கமாக எதிர்த்துள்ள இந்தியா—இலங்கை ஒப்பந்தத்துக்கு!

*** லாவண்யா ப்ரியன், சென்னை.**

? இறுதி மூச்சு அடங்கும் வரை தமிழ் இலக்கியத்துக்குப் பாடுபட்ட க. நா. சுப்பிரமணியம் பற்றி?

! இறுதி மூச்சு அடங்கும் வரை அவர் அமரர் 'கல்கி'யின் எழுத்துக்களைச் சாடினார்; தரமற்றதென வாதாடினார் என்பதையும் குறிப்பிட வேண்டும். ஒரு 'அன் பாபுலர்' நிலையை மேற்கொண்டு அதன் மூலமே 'பாபுலர்' ஆனவர் க. நா. சு. இதனால் அவருடைய பன்மொழிப் புலமையையோ இலக்கிய அறிவின் வீச்சையோ ஆழத்தையோ நாம் குறைத்து மதிப்பிட்டு விடுவதாகாது. அவரும் 'கல்கி' என்ற பத்திரிகை ஆசிரியரை, தேசபக்தரை, மனிதாபிமானியைக்குறைத்துமதிப்பிட்டுவிடவில்லை என்பதற்கு அவருடைய எழுத்துக்களிலேயே சான்றுகள் உள்ளன. 'கல்கி'யை எதிர்த்துக் கொண்டே கல்கியில் எழுத இடம் கேட்கும் துணிவு அவருக்கு இருந்தது. ஏராளமான சிறுகதைகளையும் தொடர் கட்டுரைகளையும் கல்கியில் எழுதியுள்ளார். கல்கி பத்திரிகையின் முதல் சந்தாதாரர்கள் விநாயகமும் க. நா. சுப்பிரமணியமும்! பிள்ளையாரும் முருகனுமே வந்து சந்தா செலுத்தியது போல் தாம் மகிழ்வதாகக் 'கல்கி' எழுதியிருக்கிறார்—முதல் கல்கி இதழில். ரத்தினச் சுருக்கமாக: க. நா. சு.—இலக்கிய உலகின் சுப்புடு!

*** எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.**

? 'மு. க. ஸ்டாலின் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட மாட்டார்' என்ற கலைஞரின் அறிவிப்பு பற்றி....?

ஆயிரம் விளக்கு * இலக்கிய 'சுப்புடு'!





*** ரூ. 20 பரிசு பெறுபவர்:**

ஜெ. பிஸ்மி,
1-15, பண்ணை தெரு,
கட்டி மேடு — 614 716.
திருத்துறைப்பூண்டி.

! 'போட்டியிட மாட்டார்' என்பது, 'போட்டியிடக் கூடாது என்பது என் கருத்து' என்பதாக மாறி, கடைசியில், 'இளைஞர் அணி வற்புறுத்தலுக்கு இணங்க போட்டியிடுகிறார்' என்பதாக முடிந்துவிட்டது. 'அடிக்கிற மாதிரி அடிக்கிறேன்; அழுகிற மாதிரி அழு' கதைதான்! கட்சிக்குள் விரிசல்கள் பிளவாகாமல் காக்கும் முயற்சி.

*** எஸ். பேபி காயத்ரி, விருத்தாசலம்.**

? சோனியாவை கஸ்தூரிபா காந்தியின் உண்மையான வாரிசு என்று சில இ. காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்களே?

! அவர் கஸ்தூரிபாவின் மெய்யான வாரிசு இல்லை என்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு இவர்கள் ஹிட்லரின் பிரசார மந்திரி கோயபெல்ஸின் உண்மையான வாரிசுகள் என்பதும் நிச்சயம்!

*** கோ. நாராயணன், ஆம்பூர்.**

? மத்திய கண்காணிப்புக் கமிஷன் லோன் மேளாக்களைச் சாடியுள்ளதே?

! பல காலமாக எதிர்க்கட்சிகளும் பொருளாதார நிபுணர்களும்மட்டுமின்றிக் கொஞ்சமேனும் புத்திசாலித்தனம் உள்ளவர்கள் அனைவருமே கூறி வந்துள்ளதுதான். இப்போது அதிகாரபூர்வமான ஒரு தீர்ப்பு வந்துள்ளது எனலாம். இனியேனும் மத்திய அரசு திருந்தினால் நல்லது. நாய் வால் நிமிருமா?

*** அமிர்தா பாலசுப்பிரமணியன், சேலம்**

? கேஹர் சிங் விஷயத்தில் ஆர். வி. சரியாக நடந்து கொள்ளவில்லை என்பது போல் உச்ச நீதி மன்றம் கூறியுள்ளதே?

! நீதிபதிகள் சட்டத்தையும் சாட்சியங்களையும் வைத்துத் தீர்ப்புச் சொல்கிறார்கள். ஜனாதிபதியிடம் கருணை மனு செய்து கொள்வது, அவர் நீதிபதிகளின் தீர்ப்பை ஆமோதித்து, அதில் தலையிட அவசியமில்லை என்று சொல்வதற்காக அல்ல. சட்டம்—சாட்சியங்களுக்கு அப்பாற்பட்டு, மனிதாபிமான நோக்கில் தாம் செயல்படப் போதிய காரணம் இருக்கிறதா என்று அவர் பார்க்க வேண்டும். இதைத்தான் உச்ச நீதி மன்றம் எடுத்துக் காட்டியுள்ளது.



° செம்மங்குடிக்கு சொர்ண கங்கணம்

கலை விழாவில் சில அற்புதங்கள்



° ரிக்கார்டர் — புதிய சிந்தனை

மிருதங்க வித்வான் தனி ஆவர்த்தனம் வாசிக்கிறார் என்றாலே இடைவேளை போல் கருதி எழுந்து போய்விடும் ரசிகர்களைத்தான் நாம் சாதாரணமாகப் பார்க்கிறோம். ஆனால், நாலு தனி ஆவர்த்தனங்களைச் சேர்ந்த மாதிரி இருந்து கேட்டு அவர்கள் ரசித்த அதிசயம் அண்மையில் நடந்தது. அந்தச் சாதனையைநிகழ்த்தியவர் — நிகழ்த்தக் கூடியவர் — வேறு யார், உமையாள்புரம் சிவராமன்தான்!

ராகங்களுக்கு பாவம் உண்டு என்பது நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கும் விஷயம். ஆனால் தாளங்களுக்குக் கூட அத்தகைய ரசங்கள் உண்டு என்பதைச் சில பழைய ஏடுகளைப் படித்துத் தெரிந்து கொண்டார் உமையாள்புரம் சிவராமன். தவிர, ஒவ்வொரு தாளத்துக்கும் ஓர் அதிதேவதை இருப்பதையும், ஒவ்வொரு தாளமும் ஒரு தெய்வத்தை வழிபடுவதையும் கண்டறிந்தார். பழைய ஏடுகள் விவரிக்கும் இந்த அடிப்படையில் ஒரு நிகழ்ச்சியைத் தயாரித்து அளித்தார்.

உதாரணமாக ஆதி தாளத்துக்கு அதிதேவதை பரமசிவன். அது வழிபடுவது தேவி வாராஹியை. அதன் ரசபாவம் வீரம். இதற்கேற்ப அடாணா ராகத்தை எடுத்துக் கொண்டு பரமசிவனைத் துதிக்கும் ஒரு பல்லவியை அமைத்தார் சிவராமன். இதனைப் பாடகர் பாடி முடித்ததும் சிவராமனின் தனி ஆவர்த்தனம். இவ்வாறே தொடர்ந்து மேலும் மூன்று தாளங்களுக்கு மூன்று ராகம் — பல்லவி — தனி என்று நிகழ்ச்சி தொடர்ந்தது.


ராகம் — பல்லவிக்கு வாய்ப் பாட்டு, வீணை, வயலின், குழல் என்று நான்கு கலைஞர்கள் பூரண ஒத்துழைப்புத் தந்தனர்.

ஓவியர் எஸ். ராஜத்தின் தெய்வப் படங்கள் ஸ்லைடுகளாகத் திரையிடப்பட்டன.



° அகாடமி விழாவில் ஆளுநர், வாசு, விகவா.

வ. வே. சு. வின் விளக்கவுரைகள் சுருக்கமாக ஆனால் மிக ரசமாக அமைந்திருந்தன. சிவராமனின் நான்கு குருநாதர்களுக்குச் சமர்ப்பணமான இந்த நிகழ்ச்சி, காஸெட்



அற்புத உணர்ச்சி — சிவராமன்

டாகவும் பதிவாகி விற்பனைக்கு வந்திருக்கிறது. காஸெட்டை வெளியிட்ட நீதிபதி மோகன், தாம் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி பொறுப்பேற்ற பின் கலந்து கொள்ளும் முதல் நிகழ்ச்சி, தமது வாழ்நாளில் அனுபவித்த, அனுபவிக்கப்போகிற நிகழ்ச்சிகளுள் முதல்தரமான நிகழ்ச்சியாக அமைந்து விட்டதாகப் பெருமைப்பட்டார். பாலக்காடு மணி ஐயர் டிரஸ்ட் சார்பில் அரங்கேறிய இந்நிகழ்ச்சியில் வீரம், கருணை, ஹாஸ்யம் போன்ற ரசங்களை அன்று சிவராமன் மிருதங்கத்தில் வாசித்துக் காட்டினாலும் இதற்கெல்லாம் மேலாகவும் ஓர் உணர்வு ரசிகர்களை ஆக்கிரமித்திருந்தது. அது, அற்புத உணர்ச்சி! அற்புத நிகழ்ச்சி!

இந்த சீசனில் இன்னொரு அற்புதத்தைத் தரிசித்தோம் என்றால் அது எண்பத்தோரு வயது செம்மங்குடியின் கச்சேரி. வயதை மறந்து அவர் முயற்சி எடுத்துக் கொண்டு ஈடுபாட்டுடன் பாடி ரசிகர்களை மகிழ்விப்பதில் வெற்றி கண்டதை என்னவென்று சொல்ல!

எந்த நிகழ்ச்சியையுமே மனத்தில் நிலைக்கும்படி செய்துவிடுகிற கிருஷ்ண கான சபை காரியதரிசி யக்ஞராமன், செம்மங்குடியின் சதாபிஷேக விழாவையும், மறக்க முடியாதபடி நடத்திக் காட்டிவிட்டார். யானையை வாசலில் நிறுத்தி வரவேற்புத் தந்ததில் தொடங்கி, செம்மங்குடியின் கரத்துக்குச் சொர்ண கங்கணம் போட்டது வரை எல்லாம் சிறப்பாக நடந்தன. சிறப்பு விருந்தினர் திருவிதாங்கூர் மகாராணியின் மலையாளத் தொனியுடன் கூடிய மழலைத் தமிழ் என்றும் இதயத்தில் ஒலிக்கும்.

மூன்று தலைமுறை ரசிகர்களைப் பெற்றவர்; மூன்று தலைமுறையைச் சேர்ந்த சிறந்த வித்வான்கள் பக்கவாத்தியம் வாசிக்கப் பாடியிருப்பவர்; கணக்கு வழக்கில் அதிகம் இறங்காமல் சர்வலகு சுவரப் பிரஸ்தாரங்களைச் சரம் சரமாகத் தொடுத்து வண்ணக் கோலம் காட்டி மகிழ்விப்பவர்; மிகச் சிறந்த குருக்களைப் பெற்றுப் பயனடைந்தவர்; சிறந்த சிஷ்ய பரம்பரையை உருவாக்கியவர்; வாக்கேயக்காரர்களின் கிருதிகளையெல்லாம் இப்படி இப்படிப் பாட வேண்டும் என்று வகைப்படுத்தி வழிகாட்டியவர் என்று செம்மங்குடியின் தனித் தன்மைகளை மிக அழகாகப் பட்டியலிட்டுக் காட்டினார் லால்குடி.

செம்மங்குடி, கச்சேரியின் போது கரகரப்பிரியாவை ஆரம்பித்துவிட்டு, ''சந்தானம் வேறு சொல்லியிருக்கிறான்'' என்று விழாவில் பேசப்பட்டதை நினைவு கூர்ந்தார்! மகாராஜபுரம் சந்தானம் கூறியது(பாடியது): ''கரகரப்பிரியாவைத் தமதாக்கிக் கொண்டவர்!''

இவ்வாண்டு கலைவிழாவில் மூன்றாவது அற்புதம் கிருஷ்ண கான சபாவில் கிரீஷ் கார்னாடும் சரி, அகாடமியில் இவ்வாண்டு சங்கீத கலாநிதியும் சரி, சினிமா, டி.வி., வீடியோ போன்றவை கர்நாடக இசையையும் நடனம், நாடகம் போன்ற கலைகளையும் அழிக்க வந்திருப்பதாகக் கருதாமல், அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேற வழி காண வேண்டும் என்று உணர்த்தியதுதான். இதுவரை இவை பற்றி ஒரு குரல் அழுவதே காரியமாக இருந்து வந்திருக்கும் போது, கிரீஷ், விசுவநாதன் ஆகியோரின் கருத்துக்கள் வித்தியாசமாகவும் வரவேற்கத் தக்கவையாகவும் இருந்தன.

விசுவநாதன் இன்னும் ஒருபடி மேலே போய், சினிமாத் துறையில் உள்ளவர்களுடன் தொடர்பை வளர்த்துக் கொண்டு, சினிமாவில் மீண்டும் கர்நாடக இசை சிறப்பிடம் பெற முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றார். வாஸ்தவமான பேச்சு.

சினிமாப் பாட்டுக்களால் கர்நாடக இசை நலிகிறது, நசிகிறது என்று புலம்புகிறவர்கள், கர்நாடக இசைக்கு முக்கியத்துவம் தந்து பாலசந்தர் வெற்றிப் படமெடுத்தாரே, அவரை அழைத்துப் பாராட்டினார்களா? எந்த ஒரு சபாவாவது மிருதங்கச் சக்கரவர்த்திக்காக யாரேனும் ஒருவரைக் கௌரவித்ததா? எந்த ஓர் இசைக் கலைஞராவது சங்கராபரணம் படத்துடன் தொடர்பு கொண்ட யாரேனும் ஒருவருக்கு ஒரு மலர் மாலையாவது சூட்டி மகிழ்ந்திருப்பாரா என்று கேட்கத்தான் தோன்றுகிறது.

— குட்டி கிருஷ்ணன்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka



பெறுவோர்க்கு ஆனந்தம்! அளிப்போர்க்கோ பேரானந்தம்!!

நாவிற்கினிய க்ரீமின் நற்சுவை நியூட்ரின் க்ரீம் பிஸ்கட்டுகளின் நடுவில். மிகச்சிறந்த மூலப்பொருட்களினாலான கரகரவென்றிருக்கும் இந்த பிஸ்கட்டின் சுவையே நிகரற்றது! எனவே வழங்குவதின் மகிழ்ச்சிக்கு நிகர் பெறுவதின் மகிழ்ச்சியே!

நியூட்ரின் க்ரீம் பிஸ்கட்டுகள். அளித்து அகமகிழவே!

nutrine
BISCUITS

SPEER 21 102 88 A Tam